# உள்ளுறை


| பொருள் | பக்கம் |
|---|---|
| அடைக்கலப்பத்து | 125 |
| அம்புலிப்பருவம் | 20 |
| அரும்பதவுரையும் குறிப்பும் | 131 |
| அரும்பொருள் அகராதி | iv |
| அலங்காரம் | 34 |
| ஊசல் | 87 |
| எச்சரிக்கை | 70 |
| காப்பு | 1 |
| காப்புப் பருவம் | 1 |
| இளிப்பத்து | 81 |
| குயிற்பத்து | 79 |
| சப்பாணிப் பருவம் | 11 |
| சிதம்பர சுவாமிகள் வரலாறு | xiv |
| சித்தொளி | 84 |
| சிறுதேர்ப் பருவம் | 30 |
| சிறுபறைப் பருவம் | 24 |

| பொருள் | பக்கம் |
|---|---|
| சிற்சுகம் | 90 |
| சிற்றிற் பருவம் | 27 |
| சின்னகட்டியம் I | 66 |
| ,, II | 69 |
| செங்கீரைப் பருவம் | 5 |
| தாலப் பருவம் | 8 |
| தாலாட்டு | 58 |
| திருப்பள்ளியெழுச்சி | 61 |
| திருவடிப்பற்று | 71 |
| பாட்டு முதற் குறிப்பு | 153 |
| பெரிய கட்டியம் I | 64 |
| ,, II | 67 |
| மாலை | 46 |
| முத்தப் பருவம் | 14 |
| வண்டுவிடுதூது | 82 |
| வருகைப் பருவம் | 17 |
| விடுபாட்டுகள் | 129 |

உ

முருகன் துணை

# அரும்பொருள் அகராதி

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

இந்த அகராதியில் இந்நூலிலுள்ள முக்கியமான சில பொருள்கள் தொகுக்கப்பெற்றுள்ளன. இதை அடிப்படையாகக்கொண்டு அறிஞர்கள் தத்தம் ஆராய்ச்சியிற் காணும் பிறவற்றையும் சேர்த்துக் கொள்க. எண்கள் - பாட்டெண்களே.

**அகத்திய முனிவர்க்கருளியது.** அங்கைத்தலத்திற் குண்டகழ் நீர் அடக்கு முனிவர் ஏறனையான் அகத்தின் ஞானவிளக்கேற்றும் அடிகேள் 83, ஆறங்கம் நான்மறை ஓதும் குறுமுனிக்கு ஆனமறைப் பேறு அங்குதவும் பெருமான் 672, கும்பமுனிக் கின்பமெல்லாம் கொள்ளைகொள்ளத் தந்தருள்நீ 501, கும்பமுனிக்குக் கொடுமலங்கள் மூன்றறுத்துச் செம்பதுமத்தாள் கொடுத்த தேசிகா 268, குறுமைசேர்வடிவு நெடுமை மாதவமும் கொண்டு தென்மலையுறை முனிக்கு மறைமுடிவிருந்த விளக்கத்தேற்றி மருளிருள் துமித்த சற்குரு 642, பெரிய தவத்துக் குறுமுனி யெம்பெருமான் செவிவாய் மடுத்தருந்தப் பிறங்குஞானமொழி நறவுபெய்யும் குமுதவாயான் 7, பொதியமலை உறையுமொரு குறுமுனிவன் இதயகுகை புதையும் இருளற ஒளிசெய்தீபா 381, பொதிய முனியகத்துப் பொங்கும் இருள்நீங்க விதியும் அறியா விளக்கேற்றும் தேசிகனே 323, பொருளைநதி......குறுமுனி அகத்தினுள் திமிரமற மறைமுடிவெனும் அருளொளிபரப்பு ஞானக்கொழுஞ்சுடர்வைத்த ஆறனனக் கொண்டலே 32, மலயநிலவிய முனிவன் இடர்உததி அகல அவன் மனநினைவு கொடுதழுவுகலனே 366, வடகலைக் கடலும் வருதிரைக் கடலும் உண்டிருந்த திடமுறு முனிவன் இடர்க்கடலகற்றச் சிற்சுகக்கடல் அளித்தவனே 596.

**அகப்பூசை.** ஐவாய் அவாவையும் உன் ஆரடிக்கே வைப்பது அலர், மெய்யான அன்பே வியன்சலமாம், பொய்யாத உன் போதத்தால் அறிவது ஒண்சுடராம், போரூரா, என்போதம் கைவேத்தியம் 261.



**அடியார் பெருமையும் வழிபாடும்.** அளகாபுரியன்ன...களித்தலினும் புளகாடவிமெழ மெய்ப்போரி வேலனைப்போற்றி உய்வார் வளவார் புறந்திண்ணை வைகுதல் ஏதமில் மாசுகமே 152, போரிக்குகன் அன்பரே என் கிளைஞர்களே 136, போரூர் முருகன் கழலிணைக்கே தொண்டுவந் தின்புறுவோர் பாததாமரைத்துள் என் சென்னி கொண்டுவந்தேன் மலம்விண்டேன் பரகதி கூடினனே 131, மதிகொண்ட...அச்சுகம் தனிலும் நதிகொண்ட பேரன்பினற் போரிவேலனை நண்ணிஇன்பக் கதிகொண்ட மேலவர் கால் தலை தாங்கல் கனசுகமே 151.

**அருணகிரிநாதர்.** அருணகிரிநாதன் மகிழ்ந் தோதுபாடல்...இருள்நைய மெய்யன்பர்குழாம் இசைந்துபாட 508, அருணகிரிநாதன்...கருணைபெற ஓதும் கவிமாலை 324, அருணகிரிப்பெயர் மெய்ஞ்ஞானநாதன் சொல்லால் வனைந்த...புகழ்மாலை 180, அருணையங்கிரிநாதன் தமிழ் மணமும்...கமழ்தரு போரூர்க் குமரனே 612, இயலிசை அருணகிரிப்பெயர்நாதன் இயம்புபாமாலை சேர்புயத்தாய் 579, சும்மா இருஎனநீ சொல்லப் பொருள்ஒன்றும் அம்மா அறிந்திலம்என்று அன்றுரைத்த எம்மான் அருணகிரிநாதன் அநுபவம் நாயேற்குக் கருணைபொழி போரூரா காட்டு 688, புனைபாமாலை தரித்தேத்தும் பொருவில் அருணகிரிநாதன் புகழ்வீட்டின்பம்பெற உதவும் போரூர் முருகப்பெருமானே 447.

**அருள் அனுபவங்கள்.** இந்நாளும் பண்ணிய கோகனகத்தச் சற்கு இனி எனைப்பண்ணக் கொடான் இது சத்தியமே 128, உவமையறு பவசலதி கடத்தி இம்மானிடப் பிறப்பில் உதிக்கச் செய்து நவமருவும் உனதுபதம் நாடவைத்தாய் 426, உள்ளக் கவலையெலாம் ஒழிந்தேன் ஒழியாதுசெய்யும் கள்ளக்கருமங்கள் யாவும் விண்டேன் கலைவாணியுடன் வள்ளக்கமல மலர்மாது தந்தருள் வாழ்வடைந்தேன் தெள்ளத் தெளிந்தனன் போரூர் முருகனைச் சேவைசெய்தே 153, எண்ணிய எண்ணியவாறே சிறியனுக்கு ஈந்தருளும் புண்ணியனே 199, களங்கமெலாம் அற்றேன் கதிபுகுந்தேன் நாயேன் உளங்குளிர ஆனந்தம் உண்டேன் வளங்களெல்லாம் உற்றேன் 305, குழவி அழுதகுரல் கேட்ட தாய்...நாயேன் இடர்களைந்து நல்லருள் ஊட்டும் போரூர்ச் சேயே 239, கொலையாதி செய்தவராயினும்...வடிவேலனை வந்து வாழ்த்தினரேல் தொலையா மெய்ஞ்ஞானம் அடைவார்முன் மேவும்துயர் இலரே 165, சமராபுரி மாமயிலோன்...தாளையும் தோளையும் போற்றுவையேல் உன்னிய

யாவும் உறும் 132, சிறுகுழவி...அறிவிலியேன் காத்திடு எனு
திருக்கவும் காத்தளிப்பது உனதருட்கே உண்டாம் 423, தரும
வய்த்தியன்...சுருதிகுரு சுவானுபவமாய் அடியேன் மலம்தவிர்த்
தும் 424, நதியினது இருபாற் கரைகளில் திரிந்து நடைதளர்ந்து
உழன்றிடு பசுப்போல் மதிமருண்டு உழன்ற சிறியனை அழைத்து
உன் மலர்ப்பதத்து இருத்தி ஆண்டு அளித்தோய் 602, நோவ உரை
யான் எம்மை நோவக்கண் பார்த்திடான் சாவனையான் தளர
விடான்...போரூரன் 283, பித்தனுக்கு ஒருவன் மருந்தினை அளித்
துப் பிறங்குணர்வு அளிக்குதல்போலும் நித்தம் என் மனத்தைத்
திருத்தி ஆண்டு அளித்த நினது அருள் 587, போரி கைகூப்பின
ரைப் பொருகோட்டு எருமையன் கண்டாலும் அஞ்சிப்புறம் செல்
லுமே 177, போரிக்குகன் இருதாள் கண்டாலும் இன்பக்கடல்
வந்தோக்கும் கருத்தினையே 130, போரிப்பிரான் எம்பிழை
பொறுத்தாலன்ன பூதலத்தே யார் இப்படிப் பொறுப்பார் சொல்க
168, போரியங்காங்கெயன்போல் திரும்பாச் சுகம்தருவீடு ஈவதற்
கும்...தேவர் பிறர்இலை யென்றுஇரும் பாற்கடல்துயின்றோன் நெய்
யின் ஊடு கைஇட்டனனே 159, போரிவரதன் தண்டைநாதங்கள்
யோகியர் யோகினில் காண்குறு நாதங்களே 148, போரூர்
இருந்து...முருகா என்று செப்பினன்...தீவினை யாவும் தணந்த
னவே 154, போரூர்க் குகன்பதம் சூடும் சென்னிக்கு இல்லை பிர
மன் துயருறக்கீறும் எழுத்துக்களே 143, போரூர் முருகன் நம்
தீது அகற்றிப் பேருக்கருணை செய்தே நெஞ்சமே தரும் பேரின்
பமே 141, போரூர் முருகன் அருள் எனக்குச் சீரும் குணமும் மரு
வும் தவமும் நற்செல்வமுமே 176, முத்துச்சிவிகையராய்...அரியா
தனத்தராய் ஆளுவர் பூம்போரூர்ப் பிரியாதான் நீறணிந்தபேர் 249,
முருகா எனஉனை ஓதும் தவத்தினர் மூதுலகில் அருகாத செல்வம்
அடைவார் வியாதியடைந்து நையார் ஒருகாலமும் துன்பம் எய்தார்
பரகதி உற்றிடுவார் பொருகாலன் நாடுபுகார் சமராபுரிப் புண்ணி
யனே 665.

**ஆட்டு வாகனத்தின் சிறப்பு.** முகடுஇடித்துச் சக்ர
வாளத்தை முட்டி வெம்மூரி எட்டுப் பகடுகுத்திக் கனல்சிந்திடப்
பார்த்துப் பரவை எல்லாம் அகடுறத் தேக்கிவிடுத்து உறத்தாவி
அரைக்கணம்போய்க் ககனமுற்றும்வரும் போரூரன் ஏறும் கன
தகரே 192.

**ஆறு எழுத்து.** போரூர்த் தனிமுதலே நாயேன் பிழைக்கின்ற
ஆறு நீபேசு 236, குமராநம என்று கூறினோர் ஓர்கால் அமராவதி



ஆள்வரன்றி, யமராசன் கைபுகுதார் போரூரன்கால் புகுவார்தாய்
உதரப்பை புகுதார் சேரார்பயம் 251.

**ஆறுபடைவீடு.** திருப்பரங்குன்று ஆவினன்குடி இரும்
பொழில் திருவேரகம் ஈறில் சீரலைவாய் விளங்கு பழமுதிர்சோலை
என்னு மறைபுகழ் பதிதொறும் கற்குவடுதொறும்......உறைகட
வுளே 9, அமரும் பழனிமலைக்கான மணிவிளக்கோ, சீரலைவாய்
முத்தோ, திருப்பரங்குன்றத்தரசோ, ஏரகத்தில் என்றும் இருந்த
பெருவாழ்வோ, பழமுதிர்சோலைப் பரனோ, குறிஞ்சிக்கிழவன் என
நல்லோர் கிளக்கும் பெருமானோ 330-332.

**ஆறுமுகம்.** ஆறு சமயக் கடவுள் வேறுவேறு இன்றி யான்
ஒருவனே அங்கங்கிருந்து அன்பர்க்கு முத்தி தருவித்து என்று
யாவர்க்கும் அறிவித்த வதனமணி 74, ஆறு சமயரும் தம்மில் ஒவ்
வாது அங்கு அலைவதென்னே...பேறுதரும் தெய்வம் யாவைக்கும்
யான் பெரும்தேவன் என்றே வீறுமுகம்கொண்டு போரூர் முருகன்
விளக்கியதே 157.

**உருத்திராக்கம்.** திரிபுரம் செய்குறை அறையக்கேட்டு முக்
கண்வழிக் கரியகளச் செம்புயல் கருணைபொழியப் பெருகும் கடற்
பிறந்து கருதும் அடியார் பவக்கடலைக் கடத்தும் மணி 7, சோதி
நயனத் திருமணி 84.

**ஐந்தெழுத்து.** அஞ்சக்கரப் பாத்தொட்டில் 13, கருதரிய பல
உயிர்கள் பந்தனைக் கார்க்கடல்கரை இவரவருகலனே, அன்பர் உட்
காட்சியை, அருமறையும் அறிவரிய அம்சுகப்பேற்றினை, அரிய
சிவன் உரியபெயர் ஐந்தினைப் போற்றுதும் 8, விதையாய் இருக்கும்
ஐந்தெழுத்தும் 84.

**ஐந்தொழில்.** ஓர்வரிதாம் உயிரியாவையும் நேர்வினை ஒத்து
மலப் பகைபோய் ஒண்சுகம் மேவிட ஐந்தொழில் தந்திடும்...சதா
சிவமே 3, பிறப்பறு வீட்டுற்பவம் எனக்கருளிப், பிறங்கு சிற்சுக
அமிர்து அருத்தி, ஒறுக்கும் என்போதம் அனைத்தையும் அறுத்து,
இங்கு உலகியல் உணர்வெலாம் மறைத்து, விறற்றகும் உனது திரு
வடி விளக்கி, மேன்மை ஐந்தொழில் இவண்புரிவாய் 637.

**ஞானசம்பந்தரும் முருகனும்.** அமணர்கள் பிதற்று கலையலை
கடல்முழக்கம்அற, அருமறை முழக்க, முறையே இரு மதுரையில்
பெரிய நதிவிடு திருப்பதிகம் எதிர்செலவிடுத்த பெருமான் 81, அர
னொடு வந்து அம்மை அளித்த வள்ளப்பாலைப் புரைதீர உண்ட

வரைப் போதுமுறக் கண்டானே, பொற்குளம் பொற்சின்னம் பொற்பார் சிவிகையொடு நற்றாளப்பந்தரையும் நம்பர்கையில் பெற்றானே, மதுரைச் சமணமதகரிகள் எல்லாம் சிதறத்தூர்ந்த சிவசமய கோளரியோ, மயிலைநகர் தன்னில் வன்னியடும் என்பைக்குயிலை நிகரும் மொழிக்கோதையாச் செய்தானே, ஆச்சாபுரத்தில் அனந்தம் உயிரை எல்லாம் பேச்சோடு உளம்கடந்த பேரின்பம் வைத்தானே 337-341, எண்ணற்கரிய சமணக் களை களைந்து...சிவானந்தபோகம் விளைவிக்கும் நல்உழவன் 183, கனவில் அடுமகளை ஒரு பதிகம் அதில்வர அருள்செய் கவுணியர்கள் குலதிலக நிதி 367, காழியிலே வந்து கணக்கிலாச் சீவரை நீடூழி இன்பத்து உய்த்த ஒருவன் 206, கூடலில் செழியன் அழல்கூன் அறப்புரியும் இறை 40, தமிழ்க்காழி மேவி எட்டுணையும் அறிவரும் அனந்தசீவரை வதுவையென்ற பெயரிட்டு அழைத்து அங்கு இரும்புஉண்ட நீரில் திரும்பாத வீடுதரும் இனிய கவுணியர் விளக்கு 75, திருநீலகண்டம் வெம்தீவினை தீண்டப்பெறு எனவே கருநீலகண்டனைப் பாடி அடியரைக் காத்தவன் 161, தீவமின் அங்கம்பாவையின் அங்கம்செயும் நீதன் 715, போரூரன் சம்பந்த நாமம்கொண்டே நூலாம் இடை மயிலாக்கினன் என்பை கொடியினிலே 181.

**திருநீறு.** ஆதிபகவன் ஞானவடிவழலில் பூத்து நித்தியமாய், அணிந்தோர் தமக்கு வசிகரமாய், அருந்தினோர்கட்கு ஆரமுதாய், நீதிஅறியும் பசுமலத்தை நீக்கும் ஒரு நற்குறிகாட்டி நிகழ்பேரின்பக் கடல்ஊட்டி நின்றபுகழ் வெண்திருநீறு 6, இருவேறுஅற்ற அத்துவித வெண்ணீறு 12, முத்துச்சிவிகையராய்...ஆளுவர் பூம்போரூர்ப் பிரியாதான் நீறணிந்தபேர் 249.

**நக்கீரர்.** அரியகீரன் தமிழ்மணமும்...கமழ்தரு போரூர்க் குமரனே 612, அருந்தமிழ் நூல் தெளிந்திடு நக்கீரன் பாடல் இருள் நைய மெய்யன்பர்குழாம் இசைந்துபாட 508, அருந்தமிழ்நூற்கீரன் கருணைபெற ஓதும் கவிமாலை 324, கலைகள் தெரிபலகை உறைபுலவன் உறுசிறையை விடுகதிர்கொள் அயில்உடைய தெய்வகுலனே 366, சொல்லால் புனைதொங்கல் நக்கீரன் சாத்தித் துனிகடந்தான் 107, பண்டைத்தமிழ் நக்கீரன் சிறைவிடு பண்பா 31, முத்தமிழ்க் கவிஞனைச் சிறைவிடுப்பன் 65.

**பணிபவர் மூவகையினர்.** மறுமைகுறித்த பயத்தால் பணிபவர் மத்திமரே, சிறுமைகுறித்துப் பணிவார் அதமர்கள், செப்பும் இந்த உறுமை குறித்திலது அன்பாய்ப் பணிபவர் உத்தமரே 662.



**பலவகைக் குறிப்புக்கள்.** கார்த்திகைப் பெண்கள் பாலூட்டியது 8, 44, 62, 317, குண்டலி 1, சத்திகள் ஐவர் 1, 12, 13 சரஸ்வதி 10 சூரசங்காரம் 184 சேவல் 170, 269 சைவசித்தாந்த சாத்திரக் கருத்துக்கள் 4, 12, 13, 15, 24, 35, 36, 57, 67, 84, 86, 95, 96, 420, 447, 451, 621-630, 641 தணிகை 51, 85, 330, 542, 558 தத்துவமசி மகாவாக்கியம் 36 தக்ஷ யாகம் 66 தெய்வயானையம்மையார் 93, 104, 447, 671 தொண்டைநாட்டு வர்ணனை 19, 20, 21, 49, 50, 88-91 நடராசர் திருநடன வர்ணனை 73 நவவீரர்கள் 322, 355, 364, 392, 406, 461, 529 பராசக்தி 4, 12 பல்லாண்டு 72 பழனி 330 பிழை பொறுத்தல் 208, 236, 252, 334, 429, 489, 493, 575, 674, 697-699 பெண்களைத் தாயாகக் காணவேண்டும் 146 போரூர் வர்ணனை 10, 22, 28, 29, 40, 46-50, 52, 53, 79, 98-100, 115-117, 140-145, 149, 250, 717, 718 மழைதருவிக்கும் பாடல்கள் 610-619 யோக நுட்பங்கள் 24, 69 வீரவாகுதேவர் 72.

**பொய்யாமொழிப் புலவர்.** வேலைக்கலை பயின்ற மேதகு பொய்யாமொழிக்குப் பாலைக்கடைஇதென்று பகர்ந்த பெரும்பாவலனே 328.

**மயில் சிறப்பு.** அளகுபல முட்டைதன் சிறைகொண்டு அணைக்குமாறு...வளமையுடன் நடனமிடு மாயூர 56, பாவை முகடெழும் உதயகிரண பரிதியின் நடனபரதமயில் 360, மணிகொண்ட சேடன்படர் முடிதூக்கி...மயிலே 189, மூலநிலத்தில் அதோமுகமாய்...கதிர்மதிபோற் காட்டும் ஒளியாய் இவை யாவும் கடந்தாங்கு அழிவில் பேரொளியாய்ச் சாலவிளங்கும் விந்து எனும் தடமாமயில், 24, வடவரை ஓராயிரம் குழைதோறும்...படமுடிதாழ எடுத்து உதறிப் பரதத்தின் நடித்திடும் ஓர் பருமயில் 101, வாரிசுழல...... போரிவேலன் சிறைமயிலே 190.

**முருக அரிவை கைபெற்றது.** அரிவை முருகா என்றழைக்கு முன்னேவந்து கரம் உதவிகின்ற கருணைப்பெருந்தேவோ 326, எஞ்சாத கடல் அழித்து அரிவை முருகா எனஇசைக்க அருள்வாரி தருவன் 65, நிலைமை நெறியுளதெரிவை முருக என உரைதருமுன் நிலவி அவள் கரம் உதவவலனே 366.

**முருகன் உபதேசங்கள்:** உலகினொடு சரஅசரம் எவையுமாய்...பரகதியும் இதுவேகாண் என்று 95, உலகு உயிர் பரம் உயர் சிவம் இவை யாவையும் ஒன்றாக நிலவிய சொரூபம் அலதுஇலை

யென்று 521, எங்கும் என் சொரூப சச்சிதாநந்த இலகொளி இருந்திடும் அதனுள் தங்குபல் பொருள்கள்...என்றே 568, ஐந்தொழிலும் எனது இவைகளாகும் சிருட்டி முதலான...நடத்திடும் ஒருவன் நான் இவை பகுத்து உன் சுதந்திரம் அறச் சிந்தனைசெய் பந்தம் அறும் என்று 15, ஒரு பொருளிடத்தினில் சச்சிதாநந்தமுடன் உருவநாமமும் உள்ளதென்றுரைதந்து...பிரமமே நிகழும் மற்று ஒரு பொருளும் எதிரிட்டு இலங்காதென 96, சிற்றறிவொன்று...பேரறிவூடே கலந்திடுமாயம் இதே பற்றறுமுத்தி என்றான் 106, மன்னராவார் உறுசுகமும் வானோர் மகிழ்ந்து பெறுசுகமும் மணிப் பைந்நாகத்தவர் சுகமும் மற்றையோர்கள் அடைசுகமும் பன்னுமிடத்தில் சிவத்தெழுந்த பரமாநந்தலேசம் என 448, மன்னுபிரமத்தில்வாழ் அபினாசத்தியிடத்துன்னும் பினாசத்தி உண்டதனில் துன்னும் உலகு உண்டு அதனை உளம்பிடிக்கும் என்றான் 689 (உபதேசப் பத்து எனத்தகும் 621-630ம் பாடல்களில் பல உபதேசங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன).

**முருகன் சிறப்பு.** அகமுகமாய் ஒரு சுழிமுனை சேர்பவர் அங்கேயும் தேவே 17, அகம்புறத்தெக்காலும் மிக்க ஒளியான்... அனைவர்க்கும்...தண்ணளியினன் 63, அடியார் இதயதாமரையுள் அரும்பி மாறாப்பரிமளம் 87, அமரருக்கும் முனிவருக்கும் அடியவர்க்கும் அமுதம் 51, அருள் தந்தை 117, அறுதிவருமுத்தன் 45, அனையும் தாதையும் ஆரியனும் எனையாண்ட தெய்வமும்நீ 484, ஆரணன் நாரணன் இன்னமும் காண்டற்கரிய பரிபூரணம் தோன்றிய பூரணன் 178, ஆருயிர்க்கோர் சாட்சி 290, ஆறு சமயக் கடவுள் வேறுவேறின்றி யான்ஒருவனே...அறிவித்த வதனமணி 74, ஆறு முகப்பெருமான் ஆதிபுதல்வன் 703, இயலின் மதுரம் முழுதும் அறியும் இசைகொள் பெரிய புலவன் 60, இரவுபகல் அனுதினமும் உயர்தயவின் நினையும் அவர் இதயமலர் அதனில் உறும் மருவே உரு எனவும் அரு எனவும் ஒளி எனவும் வெளி எனவும் உனல்அரிய பொருள் உதவுகுருவே 380, உரையற்று உணர்வற்று உயர்இன்பமாகிய உள்ஒளியே 118, உள்ளத்தே தித்திக்கும் தேன் அளிக்கும் செட்டி 281, எண்குணமலை 471, (முழுதுணர்தல் முதலாய) எண்குண மொய்த்த பஞ்சரம் 485, எண்ணிலிதேவர் துயர்களைந்த வீரம்சிறந்த...முருகன் 176, எல்லார்க்கும் மேலவன்...நல்லார்க்கு நல்லவன் 107, எல்லாப் பொருள்களும் தானாகி...நல்லார்க்கு இனிய குகன் 198, என் குலதேவதை 142, ஓம் எனும் பதத்தின் அருத்தம் 573, ஓம்எனும் வித்துள்ளே உதித்ததரு 500, சச்சித்தாய்



உச்சியை மோந்து கண்ணோடு அணைக்கும் திருத்தாளா 444, கடவுளர்எலாம் கைம்மலர் குவிக்க இருகால்மலர் படைத்த ஒரு கந்தன் 9, கட்டழகன் 216, களவுஅறு ஞானிகள் உள மலர்மீதில் எழுந்து ஊறும்தேன் 17, கேட்டதெல்லாம் பாலிக்கும் கேடிலாத் தாதாவும் வீட்டுநெறிகாட்டும் வியன்குருவும் 231, கொங்கணர் ஆரியர்...அருக்கர் அனைவருமே தங்கள் தங்கட்கிறைநீ என்பர் 110, கொத்தறு முத்தமிழ்மெத்த வளர்த்தவ 77-80, சண்முக சச்சிதாநந்த...குகனே 531, சமயாதி ஆறும் உடையோர்க்கு வீடுதரும் பெருமான் 166, சிவசமயநெறி ஒழுகுதிகழ் அடியர்பரவி அடைகதியே 367, சின்மயரூபன் 3, சூர்வேட்டையாடும் சேவகப்பெருமாள் என் ஆவியுட்பெருமாள் 55, செகமுயிராம் பொய்ஞ்ஞானக் கூட்டத்துக்குட் புறனாகிய பூரணன் 162, சைவப்பயிரை வளர்க்கும் தண்மேகம் 104, தலைமையிற் குறையாத நிறைவா 376, தன்னைத் தலைவனை ஆராய்ந்து அடையும் தகைமை இன்புக்கு என் அப்பனாகிய போரூர்ச் செவ்வேள் 191, தாயாம் எனக்குரிய தாதையாம் சற்குருவாம் தேயாக் கருணைபொழி தெய்வமாம்......போரூர் இறை 230, நந்தாமணி விளக்கே...குகனே 537, நிருபாதிகனே சரண் என்றும் நிமலா குகனே சரணென்றும்...புகல்வாயே 470, பாலசமுத்திரமே 101, பிரணவப்பொருளே 580-589, புங்கவனே 187, புனிதஞானக் குரவன் 2, பூமேவுநாபனும் நான்முகத்தோனும் புரந்தரனும் தாம் மேவு வாழ்வும் அதிகாரமும் பெற...அவுணரை மாய்த்த குமரன் 103, பேரருள்நீர் பாய்ச்சிச் சைவப்பயிர் வளர்த்து நண்ணச் சிவாநந்தபோகம் விளைவிக்கும் நல்உழவன் 183, பொறையால் உயர்ந்த பெரியோர்கள் புந்திச்சுவையாம் செந்தேனே 443, மதிசூடும் பிரான் மகிழ்ந்து இன்புறவே திருகோட்டுபோதம் உரைசெய்த தேசிகன் 177, மலிபுவனமுழுவதும் கிடுகிடென கொடியில் வலம் வரு கந்தவேள் 52-57, மறைகள் பலகலைகள் பல லிபிகள் முதலிய உதவுவளர்சொரூப நிசப்ரணவ ஒளியே 361, மறைமுடி குலவிய பிரமரசம் 453, மறையின் சிரமெய்ப்பொருளான வள்ளல் 58, 59 மெய்வேடம் பூண்டவர்க்கு உள்ளும்புறனும் விளங்கும்பிரான் 179, மோனசுகம்தரு ஞானப்பிள்ளை 46, யாரினும் தூயவனை அன்னியம் இல்லாது எங்கும் நிறைஆரணனைப் பரிபூரணனை 463, வானவர் சேனாபதி 70, விடையுடையானும் கருடத்துவசனும் வெம்குலிசப் படையுடையானும் அனக்கொடியானும் பணிபெரியோய் 683, வேதாந்தச் சென்னிமிசை இருக்கும் தெய்வமே 687.

**மூர்த்திதலம் தீர்த்தம்.** தீர்த்தம் சிவாநந்தம் செய்ய தலம் ஓம் ஆகும் மூர்த்தி பரப்பிரமம் முத்திதரும் ர்த்த திருப்போரூர் உண்மை இதைத் தேர்ந்த பெரியோர் மருப்போதன் கைப்படார் வந்து 726, பேய்போம் துயரம்போம் பித்தம்போம் போகாத நோய் போம் மிடிபோம்...திருப்போரூரன் சந்நிதியைக் கண்டளவேதான் 250, போரூர் கைகூப்பிச் செழுங்கமலச் சரவணவாவியில் நீராடி... பாதம் பணிவோர்க்கு இனிமை கொடுக்கும் பிரான் 203.

**வள்ளியம்மையார் சிறப்பு.** கழைகள் குழுமியவரையில் எயினர்தரும் உழை 379, செந்தளிர்போல் மெய்வைத்த வள்ளிக்கொடி 104, செழுங்கொடிக்கால் கவண் உற்ற கைக்குறமான் 173, பொருசேல் இணைபோற் காதொன்று கண்ணினள் கானக்குறத்தி 682, மலைஅருவிதரும் அரவின்மணியை அனல்என வெருவு வனசரர்கள் தரும் அரிவை 385, மான்குட்டிறைச்சி செந்தேன் தோய்த்து அருந்தும் வனசரர்மான் கூன்கோட்டு இளம்பிறை நெற்றிக்கும் வேல்இணைக் கூர்விழிக்கும் கான்கூட்ட மாமலர்க் கூந்தற்கும் கொங்கைக்கும் காதல்கொண்டோன் 111.

**விண்ணப்பங்கள் சில.** அஞ்ஞானத்தால் அடியேன் பிழை செய்யினும் ஆரருள்சேர் மெய்ஞ்ஞானத்தாய் பொறுத்தாட்கொள்ள வேண்டும் 162, அருணகிரிநாதன் அனுபவம் நாயேற்குக் கருணை பொழி போரூரா காட்டு 688, ஆழி எனும் துன்பத்து இருந்தேனைத் தூக்கித்தென் போரூரா இன்பத்துள் வைப்பாய் இனி 206, உள்ளத்து அழுக்கினை எல்லாம் அகற்றி உனது பதவள்ளக் கமலத்துஎழு நறவானந்தவாரியிலே கள்ளச்சிறியனை வைத்து ஆளவேண்டும் 200, உனதுபதம் விரும்பாதேன் ஆயிடினும் நல்கவேண்டும் 429, கருக் கடல் நாயடியேன் புகுதாவகை காத்து முத்திப் பெருக்குறும் இன்பத்து இருத்துகண்டாய் 137, காலன் செங்கட் கடாவினில் ஏறியே கயிறுவீசிப் பிடியாமுன் எனைவேலும் செங்கையில் ஏந்தி மயில் மிசை விரைவில்வந்து உவந்து அஞ்சல் என்று ஆளுவாய் 491, ஒன்றினுக்கும் அஞ்சாதே வா என்றழைப்பாய் 302, நோய்உற்று அடராமல் நொந்துமனம் வாடாமல் பாயில் கிடவாமல் பாவியேன் காயத்தை ஓர்நொடிக்குள் நீக்கிஎனை ஒண்போரூர் ஐயாநின்சீர் அடிக்கீழ் வைப்பாய் தெரிந்து 296, மெய்யாம் நெறிக்கண் அடியேன் செலுத்த விலங்கிமிகு பொய்யாம் நெறிக்கண் எனைக்கொடுபோம் உளப்போர்க் களிற்றை ஐயா நினதுஅருளாம் கயிற்றால் பிணித்துஆன தண்டைச்செய்யாரும் தாள்கந்து சேர்ப்பாய் 196.



**விநாயகர் சிறப்பு.** அகரமும் உகரமும் மகரமும் ஆகித் திகழுறு பிரணவம் எழுசிறு களிறே 5, அருளே மதமெனக்காட்டி அடியர் அகத்திருந்த மருளே துடைத்த மதமாமுகத்தன் 653, ஆதரவாய் அடியவருக் கருள்சுரக்கும் ஐங்கரத்தோன் 422, இந்திரப் பெயருடையான் முதல்எவரும் செறிவளனுக்கு இடையூறுகள் வாராவகை எணிமுறபணி களிறு 412, கருணையே மதமாக் காட்டும்...திருக்குஞ்சரம் 307, சோமன்என நிலவுபொழி தவளயானைக் கடவுள் 13, திருப்போரூர் நிம்பத்தின் கீழ்இருந்து நேயர்க்கு வாழ்வுஅளிக்கும் கம்பக் கடமா களிறு 204, விண்டுவே முதலான அண்டர் மாமுனிவர் நரர்விக்கினம் அகற்றி ஆளும்...வேழமுகன் 1.

**வேல் சிறப்பு.** ஒளியால் கதிர் அவுணர் ஊன் அடலால் காலன் அளியால் குளிர்மதியே ஆகும் எளிதில் ஊனிதுரம்போய் மீளுதலால் சொல்மனமாம் போரூரில் வீரன்காத்து ஏந்தும்வேல் 275, குடமுழவு முரசதிர அலகைபசி கெடஅசுரர் குலமுழுதும் அடும்அயில் 388, பூதம் புலன் பொறிகள் கரணம் குணம் பகுதி புகலரு கலாதிசுத்தம் ஒருவில் இரு மாயையும் காணவரும் ஆணவப் பொங்கிருளும் ஓடுருவியே பேதம் களைந்து உயிர்ப்போதம் கலைந்துகலை பேசொணா நேர்மைவெளியாய்ப் பேராயிரம்கோடி சூரியரும் மட்கப் பிறங்கியெழு ஞானஒளியாய் ஏதம்கடந்து உட் புறம்பாகி வைகும் இன்பபரிபூரணமதாய் இலகு அருட் சத்தியே சத்தியாகக் கையில்எடுத்த ஞானச்சேவகா 57, போரி எங்கோன்படை வேல்துணை உண்டு எமக்கு ஒருநாளும் பயம் இல்லையே 124.

10. **சிறுதேர்ப் பருவம் :** சிறியதேர் உருட்டுவது. இது 4ஆம் ஆண்டில் நிகழ்வது.

**கட்டியம் :—** அரசன் திருவோலக்கத்தில் வீற்றிருக்கும்போது, அவ்வரசன் புகழை, அவையிலுள்ள முதியோர் கேட்டு மகிழ் கூரக் கட்டியங்காரன் புகழ்ந்து கூறும் கூற்று.

**எச்சரிக்கை :—** அரசன் திருவோலக்கத்திற்கு வருங்கால் அவ்வரசனை முன்னிலையாக்கி அவையிலுள்ள முதியோர்க்கு அவ்வரசன் வருகையை எச்சரித்தல்.

---

சமரபுரி மாநிம்பத் தண்ணிழற்பா லும்பல்
அமரர்தொழ இருந்த தன்றித்—திமிரமலம்
போக்கி யெமதுள் ளின்பப் பூரணமாய் எவ்விடத்தும்
தேக்கறிவு மாயிருந்த தே.

உலகமெலாம் ஈன்றஒருத்தி தனப்பா லுண்டு
இலகு கவிதை மழைஈசன்—நிலவு
புயமலைப்பாற் பெய்தசுகப் போரியில் வாழ்வானம்
புயமலர்த்தாள் என்முடிக்குப் போது.

உ

வேலுமயிலுந் துணை

திருப்போரூர்ச்

# சந்நிதிமுறை

---

## பிள்ளைத் தமிழ்

---

### வேம்படி விநாயகர்

1 அண்டகோ டிகளுடன் தந்தவுட லியாவையும் அரியமறை முதலகலையும் அக்கரமும் மெய்ப்பதமும் ஐங்கலையும் மந்திரமு மானபத கதியும்வாக்கும்
மண்டியுண் டாகவரு குண்டலியோ டைஞ்சத்தி மாமுக மெனப் படைத்த வள்ளிநா யகன்மீது பிள்ளையந் தமிழ்சொலஎன் மதியில்நின் றருள்புரியுமால்
பண்டைமா மலதிமிரம் விண்டுபோ கக்கிரண பானுகோ டிகளென்னவே பழஅடியா ரகமலம் அகலாது நின்றெளி பரப்பியா னந்தமுதவி
விண்டுவே முதலான அண்டர்மா முனிவர்நரர் விக்கின மகற்றியாளும் மேன்மைதரு போரூரில் நிம்பநீ ழற்குலவு வேழமுகன் இருசரணமே. க

---

## 1. காப்புப் பருவம்

### திருமால்

2 பூமேவு பொய்கைப் பொறிச்சிறகர் வண்டினம் பொங் கரின் விருந்தயர்தரும் போரூரின் முருகனைச் சீர்மேவு குமரனைப் புனிதஞா னக்குரவனைக்

## சிதம்பர சுவாமிகள் வரலாறு

திருப்போரூர்ச் சந்நிதிமுறை ஆசிரியராகிய சிதம்பர சுவாமிகள் 300 ஆண்டுகட்குமுன் மதுரை மாநகரிலே சங்கப்புலவர் வழிவந்த சைவர் குலத்திலே தோன்றி, நல்ல கல்வியில் மிக்காராய்க் கவிராசர் என்று அழைக்கப்பெற்று, விருத்தாசலத்தில் ஒரு ரெட்டியார் வீட்டில் அவர் மக்களுக்குக் கல்வி பயிற்றும் வேலையிலிருந்தார். அப்போது அங்குவந்த குமாரதேவர் இவர் கல்வித்திறனையும் பரிபக்குவத்தையும் அறிந்து, இவரைத் தமது குருவாகிய சாந்தலிங்க சுவாமிகளிடம் அழைத்துச்சென்று, இவரை ஏற்றருள வேண்டினர். சாந்தலிங்க முனிவர் இவருக்குபதேசித் தருள்புரியக் குமாரதேவருக்கே கட்டளையிட்டுத், தாம் அருளிய கொலைமறுத்தல் முதலிய நான்கு நூலுக்கும் கண்ணுடைய வள்ளலார் அருளிய ஒழிவிலொடுக்கத்துக்கும் உரைகாணுமாறு சிதம்பர கவிராசருக்கும் கட்டளையிட்டார். சிதம்பர கவிராசரும் குமாரதேவரிடம் உபதேசம்பெற்று ஐந்து உரைகளையும் இயற்றிச் சாந்தலிங்க முனிவர் திருவடியில் சமர்ப்பித்தனர். அவரும் திருக்கண்சாத்தி மகிழ்ந்தனர்.

பிறகு குமாரதேவர் சிதம்பர சுவாமிகளுக்குத் திருப்போரூரில் ஜீர்ணமான ஆலயத்தைப் புதுப்பிக்குமாறு கட்டளையிட்டனர். சிதம்பர சுவாமிகள் புறப்பட்டு வழியில் பொம்மைய பாளையத்தில் சிவஞானபாலைய சுவாமிகளோடு அளவளாவிக், கிளியனூரில் ஞானம்மையார் தந்த கூழமுதுண்டு, திருப்போரூர் சேர்ந்து, குமாரதேவர் அருளால் பழைய கோயிலின் அமைப்பைக் கண்டு, பல அற்புதங்களியற்றிப் பணியாளர்களை வசீகரம்செய்தும் பொருள் ஈட்டியும் திருப்பணியை முற்றுவித்தார். கிளியனூர் அம்மையார் உதவிய பொன் முருகன் கோயில் தூபிக்கலசத்துக்கு உபயோகமாயிற்று. போரூர் முருகன்மீது நெஞ்சு நெக்குருகப் பாடிய பனுவலே திருப்போரூர்ச் சந்நிதிமுறையாகும். இது திருவாசகம்போலவே, கல்நெஞ்சத்தையும் உருக்கும் பெரும் சக்தியுடையது.

திருப்போரூரின் வடபாலில் உள்ள கண்ணுவர்பேட்டையில் சுவாமிகள் திருமடம் கட்டிக், கோவூர் சிவசங்கர முதலியாரைத் தமது சீடனாக்கிக் கோயில் நிர்வாகத்தையும் மடத்து நிர்வாகத்தையும் அவரிடம் ஒப்புவித்து நிட்டைகூடி முருகன் திருவடிநீழலை வைகாசி விசாக நன்னாளிலே அடைந்தனர்.

## ஆண்பாற் பிள்ளைத்தமிழில் வரும் பருவம் பத்துக்கு விவரம்

காப்பு 2-ம் மாதம், செங்கீரை 5-ம் மாதம், தால் 7-ம் மாதம், சப்பாணி 9-ம் மாதம், முத்தம் 10-ம் மாதம், அம்புலி 11-ம் மாதம், வருகை 12-ம் மாதம், சிறுபறை 2-ம் வருஷம், சிற்றில் 3-ம் வருஷம், சிறுதேர் 4-ம் வருஷம்.

**குறிப்பு :—** **பிள்ளைத்தமிழ்** - பிள்ளைப்பருவமாவது நூலை இயற்றுபவர் வழிபடு தெய்வத்தைப் பிள்ளைப் பருவமாக்கி இரண்டாம் மாத முதல் 4-ஆம் ஆண்டுவரை அவ்வப்பருவத்து நிகழும் செயல்களின் ஏற்றங்களைப்பாடி மகிழ்வது. இது இருவகைப்படும் :—1 ஆண்பால் பிள்ளைத்தமிழ். 2 பெண்பால் பிள்ளைத்தமிழ். இந் நூலிலுள்ளது ஆண்பால் பிள்ளைத்தமிழ். இது 10 பாகுபாடுடையது :

1. **காப்பு :** பிள்ளையைக் காக்கவென ஏனைய தெய்வங்களை முதல் அழைத்துக் கூறுதல். இரண்டாம் மாதம் நிகழ்தல்.

2. **செங்கீரை :** செங்கீரை என்பது ஒருகால் முடக்கி ஒருகால் நிமிர்த்தி இரண்டு கைகளையும் நிலத்திலூன்றித் தலைநிமிர்த்து முகம் அசைய ஆடுதல். இது 5-ஆம் மாதம் நிகழ்வது.

3. **தாலப் பருவம் :** ( தாலம் - நாக்கு ) நாவை அசைத்தருளாய் என்று கூறும் பொருள்மேல் நின்றது. இது 7-ஆம் மாதம் நிகழ்வது.

4. **சப்பாணி :** ச - பாணி - கை சேர்த்துக் கொட்டுதல் எனும் பொருள் மேல் நிற்றலால் கை சேர்த்துக் கொட்டும் பருவம் என்பது. இது 9-ஆம் மாதம் நிகழ்வது.

5. **முத்தம் :—** முத்தந்தருகவென அழைப்பது. இது 10-ஆம் மாதம் நிகழ்வது.

6. **அம்புலிப் பருவம் :—** சந்திரனை வருகவென செவிலித்தாய் முதலியோர் அழைப்பது. இது 11-ஆம் மாதம் நிகழ்வது.

7. **வருகைப் பருவம் :** நற்றாய் முதலியோர் வருக என்றழைப்பது. இது 12-ஆம் மாதம் நிகழ்வது.

8. **சிறுபறைப் பருவம் :** சிறுபறை என்னும் வாத்தியத்தைக் கொட்டக் கற்றுத்தருவது. இது இரண்டாமாண்டில் நிகழ்வது.

9. **சிற்றில் பருவம் :—** சிறுமியர் சிறுவீடுகட்டியாடுவதைச் சிதைக்கும் பருவம். இது 3-ஆம் வருடத்தில் நிகழ்வது.

காமேவு கடவுட் பசுந்துணர் விரிந்துநறை கடிமணத்
தொடுபிலிற் றுங் கண்ணகல் நிழலரசு சசிகணவ னுக்குதவு
கந்தவேளைப் புரக்க

தூமேவு ஞானசத் திக்கடலின் மொண்டுசிற் சொலிதசத்
துவப்பொருப்பில் தோமற இவர்ந்துலக மெங்கும் பரந்
துயிர்த் தொகைவகைப் பயிர்கள் தழையத்

தேமேவு மதுரம் பழுத்தொழுகு மென்மொழித் திருமின்
கலந்துமிளிரச் செய்யபே ரருள்மாரி பொய்யாது பொழி
கின்ற செங்கட் கருங்கொண்டலே. ௧

### சதாசிவம்

3 காரென வாருயிர் மீதருளேபொழி கண்ணனை விண்ண
வனைக் கந்தனை யெந்தையை வந்தனை யன்பர் கடும்பகை
கொன்றவனைச்

சீர்சம ராபுரி யாளனை மாளுறு தேவர்ம ணாளனையோர்
சின்மய ரூபனை நன்மையெ லாமுறு சேயினை யருள்புரிக

ஓர்வரி தாமுயி ரியாவையும் நேர்வினை ஒத்து மலப்பகை
போய் ஒண்சுக மேவிட ஐந்தொழில் நந்திடும் உத்தம சிற்பர
மாய்ச்

சேருரு வாயரு வாயிரு வகையுஞ் செறிபொரு ளாய்நிறை
வாய்ச் செம்முகம் ஐந்தொடு செம்மையில் நின்றருள் செய்த சதா
சிவமே. ௨

### பராசத்தி

4 விடயவா வாரகஞ் சொருபவா வாரக மெனப்பகர் விதங்
களாகி விரிமலக் கங்குலுயிர் விடயஞா னத்தினொடு மிகுசொருப
ஞானத்தையுந்

தடையறா கச்செயத் தனுவாதி நாலையுந் தருமாயை யறிவினொடுந்
தண்ணருட் பேரறிவி னொடுமத் தடைவிடுந் தகுபரையை யஞ்சலிப்பாம்

அடலினொ டெழுமவுண ருடல்வேறு கூறுபட அலகைவே
தாளபூதம் ஆடப் பெருங்கூகை கூவப் பருந்துநிழல்
நீடச்சி வந்தவடிவேல்

நொடியிலே வியகுகனை நெடியமால் மருகனை நிகரில்போ
ரூர்முருகனை நுணியகூ ரறிவுகொடு கருதுவோ ரமுதமென
நுவலுமோ ரருள்புரியவே. ௩



### விநாயகர்

5 பகவதி கரவணை மிசைதுயில் பயிலும்
இகலறு குமரனை யினிதருள் புரிக
அகரமும் உகரமும் மகரமு மாகித்
திகழுறு பிரணவ மெழுசிறு களிறே. ௪

### திருநீறு

6 சோதி மகரக் குழைசெறிசுந் தரத்தோ ளீரா றுடை
யானைச் சுருதி யிரைக்குந் தண்டையந்தாள் துணையென்
முடியிற் பொறித்தானை

மாது வளருஞ் சமரபுரி வாழ்வை வானோர் சிகாமணியை
வடிவே லரசை மயிலரசை வந்து புறங்காத் தளித்திடுமால்

ஆதி பகவன் ஞானவடி வழலிற் பூத்து நித்தியமாய் அணிந்தோர்
தமக்கு வசிகரமாய் அருந்தி னோர்கட் காரமுதாய்

நீதி யழியும் பசுமலத்தை நீக்கு மொருநற் குறிகாட்டி நிகழ்பே ரின்பக்
கடலூட்டி நின்ற புகழ்வெண் டிருநீறே. ௫

### உருத்திராக்கம்

7 அரிய மனமும் அறிவரிதாய் அருவாய் நிறைவா யிருந்து
முனர் அமரர் திரிபு ரஞ்செய்குறை அறையக் கேட்டு
முக்கண்வழிக்

கரிய களச்செம் புயல்கருணை பொழியப் பெருகுங் கடற்பிறந்து நகரும்
அடியார் பவக்கடலைக் கடத்துந் தோணியைத் துதித்திடுவாம்

பெரிய தவத்துக் குறுமுனியெம் பெருமான் செவிவாய்
மடுத்தருந்தப் பிறங்கு ஞானமொழி நறவு பெய்யுங் குமுத
வாயானைத்

தெரியல் நறுமா முகைகுறமான் திளைக்கும் முலைக்கோ
டுழவலருந் திருமார் பகனைச் சமரபுரி சேயைப் புறங்காத்
தளித்திடவே. ௬

### பஞ்சாக்கரம்

8 கருதரிய பலவுயிர்கள் பந்தனைக் கார்க்கடற்
கரையிவர வருகலனை யன்பருட் காட்சியை
அருமறையும் அறிவரிய அஞ்சுகப் பேற்றினை
அரியசிவ னரியபெயர் ஐந்தினைப் போற்றுதுங்

குரவுகமழ் குறவனிதை கொள்கனைக் கார்த்திகை
குடமுலையின் அமுதகடல் உண்டகத் தேக்கனைத்
தருணகும ரனையினிய தண்டலைச் சீர்ப்பொலி
சமரபுரி தனில்நிலவு கந்தனைக் காக்கவே. எ

திருமகள்

9 பொற்குவடு பத்துநூ றிலகுமுடி தொறும்இரவி பூணெ
னக் கொணடுமதியம் பொழிநிலவு வெள்ளத்தின் மிசை
மிதந் தழகுசெறி புண்டரிகம் மண்டுபுயலை

அற்புதத் தொடுகொண்டு மிளிர அப் புயல்நடு அரும்பு
நால் வகைமலரொடும் அஞ்சோதி மிளமெலான் றிருந்தெனை
இருந்தோளிர் அணங்கினை நினைந்துதொழுவாம்

எற்செறி திருப்பரங் குன்றுவி என்நடு இரும்பொழில் திருவேரகம்
சுநில்சீ ரலைவாய் விளங்குபழ முதிர்சோலை என்னுமறை புகழ்பதிதொறுங்

கற்குவடு தொறுமினிய நற்சார புரியும்உறை கடவுளைக் கடவுளரெலாங்
கைப்மலர் நவிக்கஇரு கால்மலர் படைந்தவொரு கந்தனை யளிக்க
வென்றே. அ

சரஸ்வதி

10 நெய்தலங் காடுமிரு காவிபொரு வள்ளையும் நிகழ்குமிழும்
முகைமுல்லையும் நிறைநறைக் குமுதமுந் தொடியுடைத்
தோன்றியொடு நேர்கன்னி காரமுகையும்

எய்தரிய நூபுரக் கமலமுஞ் செறிகடவுள் எகினம்வெள்
ளைக்கமலமீ தேர்பெற்ற மறைமுதல கலைசொற் றிருந்
தென இருந்தவளை யஞ்சலிப்பாங்

கைதையங் கானமும் புன்னையங் கானமுங் கானல்நெய்
தற்கானமுங் கடிமணத் தொடுநறவும் மகரமுந் தந்திலகு
கல்யாண மாமறுகென

மைதவழ் பொழிற்புளினம் மலிகயற் புலவையும் வளை
அலவ னுறுபசியையும் வாரா தகற்றியொளிர் நெய்தலஞ்
சமரபுரி வருகுகனை யருள்புரியவே. கூ

பலதேவர்

11 எண்திசை யோர்வசு எண்மர்கள் வயிரவர் எண்மர் மருத்து
வரும் ஈரிரு மூவரும் ஓரொரு பதின்மரும் ஈரறு சூரியரும்

அண்டர் வியாழன் அடும்புய வீரர் அலர்ந்த சரோருக
மேல் அந்தண னேரெழு மங்கையர் சோமனும் வந்தரு
ளேபுரிவார்



தண்டையு நீடு சதங்கையும் நீளொளி தங்கிய கிண்கிணி
யுந் தாளிணை மாமலர் மீதினி லோசை தழைந்திட வந்து
மையாம்

ஒண்தொடி கொஞ்ச இருந்து குறங்கில் உவந்தருள்
கொங்கையமு துண்டருள் கந்தனை யஞ்சம ராபுரி
ஒண்கும ரேசனையே. கய

---

## 2. செங்கீரைப் பருவம்

12 மும்மையுல கெங்கும் பரந்தொளி பரப்பிடும் முதற்பரை
யெடுத்தணைத்து மூதருட் புனிதநீர் நிறையஆட் டிப்
பெருமை மொய்த்தநித் திய ஆடையால்

மெய்ம்முழுதும் ஒத்திரு வேறற்ற அத்துவித வெண்ணி றணிந்து
மிளிரும் வீறுபூ ரணநிலப் பொட்டுமிட் டுப்பெரிய மெய்ஞ்
ஞான தீபதட்டால்

அம்மருவும் ஆலத்தி சுற்றிமற் றிச்சையுட னுஞா னங்
கிரியையென் றருள்செவிலி யாயரங் கருகிலுற ஆரு றகன்
றசிவ வாரியிலெழுஞ்

செம்மையா ரமுதம்பு கட்டவள ருங்குழவி செங்கீரை
யாடியருளே திமிரமல மகலவரு குமரசர வணமுருக செங்
கீரை யாடியருளே. க

13 அஞ்சக் கரப்பரத் தொட்டிலிற் சதுர்வேத மானவட மொருநாலையும்
ஆதியுடன் இச்சைஞா னங்கிரியை நாமமுற் றநல்வளர்ந் தொளிர்
சத்திகள்

நஞ்சக் கரங்கொடு பிடித்தங் கசைத்திடத் தகுபரையும் ஆதிசிவ
னுந் தாமுள மகிழ்ந்துறச் சோமனென நிலவுபொழி
தவளயா னைக்கடவுளும்

விஞ்சக் கரம்புனையு முதல்வர்பதி னொருவரும் விபுதர்
களும் அரிபிரமரும் வேணிமுனி வரரும்அருள் ஞானமுனி
வரராதி வியனுலக ரும்பரவவே

செஞ்சக் கரப்பரிதி யெனநிலவு போரூர செங்கீரை யாடி
யருளே திமிரமல மகலவரு குமரசர வணமுருக செங்கீரை
யாடியருளே. உ

14 குஞ்சிமுடி யுற்றசெஞ் சுடிகையா டச்செவிகொள் கோலக்
குதம்பையாடக் குமுதமென அமுதொழுகும் இதழ்களா
டக்கரங் கொண்டபொற் றொடிகளாடக்

கஞ்சமல ரைப்பொருவு நயனமா டக்கடி தடத்தரை
வடங்களாடக் கந்தரிய முந்நியின் புதவுச் றடிமருவு கனகநற்
றண்டையாட

அஞ்சுவடி வத்தசுரர் திண்டாட அரிபிரம ராதிசுரர்
கொண்டாடநீள் அகிலசர அசரங்கள் நின்றாட எண்
டிசையோ டண்டபகி ரண்டமாடச்

செஞ்சர வணப்பொய்கை மஞ்சமிசை நிலவும்இறை செங்
கீரை யாடியருளே திமிரமல மகலவரு குமரசர வணமுருக
செங்கீரை யாடியருளே. ௩

15 ஐந்தொழிலு மெனதிவைக ளாகுஞ் சிருட்டிமுத லானமுத்
தொழில்சடத்தும் அறிவிடத் தோரிரண் டும்வினைக்
கீடாய் அவற்றையுயி ரறியாமையால்

முந்திவரு தன்னையும் பிறரையுங் கருதினனி முதிர்விழைவு
வெகுளிமருவி முன்னுசுக துன்பங்கள் மன்னியிரு வினை
மேவி மூடப்பி றப்பிலாழும்

பந்தமுறு முயிர்சுதந் திரமிலி சடம்பாச மானகரு விகள்
முழுதுமே பகருமற் றவைநடத் திடுமொருவ னுனிவை
பகுத்துன் சுதந்திரமறச்

சிந்தனைசெய் பந்தமறு மென்றெனக் கருள்குரவ செங்
கீரை யாடியருளே திமிரமல மகலவரு குமரசர வணமுருக
செங்கீரை யாடியருளே. ௪

16 காம விடத்தால் மாமயல் கொண்டே நொந்தேனைக்
காருணி யத்தால் வாவென வந்தாள் தந்தோனே
தீமை யிழைத்தேழ் வாரிதி சென்றே நின்றேனைச்
சீரருள் பெற்றூ ரார்கரை தந்தா ளெங்கோனே
மாமல முற்றே தோமுறு நெஞ்சேன் உய்ந்தார
வாய்மொழி நற்றேன் நீமிசை யிந்தா என்றீயுஞ்
சேம நிதிப்போ ரூரிறை செங்கோ செங்கீரை
தேவர் தமக்கோர் மாமணி செங்கோ செங்கீரை. ௫

17 களவறு ஞானிக ளுளமலர் மீதெழுந் தாடுந்தேனே
கடையனை மேவிய மலமற வோர்குரு என்றே வந்தோனே
அளவறு சூரிய ரெனமயி லேறி யுவந்தா ருங்கோவே
அகமுக மாயொரு சுழிமுனை சேர்பவ ரங்கே யுந்தேவே



இளநில வாள்நகை யுறுகுற மாதை யியைந்தா ளுந்தோளா
எழிலடி யார்முத லனைவரு மேநசை கொண்டா ருந்தாளா
தெளிவுற வேயென தகநிறை பேரொளி செங்கோ செங்கீரை
திகழ்சம ராபுரி முருக சடானன செங்கோ செங்கீரை. ௬

18 மகபதி சக்கிரி மலரயன் நத்திய வண்சே ருங்காவே மல
மறும் முத்தர்க ளெனும் அளி சுற்றிய தண்கூ ரும்பூவே

இகலறு மெய்த்தவ முழுதையும் உற்றவர் எண்கூ ரும்பேறே எழி
லருள் பெற்றுயிர் மயில்கள் களிக்க எழுந்தா ருங்காரே

ககன சுரர்க்கொரு துணையென நெட்டயில் கொண்டே
நின்றோனே கடவுள் மடப்பிடி தனஇணை தைத்தொளிர்
திண்தோள் மொய்ம்போனே

திகழ்மதி யொத்தொளிர் சமர புரிக்கிறை செங்கோ செங்
கீரை செறிதய வுற்றவ ரிதய புரிக்குக செங்கோ செங்
கீரை. ௭

19 குவளைப் பிழிசெங் குமுதப் பிழிகோ கனகப் பிழிகூடிக்
கோதறு சேதக மாகக் கூனற் கொழுவுழு சீதைதொறுந்
தவளத் தரளத் தொடுபிழி ஊறல்த தும்பக் கடைசியர்தந்
தண்ணகை யொடுமித மூறலொ டுஞ்சம னுமென வுட்சினவிப்
பவளக் கடிகைப் பேரணி சரிநிகழ் பங்கய மென்கையாற்
பணிலத் தரளத் திரளைத் திடரிற் பழனக் கரைதரவே
திவளுற் றிடுதுண் டீரநன் னாடா செங்கோ செங்கீரை
சீரூர் போரூர் வீரம யூர செங்கோ செங்கீரை. ௮

20 புள்ளுங் கிளியும் மயிலும் குயிலும் பொன்னஞ் சிறை
யனமும் பொருகோ டரமுங் கரியுந் திரியும் பொங்கர்ப்
புதுமலர்வாய்க்

கள்ளும் விள்ளும் இருவிழி பிழியுங் கனிவகை யின்சாறுங்
காலாய் மடுவாய் ஆறாய்ஓடிக் கடல்புக எதிரேறித்

துள்ளும் மகரம் புயலின தகடு துணித்துச் சலமேவிச் சுடர்
வான் மகரஞ் சாடிக் கங்கை துளைந்து திரும்பிவருந்

தெள்ளும் வளமுள தொண்டைநன் னாட செங்கோ செங்கீரை
சீரூர் போரூர் வீரம யூர செங்கோ செங்கீரை. ௯

21 ஓதிம சாலம் மேதியி னங்கள் உழக்கப் பேரேரி ஒள்ளிய
கமலப் பள்ளியை விண்டங் குயர்தண் டலையேறத்
தாதவிழ் தண்டலை ஞிமிறுகள் விரைசெறி தடமலர்மீதே
றத் தடநீ ராடிய மடவார் வெருவித் தண்ணதி நீரேறக்

கோதறு நதியுறை வாளைகள் தாவிக் குளிர்வயல் மடை
யேறக் குலவிய மடைதவழ் குடவளை பதறிக் கொழுவிய
கமுகேறத்
தீதற வொளிர்தரு தொண்டைநன் னாட செங்கோ
செங்கீரை சீரூர் போரூர் வீரமயூர செங்கோ செங்கீரை.

---

## 3. தாலப் பருவம்

22 கறையின் றொளிரு மதிமுகத்துக் கரும்பன் னாரும் ஆட
வருங் கலவித் தேறல் அயின்றயின்று களித்துத் தருக்கி
விளையாடும்
நிறையுஞ் சோமச் சிலைத்தகடு நிரப்பிக் குலிசத் தூணி
றுத்து நிலைகொண் டரிய நவமணிகள் நிகழும் மாழைத்
தசும்புநிரைப்
பொறைகொண் டிலங்கும் பலமாடப் புனிதக் கொடிகள்
கற்பகப்பூம் பொங்கர்க் குறுந்தாள் நறுமுகையிற் புடைக்
குந் தோறும் மடலவிழ்ந்து
தறையில் நறையின் பெருக்கூற்றுஞ் சமர புரியாய்
தாலேலோ தமரக் கடலைக் கடைந்தமுதந் தருவோன்
மருகா தாலேலோ. க

23 மகரப் பரவை யளறுபட மாயைத் திறமார் கிரவுஞ்ச வா
மால் வரைசெந் தூளியெழ மதமா முகத்துச் சினத்த
வுணன்
அகலக் குலிச வரைதகர அரிமா முகன்பே ராயிரவாய்
அருஞ்சோ ரிகள்நின் றலையெறிய அண்ட கூடந் தொடுஞ்
சூதம்
இகலற் றலறி விழஅசுரர் எவரும் பதறிக் குடிபோட
இலங்கும் அமரர் கலங்காமல் எழில்வா னுலகங் குடி
யேறத்
தகமைச் சுடர்நெட் டிலைவடிவேல் தடக்கை யெடுத்தோய்
தாலேலோ தமரக் கடலைக் கடைந்தமுதந் தருவோன்
மருகா தாலேலோ. உ

24 மூல நிலத்தி லதோ முகமாய் முகிழ்த்து விழி இன் பொடுதுயிலும்
மூரிப் பாம்பைக் கால் அனலை மூட்டி யெழுப்பி நிலம் ஆறுஞ்



சீல மொடும்போய்த் தரிசித்துச் செழுமா மதியி னமுதுகடல்
தேக்கி யகந்தங் கசைவறுமோர் தெய்வத் தவத்தோர் உளவிழியிற்
காலுந் தீப மினல்பந்தங் கடிகூர் விறிசு கதிர் மதிபோற்
காட்டு மொளியா யிவையாவுங் கடந்தாங் கரிவில்
பேரொளியாய்ச்
சால விளங்கும் விந்துவெனுந் தடமா மயிலோய் தாலேலோ தமரக்
கடலைக் கடைந்தமுதந் தருவோன் மருகா தாலேலோ. ங

25 காரார் திசைமலி போரார் களிறு கலங்கிப் பிளறிடவே
கனக நிறத்துத் திருகு மருப்பிற் கனிசின மொடுமோதிப்
பேரா யிரமுடி யுரகன் நெளிக்கப் பின்போய் முன்னோடிப்
பேசரு வடவரை குலவரை திசைவரை பெயரும்
படிதாவிப்
பார்சூ ழேழ்கடல் குமுறத் துள்ளிப் பனிவா னகம்மோதிப்
பகரரு கோளகை சாடிப் பீடுறு படிவரு தகருடையோய்
தாரார் பொழில்சூழ் போரூ ரிறையே தாலோ தாலேலோ
சண்முக முக்கட் பண்ணவர் குருபர தாலோ தாலேலோ. ச

26 அமரர் தமக்கன் றொருநாள் இரணிய அணிவட வரை
மீதே அறைதரு மும்மா யையினோ டுருவி அகண்டா
காரமதாய்த்
திமிர மகற்றிய முச்சுட ருக்கொளி செய்கா ரண
வொளியாய்த் திகழ்தரு புவன சராசர முழுதுஞ் செறிபூ
ரண வெளியாய்க்
கமையுறு மனவா சகமொடு காயங்கண் டளவிட வருநின்
காட்சியை மாட்சிமை பெறமுன் காட்டிய கண்ணோ
யாவர்க்குந்
தமரென நிலவிய சமர புராதிப தாலோ தாலேலோ
சண்முக முக்கட் பண்ணவர் குருபர தாலோ தாலேலோ. ரு

27 கோளகை தடவிக் குடைபல நீடக் கொடியெண் திசை
மூடக் கோதறு பேரணி சூரியர் மறையக் கொழுவிய
வெயில் வீச
நீளிய சாமரை வீசப் பேரிகள் நீள்கட லேழெனவே
நின்று முழங்கத் தெய்வத நகரில் நிரம்பும் அரம்பையர்
தாம்

வேளை மருட்டு விழித்தொழில் கைத்தொழில் வேறு காருடன மி டுவரப்புய லொத்தவன் முதலவர் மெய்ச் சிவ ரச்சுரர்கைத்

தாளம தொத்தவெள் ளானையி லுற்றோய் தாலோ தாலேலோ சண்முக முக்கட் பண்ணவர் குருபர தாலோ தாலேலோ. ௬

28 தென்னங் காவைச் சூழப் பூகத்திரளவை புடைசூழத் தேமா வினமற் றவைபுடை சூழச் செறிதரு பலவின் இனம்

மின்னும் மவைபுடை சூழப் பெருவாழைக்கா டவைசூழ மிளிர்கன் னற்கா டவைசூ ழப்புனல் மிகுசெற் பணை மருதம்

மன்னுஞ் சூழற் பொன்னம் பூமியில் வானவர் வந்திறிய மலிசோ பானம் போல விளங்கிய வளநெடும் இளமாழைத்

தன்னந் திகழ்சா ரற்போ ரூர தாலோ தாலேலோ சண்முக முக்கட் பண்ணவர் குருபர தாலோ தாலேலோ. ௭

29 செங்கட் சிறுமின் னொளிர்வன மேதிச்செழுமே கங்குழு மித் திகழ்தரு வரைமிசை கனைகுர லொடுதீம் பால்சொரி வெள்ளருவி

வெங்கட் பணிமணி யின்குவை கழைமணி வெண்குவை பொங்கொளிசேர் வியன்நீ லக்குவை யொடுமுச் சங்கநல் வேணியெ லும்படியே

துங்கப் பேரலை கொண்டு வரன்றித் துண்ணென் றிழி யொலியாற் றுடியடி வரைமுழை தோறுங் கண்படு சோலைச் சாரலெலாந்

தங்கப் பொடியே மிளிர்போ ரூர தாலோ தாலேலோ சண்முக முக்கட் பண்ணவர் குருபர தாலோ தாலேலோ.

30 கஞ்சனை யன்று முனிந்து சிவந்தருள் கையாய் தாலேலோ காமனை வென்றவர் தோளிலு லாவிய காலாய் தாலேலோ

மஞ்சன் மகன்கன வின்சொல் வழங்கிய வாயாய் தாலேலோ மஞ்சள் வடஞ்செறி குஞ்சரி கொங்கை கொள் மார்பா தாலேலோ

விஞ்சுறு மன்பினர் பந்தனை கொன்றுவிர் விழியாய் தாலேலோ வேடுவர் மங்கையு ளங்குடி தங்கிய மெய்யாய் தாலேலோ



தஞ்சென வந்தவ ருஞ்சிடு சமர புராதிப தாலேலோ சரவண பவனே குரவணி தருசண் முகனே தாலேலோ. ௯

31 குண்டச் சமணக் கரிகளை யடுகோ ளரியே தாலேலோ கும்பத் திடுமென் பைந்திரு விற்றரு குமரா தாலேலோ

பண்டைத் தமிழ்நக் கீரன் சிறைவிடு பண்பா தாலேலோ பச்சைக் கொடிகச் சுப்பொரு கலசப் பாலா தாலேலோ

மண்டைத் தலையிற் பலிநசை கொண்டவன் மைந்தா தாலேலோ வாரணம் ஐந்து கரங்கொடு தழுவிய வாகா தாலேலோ

தண்டைத்தாளுந் தோள்களும் அழகிய சதுரா தாலேலோ சரவண பவனே குரவணி தருசண் முகனே தாலேலோ. ௰

## 4. சப்பாணிப் பருவம்

32 பொருநைநதி யிற்படு நீளமரக் காவிற் புகுந்துசந் தப்பொங்கரிற் புக்குமண நாறுதேன் றற்குழலி விளையாடு பொதியப் பொலங்கு வட்டில்

திரையெற்றியு மணியாழி யங்கையி லடக்கியஞ் செந்தமிழ்க் காவிரித்துத் திறமையுடன் உரையுமொரு குறுமுனி யகத்தினுள் திமிரமற மறைமுடிவெனும்

அருளொளி பரப்புஞா னக்கொழுஞ் சுடர்வைத்த ஆருனனக் கொண்டலே அன்பர்வாய் வண்குமுதம் விண்டுதண் தமிழ்நறவ மார வெழு மொருமதியமே

தருணவுமை முககமலம் மலரவரு பரிதியே சப்பாணி கொட்டியருளே தடமலையை நிகர்கரிகள் திரிசமர புரி முருக சப்பாணி கொட்டியருளே. ௧

33 அலைகட லிடைப்பெரிய மகரமீன் நீர்கிழிய அம்பிற் கடிந் தேகுமா றரவுயர்த் திடுகோடிக் குருகுலக் கோமகன் அடற்படைக் கடலுடையவே

சிலைவலியவாகுவல யப்புயப் பற்குணன் தேர்கடவி வெற்றி வளைவாய்ச் செம்மலரில் வைத்துமறு மன்னர்செவி செவிடுறச் செல்விடித் தொனிமுழக்குந்

தொலைவறு பசுங்கதி ரெறிக்குமர கதநிறச் சுந்தரப் புயன் மருகனே சுருதிமுடி வாசனத் துறைபவரை முலைக்குடஞ் சொரியமுத வாரிநாறுந்

தலைமைபெறு செங்குமுத வாயனே தூயனே சப்பாணி
கொட்டியருளே தடமலையை நிகர்கரிகள் திரிசமர புரி
முருக சப்பாணி கொட்டியருளே. ௨

34 ஈராறு பரிதியி ராறுமே ருதயத் திருங்குழை சுமந்த
புயமும் ஈரெட்டு வொண்கலை மேவிக் களங்கமுயலின்றிச்
செழுஞ்சுடர்விடும்

ஓராறு மதியமீ ராறுதெய் வக்கமல வொண்மலர் மலர்ந்த
படியே ஒற்றுமை பெறக்கொண்டு நிற்றல்போ லத்திகழும்
ஒளிவிழி சிறந்தமுகமுஞ்

சீரார் படைக்கலக் கமலமும் மார்பமுஞ் செய்யதண்
டைத்தாளுமென் திமிரமற எனதகங் குடிகொண்டு
மீளாது திகழ்வீடு தருகுரிசிலே

தாரார் சடைப்புனிதர் பாலாகு கக்கடவுள் சப்பாணி
கொட்டியருளே தடமலையை நிகர்கரிகள் திரிசமர புரி
முருக சப்பாணி கொட்டியருளே. ௩

35 நனவில்வரு கனவிற் சுழுத்தியிற் பொறிகரண நற்புருட
னிற்பகுதியும் நவில்கால பரமதில சுத்தமா யையும்விண்
ணின் நண்ணுபூ ரணமாயதோர்

உனலருவி யோமத் திருஞ்சுத்த வித்தைமுதல் ஒருமூ
வகைக்கருவியும் ஒருபரம துரியத்து விந்துவும் மிளிர்விசு
வம் உண்ட திசை யுயர்நாதமும்

வினவலுறும் உபசாந்தம் அதனில்மா மாயையும் மிகு
சொருபம் அதனிலிருளும் விள்ளுமென வுரைசெய்தென்
உள்ளமலம் அகலஅருள் விழிவழிப் பொழியுமுகிலே

தனபதியை எலுவனென வுளமகிழும் அரன்மதலை சப்
பாணி கொட்டியருளே தடமலையை நிகர்கரிகள் திரிசமர
புரிமுருக சப்பாணி கொட்டியருளே. ௪

36 குலிசக் குழூச்சுலவு பூனதக் கிம்புரிக் கோடுநா லுடைய
வெள்ளைக் குஞ்சரக் கும்பமிசை கொட்டல்போ லச்சிவன்
குலவுப் புயங்கொட்டல்போல்

மலைபெற்ற பைம்பிடிப் பாலுண்டு முத்தமிழ் மதம்பொழியு
மந்தநாளின் மன்னுதத் துவமசியின் மும்மைப் பதங்களை வகுத்துத்
வுறுத்துமுறைபோற்

கலகப் பிணக்குடைச் சமயப் பெரும் பறவை கடியுமொரு
கருவியதுபோற் கருதரிய பதிமுதல் திரிபொருளும் திசமெனக் கைக்
குறிப் பறிவித்தல்போல்



தலைமைத் தமிழ்ச் சங்கம் அளவிட்ட விரககுக சப்பாணி
கொட்டியருளே தட மலையை நிகர்கரிகள் திரிசமர புரி
முருக சப்பாணி கொட்டியருளே. ௫

37 கண்ணன் திருத்தங்கை முலையமுத முண்டு கனஞான
வரையிவர்ந்து கருதரிய சுரர்முதற் பயிர்கள்தழை யப்
பெருங்காரவுண மாசுணமெலாந்

தண்ணென் றுளஞ்சுறுக் கிட்டுமுரி யச்செழுஞ் சுடர்
விடுந் தாரை நெடுவேற் சோதிமின் மின்னியெழு தீபச்
சிகைப்பொருவு சுடிலைக் கொடிப்பேரிடி

எண்ணெண் திசைக்களிறு பிளிறிட இடித்துமறை இன்
னருட் பொழியுமுகிலே இசைமுழவு பேரிகை வலம்புரி
முழக்கமுடன் எழில் மங்க லச்சும்மையுந்

தண்ணந் துறைப்பரவை யோடிகலு போரூர சப்பாணி
கொட்டியருளே தகைமைபெறு குறவனிதை விழியிணைகள்
குடிகொள்புய சப்பாணி கொட்டியருளே. ௬

38 மரகதப் பந்திநிறை பைங்கிரண மண்டிலம் வழங்குகுழ
முகமதிகளும மாணிக்க மணிராசி யிளவெயிற் றிசைவீசு
மகுடநீ டியமுடிகளுங்

கரகதிர்ப் பகலெனச் சுடர்விரித் தொளிர்வயிர கடகநிறை
செறிதோள்களுங் கறையாலு மதிமண் டலங்களென நித்
திலங் கதிர்விடு மதாணிமார்பும்

திரகதச் செக்கரின் நிறத்துகில் மருங்குலுந் திப்பியத் தல
நவமணித் திரண்மண்டு தண்டையங் கமலமுந் திகழவிச்
சித்திரப் பைஞ்சிறைமயிற்

குரகதத் தினைநடவி யடியவர்க் கருள்முருக கொட்டியருள்
சப்பாணியே கூரு ரயிற்கிறைவ போரூர் நகர்க்கதிப
கொட்டியருள் சப்பாணியே. ௭

39 உடலிற் குடர்நீ ளக்கொடு சென்று வணக்திரள் வட்ட
மிட ஒள்ளிய செல்வப் பிள்ளைகள் பற்பல உயர்பட் டம்
விடல்போற்

கடலிற் படுகுரு திப்பெரு வெள்ளங் கட்குழி சிறுபலபேய்
கடிஅதள் மூடிய பேரிகை முழவு கரங்கொடு கரைகாண.

மிடலுற் றிடுபிண மாமலை தோறும் வியன்பேய் களியாட்
டம் இட்டா டத்தலை வட்டா டக்கடு வெஞ்சூர்க் குல
முழுதுங்

கொடுமைத் திறமும் அறவேல் விட்டவ கொட்டுக சப்பாணி கொற்றவ நற்சம ரப்பதி யுத்தம கொட்டுக சப்பாணி. அ

40 ஆடகத் திரள்மதிலும் மேல்நிலைச் சிகரிகளும் ஆணிமுத் தொளிர்மேடையும் ஆழிதத் தலைபொருவு பீடுடைக் கொடிகள்பல ஆடுபொற் சூடமாடமும்

நீடுதெற் றிகளுமணி சூளிகைத் செழுமனையும் நேர்செலுத் தியதேர்களும் நீர்நிறைத் திடுகுடமும் வாழைநற் கமுகினமும் நீள்நிலைப் பலதேர்களுஞ்

சேடுறத் திகழ்மகர தோரணப் பலமறுகு தோறுமுத் தமிழோர்களுஞ் சீர்மறைத் தலைவர்பரி பூரணத் தவரளகை யாளனேத் தவர்யாவருங்

கூடிமொய்த் தொளிர்சமர மாநகர்க் கோருமுதல்வ கொட்டியருள் சப்பாணியே கூடலிற் செழியன் அழல் கூன் அறப் புரியும் இறை கொட்டியருள் சப்பாணியே. கூ

41 தீதறு கற்பக நற்றரு வுற்ற செயக்குலி சப்பாணி
சேடனுடற் றுயில பச்சைநிறத்த செருச்செய்வளைப்பாணி
போதிடை யுற்றுல கத்தை யளித்த புதுக்கர கப்பாணி
புகரர் நற்றவர் கற்றவ ரேத்து புவித்தலம் உறருர்கள்
மூதணி நைக்கம லத்தொ டுவப்பு முகக்கம லப்போது
மூட விரிக்க வுதித்த மதிக்கதிர் ஒத்தெழு மெய்த்தேவே
கோதறு நற்சம ரப்பதி யுத்தம கொட்டுக சப்பாணி
கூர்கொளயிற்படை யுற்றகரத்திறை கொட்டுகசப்பாணி.

---

## 5. முத்தப் பருவம்

42 கயல்கொக் குடும்பின் சிரசுகளுங் கரிக்கோ டேன முடக்கோடுங்கழையுங் கரும்புங் கமுகினமுங் கதலி சாலி கடிக்கமலம்

புயனத் தாதி தருமுத்தம் புனலிற் கனலிற் புடவியினிற் பொன்றும் பொதியிற் கேழொளிபோம் பொருந்தும் விலையுண் டவைவேண்டேம்

இயல்புற் றென்றுன் அழிவிலதாய் என்றும் புதுமை தருமொளியாய் எவர்க்கும் மதிக்க அரிதாகி இருந்து மிகுந்த மதுரமெலாம்



முயல்வுற் றளிக்கும் நின்கனிவாய் முத்தந் தருக முத்தமே முகுந்தன் மருகா சமரபுரி முருகா முத்தந்தருகவே. க

43 சந்தங் கமழ்மந் தாநிலத்தேர் தருக்கோ டிவர்ந்து பொறி அளிகால் தளைக்கு முறுக்கு நாண்கழைக்கோ தண்டங் குழைத்து வளைத்தேற்றி

இந்தங் கவினை யமுதநிழல் ஈயக் குயில்கள் விருதூத இசைவா ரதிப்பே ரிகைமுழங்க இருள்மால் களிறுஞ் சுகப்பரியுங்

சந்தங் கமழுங் குழற்படையுங் கடவுள் வசந்த னெடுசூழக் களித்து வருவோ னொளித்தேகக் காட்சி தருகட் டழ குடையோய்

முந்துந் தவத்தோர் பணிசரண முதல்வா முத்தந் தருகவே முகுந்தன் மருகா சமரபுரி முருகா முத்தந் தருகவே. உ

44 பெருகுங் கருணை சுரந்தொழுகும் பிராட்டி பசும்பொற் குடத்தமுதும் பிறங்கும் அறுவர் ஈராறு பெரிய குரும்பை யொழுக்கமுதுங்

கருகுஞ் சகரர்க் கருள்புரிந்து கடலின் அகடு கிழித்தொழுகுங் கங்கைப் பெருந்தாய் ஆயிரமாங்கனிவாய் முத்த மிடுமமுதுங்

குருகின் சிறையும் பிறைக்கொழுந்துங் கூடத் திகழ்செஞ் சடைப்பெருமான் குமுதத் திருவாய் முத்தமிடக் கொழிக்கும் நறவும் போனசுகம்

முருகுந் ததும்புங் கனிவாயால் முத்தந் தருக முத்தமே முகுந்தன் மருகா சமரபுரி முருகா முத்தந் தருகவே. ங

45 பனியிற் குறிய துளி தூற்றும் பரவைத் தரங்க மெடுத்தெறிந்த பணிலத் திரளும் இரசிதப்பூம் பணிச்செறிப் பேய்ந்த முரண் இனமும்

நனிமுற் றிமசூல் உளைந்துசொரி நளிவெண் தரளத் திடர்தோறும் நவைதீர் பவள வண்டல்வரை நடுவும் படவர் மடமகளிர்

இனிதுற் றிவர்ந்து பனைப்பாளை இருந்த கலச மதுவருந்தி இணர்க்கே தகையும் புனைப்போதும் எடுத்து முடித்துக் களித்தாடும்

முனிவர் குழாங்கள் புகழ்போரூர் முதல்வா முத்தந் தருகவே முத்தார் கொத்தே அறுஇரு முத்தா முத்தந் தருகவே. ச

46 பூனத மாழைக் கிண்கிணி பலவும் பொலிவொடு கணக
ணெனப் புனிதத் தண்டையி னொலிகல கலெனப் பொற்
றெருடி நிரையதிர

மேல்நகும் அரைவடம் ஓசை தழைந்திட வியல்நவ மணி
மாலை விரவி யலம்பக் குண்டல மொளிவிட மிளிர மணிச்
சுடிகை

யான முடப்பட மாயிர முந்தள்ளாடத் தளர்நடையிட்
டம்மை செவிக்கின் சுவைபெற மழலை அரும்பிழி சொரி
வாயால்

மோன சுகந்தரு ஞானப் பிள்ளாய் முத்தந் தந்தருளே
முத்தமிழ் நற்சம ரப்பதி நாயக முத்தந் தந்தருளே. ரு

47 இருண்மைப் படலங் கெடநுங் குஞ்சுடர் எழின்மா ணிக்
கவரை ஈரைந் துடனக் கிரிவந் தீரா றிணைவுறு பரிச
தெனக்

கருடத் துவசனும் அறிவரி யானணி கடகத் தோள்
தழுவிக் கறையறு முழுமதி யொருபத் தொன்று கலந்து
மகிழ்ந்துறல்போல்

அருள்மொய்த் தொழுகு முகத்தொடு முகம்வைத்தழகிய
மழலைசொலி ஐய னுளங்களி பொங்குற முத்தம் அடிக்
கடி தருவாயால்

முருகுற் றெழுநீ பத்தொடை யழகா முத்தந் தந்தருளே
முத்தமிழ் நற்சம ரப்பதி நாயக முத்தந் தந்தருளே. சு

48 பூவேபூவிற் பரிமள மேபப்பூநிறை சுவைநறவே பொங்குங்
கடலே கடலி லுதித்தெழு புனிதத் தெள்ளமுதே

காவே காவிற் கொஞ்சும் பஞ்ச வனக்கட வுட்கிளியே
கண்ணே கண்ணுறு பாவாய் பூவாய் கனியே கனிரசமே

தேவே தேவர் சிரோமணி யேயென் சீருயி ரேயுயிரிற் செம்பொரு
ளேயரு ளேமுழு மணியே மணியிற் றேசிகமே

மூவா மறையே மறையின் பொருளே முத்தந் தந்தருளே முத்தமிழ்
நற்சமரப்பதி நாயக முத்தந் தந்தருளே. எ

49 ஆடக நன்கத் தரியால் வேளுக் கம்பு திருத்துவபோல்
அலவன் குறுமுள் தாள்கொடு குவளையொடம்புய இதழ்
கிள்ளும்



ஓடையில் நீடுங் கவையடி மேதிகள் உறுகுட மடியில்
வரால் உகளி யடிக்கடி முட்டக்கன்றென உள்ளிச் சொரி
வெள்ளம்

பீடுறு மாலைச் சாடிகொ ளாதெழு பிரச வெளத்துடனே
பெருகிக் கதலியின் மஞ்சளொ டிஞ்சி பெருங்கழை
செஞ்சாலி

மூடி நிறைக்குந் தொண்டைநன் னாடாமுத்தந் தந்தருளே
முத்தமிழ் நற்சம ரப்பதி நாயக முத்தந் தந்தருளே. அ

50 மாலைப் பொழுதிற் பெடையொடுநிறையளிவனசக்கோயில்புக
வளர்மதி யமுத கரங்கொண் டிதழ்வா சக்கத வதுமூடக்
காலைப் பரிதி கரத்தா லந்தக் கதவு திறந்துவிடுங் [ஞ்
கடிமல ரேரிப் பெருமத கெழுநீர் கதிர்வயல் புகஎதிர்பா
சேலைச் சினைபடு களிறு துரத்தச் செறிநில விறிசெனவே
சிகறிக் கன்னற் காடு முறிப்பத் தேனுறத் கொடுசொரியும்
மூலிச் சுதைநிகர் பாலிநன் னாடா முத்தந் தந்தருளே
முத்தமிழ் நற்சம ரப்பதி நாயக முத்தந் தந்தருளே. கூ

51 சிமயம் மொய்த்தொன் றிமய வெற்பன் தவபலப் பைம்
பிடியனுள் செறிக ளிப்பண் புறவு ரைக்குஞ் சிலசொல்
கற்குஞ் சிறுகிளாய்

அமர ருக்கும் முனிவ ருக்கும் அடிய வர்க்கும் அமுதமே அவுண
ருக்குஞ் சமணருக்குங் கொடிய வர்க்கும் அனலமே

குமுத நற்பங் கயம்மு ருக்குங் குலிகம் மிக்குஞ் சுதைநருக்
குலவு கற்கண் டிவையி ருக்கும் இதழ ளைப்பைங்
குழவியே

சமர நற்செம் பதிய ருக்கன் தருகமுத்தந் தருகவே தணிகை
வெற்பன் சரவ ணத்தன் தருக முத்தந் தருகவே. க0

---

## 6. வருகைப் பருவம்

52 விரைநறுங் குழலினர் கொங்கைப் பெருங்குவடு மிகுதடக்
கடலுழக்க வெள்ளைவா ளைக்களிறு கொள்ளுசூல் முகில்
பிளிறி விள்ளக் கிழித்தலைந்துழு

நிரைதருங் கந்திக் குடக்கழுத் தறமோதி நெட்டிலைக்
கதலி சாடி நீடுகன் னற்கா டொடித்துப் பொறிச்சிறைய
நீலவண் டூது கஞ்சத்

திரளொடும் பணைமண்டு நெற்குளுடைத்திடச் செறி
தரள முகிலாதியிற் சிந்தப் பெருஞ்சோதி யுடுமண் டிலத்
தினில் திகழ்கின்ற மருதவேலி
மருவியம் புகழ்கொண்ட சமரபுரி தனில்நிலவு மஞ்ஞைவா
கனன்வருகவே மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடி
யில் வலம் வருகந்த வேள்வருகவே. ௧

53 பொன்னஞ் சிறைப்பெடை அன்னங் களிப்போடு புனலாட
நிழல்கண்டுதன் புகலாவி யின்சேவ லூடனாடி மாலையம்
பொழுதிற் கரந்துறைதரத்
துன்னுறு மடற்கேத கைத்துணரை வெள்ளிதழ்த் தூயகஞ்
சக்குழுவினைச் சுரிமுகச் சங்கினைத் திரையெறியு நித்திலத்
தொகுதியைச் சூலிப்பியைப்
பன்னுநா ரைத்திரளை நாடிப் பசும்புனைப் பஞ்சரத் திடை
கண்டுதன் பவளவா யதின்வாய் மடுத்தரு கணைத்துப் பரிந்
ததனின் முனிவகற்றி
மன்னுந் தருக்கொடு திளைக்குநெய் தற்சமர மாநகர்க்
கிறைவருகவே மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடியில்
வலம் வருகந்த வேள்வருகவே. ௨

54 குழையளவு தாவடி செலுங்கயற் கட்கவுரி கொஞ்சிவிளை
யாடுகிளியைக் குழகர்வே ணிப்பிறைத் தோணிமிசை
வைத்தலை கொழித்தகங் கையில்விடுத்தும்
உழைவெருவி யுகளவெம் புலியதளை ஆனனத் தூறவைத்து
நகைகொட்டியும் ஒளிர்மணிச் சுடிகைமுட வுப்படத் தர
வத்தை உலர்தலை முழைக்கண் உய்த்தும்
இழைபொருவும் ஆடையோ டதில்அறலை மொண்டெரி
அவித்தரி மருப்புவில்லுக் கெண்தோள் தயங்குபுரி நூல்
நாண் வளைத்திட் டெழிற்கரத் திடைபிடித்து
மழைபொருவு களன்மடியில் விளையாடு குகசமர மாநகர்க்
கிறைவருகவே மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடியில்
வலம் வருகந்த வேள்வருகவே. ௩

55 மேருப் பொருப்பையொரு தண்டெனக் கொண்டுமளமு
வேலையை யுறிஞ்சிவிட்டும் விரிசக்ர வாளகிரி யொருவாகு
புரியாக வெவ்வலித் தோளிலிட்டும்
பேருற்ற கயம்எட்டும் எட்டுநா கங்கொடு பிணித்துச்
செவிக்கணிந்தும் பெரியபுவ னப்பொறைக் கமடமதெடுத்
துப் பிறங்குசில் லெனவிடுத்துஞ்



சீருற்று விளையாடு பூதக் கணத்தொடுஞ் சென்றுசூர் வேட்டை
யாடுஞ் சேவகப் பெருமாளென் ஆவியுட் பெருமான் செயந்தேவர்
முனிவர்பெருமாள்
மாரிப் புயற்கருணை பொழிகின்ற போரூர மாயூர குகவரு
கவே மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடியில்வலம்
வருகந்த வேள்வருகவே. ௪

56 அளகுபல முட்டைதன் சிறைகொண் டணைக்குமா றண்
டபா சிகளனைத்தும் அகலப் பெருஞ்சிறையில் விகலப்
பொருட்போல் அடக்கிவைத் தும்விடுத்தும்
களவகல வருசுத்த மாயைவெளி முழுதுங் கடந்தொரு
கணத்தில்வந்துங் கலிசுலோ தத்திலெழு சலராசி தந்தூழி
காலஅழல் வெகுளிதந்தும்
புளகமெழு மெய்ச்சிறையடித் துப்பிர சண்டப் பொருங்கா
லளித்துநச்சுப் புழையெயிற் றுரகன்மணி யிரவிதந் துஞ்
சிறைப் பொருவில்நிழல் மதியளித்தும்
வளமையுடன் நடனமிடு மாயூர போரூர மாவீர குகவரு
கவே மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடியில்வலம்
வருகந்த வேள்வருகவே. ௫

57 பூதம் புலன்பொறிகள் கரணங் குணம்பகுதி புகலரு
கலாதிசுத்தம் பொருவிலிரு மாயையுங் காணவரும் ஆணவப்
பொங்கிருளு மூடுருவியே
பேதங் கலந்துயிர்ப் போதங் கலந்துகலை பேசொணு நேர்மை வெளி
யாய்ப் பேரா யிரங்கோடி சூரியரும் மட்கப் பிறங்கியொரு
ஞானவொளியாய்
ஏதங் கடந்நுட் புறம்பாகி யாவைக்கும் இன்பபரி பூரணமதாய் இல
கருட் சந்நிதியே சத்தியா கக்கையில் எடுத்தஞா னச்சேவகா
மாதங் கனங்கள்மும் மாரிபொழி போரூர மாயூர குகவரு
கவே மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடியில்வலம்
வருகந்த வேள்வருகவே. ௬

58 கருந்தே புகுந்து கதிகாட்டுங் கண்ணே வருக மெய்ஞ்ஞானக் கரும்பே
வருக கருணைபொழி காரே வருக ஆனந்தப்
பெருக்கே வருக யாங்கள்பெறும் பேறே வருக மறைசொல்கிளிப்
பிள்ளாய் வருக பிறங்குதெய்வப் பெருமாள் வருக குற
மடந்தை

தருக்கே வருக மிடியகற்றுந் தருவே வருக மன்பதைக்கோர்
தஞ்சே வருக எமையளிக்குந் தாயே வருக பவப்பிணிக்கு
மருந்தே வருக சமரபுரி வாழ்வே வருக வருகவே மறையின்
சிரமெய்ப் பொருளான வள்ளல் வருக வருகவே. ௭

59 வட்டாட் டாகு மெங்கள்பவ மாற்ற வருக பொறிவேழம்
வணக்க வருக மனமாவை மாய்க்க வருக மலச்சிறையை
விட்டாட் கொண்டு மெய்ஞ்ஞானம் விளக்க வருக வியனரு
மேலீ டாக்கி யெங்குநிறை மிளிர்பே ரின்பந் தர வருக[ளே
தட்டா திருந்த சிவமொன்றுந் நானென் றிலேக்கும் மயலகற்றித்
தானே யாநுவா யாநுதானுயத் தயங்கு மோனந் தரவருக
மட்டார் சோலைச் சமரபுரி வாழ்வே வருக வருகவே
மறையின் சிரமெய்ப் பொருளான வள்ளல் வருக வருகவே.

60 உயிருள் மருவு திமிரம் இரிய ஒளிரும் அளவில் பரிதியே
உததி பொருவு கருணை யமுதெனு உளனு ஆதவுமமதியமே
இயலின் மதுர முழுதும் அறியும் இசைகொள் பெரிய புலவனே
இரவு பகலும் நினையும் அடியர் இதய நகரின் அரசனே
கயிலை யிறைவர் மகிழ வொருசொல் கழறு பரம குரவனே
ககன சுரர்கள் முடிகள் தடவு கமல சரண கடவுளே
பயிலின் முதுகில் உதய குமரன் வருக வருக வருகவே
மகிமை தழுவு சமர புரியன் வருக வருக வருகவே. ௯

61 அறைய அரிய கருவி யடவி யருக வொழுகு நதியமே
அறிவில் சமய அரிகள் வெருவி அலற முடுகு சரபமே
நிறைகொள் பரம சுகமெய் யடியர் நினைவி லுதவு பிரமமே
நிகழும் அயனும் அறிய அரிய நிமல வொளியுள மதுரமே
கறைகள் இரிய எனது மனது கனலி நிலவு புணரியே
கலக வினைவ லனலை யடுநற் கருணை பொழியும் எழிலியே
மறைகள் குலவு கமல சரணன் வருக வருக வருகவே
மகிமை தழுவு சமரபுரியன் வருக வருக வருகவே. ௧௦

## 7. அம்புலிப் பருவம்

62 மானை ஆகந்தழுவு வாய்இவனும் உமைதந்த மானை ஆகந்
தழுவுவான் வனைசடைக் கங்கையலை தவழ் குழவி நீயதின்
மடித்தலக் குழவி இவனுந்
தேனனைய மொழியறுவர் மகிழவரு வாய்இவன் திகழு
மவர் மகிழவருவான் சிவனடியும் முடியும் நீ யறிதிமற்
றவை இவன் சிறுவிரற் சுட்டியறிவான்



சோனை மழை யெனஅமுது பொழிகிரணன் நீஇவன் சுக
கருணை யமுது பொழிவான் துன்னிருள் கிழித்தெழுஞ்
சோதிநீ யிவனடியர் துகளிருள் கிழித்தசோதி
யான இம் முறைமைகொடு நீநிகர்தி யான்மகிழ்ந் தம்புலீ
யாடவாவே அருமறையின் ஒலிநிலவு சமரபுரி முருகனுடன்
அம்புலீ யாடவாவே. ௧

63 சுரர்சிலர்க் கமுதுதவி நீதேய்வை கதியமுது தொல்லுயிர்க்
குதவிநிறைவான் தோமுறு களங்கன்நீ யிவனடியர்
கனவினுஞ் சொல்லுறு களங்கம் அறியார்
உரஅரவி னுக்குநீ வெருவுவாய் அஃதுமிவன் ஊர்பரிக்
கொருகவளமாம் உலகைவலம் வரவுனக் கொருதினஞ்
செல்லும் இவன் ஒருநொடியி லோடி வருவான்
இரவினுக் குரியவொளி நீயிவன் அகம்புறத் தெக்காலும்
மிக்கவொளியான் எய்துதண் ணளிசிலர்க் குடையநீ
யனைவர்க்கும் இவனெண்ணு தண்ணளியினுன்
அரன்முத லெவர்க்குமொரு குரவனிவ னாதலால் அம்புலீ
யாடவாவே அருமறையின் ஒலிநிலவு சமரபுரி முருகனுடன்
அம்புலீ யாடவாவே. ௨

64 மயிலும்அயி லுங்கொண்டு வன்பகை தனிக்கலாம் மலரடித் தோணி
கொண்டுன் மாருத பவசலதி யேழுங் கடக்கலாம் வானுலகு தொழ
வாழலாம்
வெயிலொளியும் நிகரல வெனப்புகல மெய்ஞ்ஞான மிக்க
வொளி பெற்றுய்யலாம் வீடகத் துலையா திருந்தமு தருந்
தலாம் மிகு துகட் சிறைகடியலாங்
குயிலனைய மொழியார் முகத்தினுக் கொப்பெனக் கூறுத
பெருமையுறலாங் கொடியகய நோயகன் றெப்பொழுதும்
ஒல்காத குலிசமென வடிவுபெறலாம்
அயிலைமுள ரிக்கரங் கொண்டசே வகனுடன் அம்புலீ
யாடவாவே அருமறையின் ஒலிநிலவு சமரபுரி முருக
னுடன் அம்புலீ யாடவாவே. ௩

65 கஞ்சா தனத்தனைச் சிறையிடுவன் முத்தமிழ்க் கவிஞனைச் சிறைவிடுப்
பன் கடியசூன் றடுவன் இருள் கடியுங் குணக்குன்று
கனகும்ப னுக்கருளுவன்
எஞ்சாத கடலழித் தரிவைமுரு காவென்றிசைக்க அருள் வாரிதருவன்
இகலவுணர் களைகட்டடைந்த கடவுளரெனும் இரும்பயிர்
தழைப்பவைப்பன்

ஞ்சாய சமணர்கழு வேறவிட் டடியர்நா டோறுமீ டேற
வருவன் நவைதழுவு புத்தன் முடியிடறியழ லடும்என்பை
நளினமங் கைக்கிணை செய்வன்
அஞ்சா திருந்திடே லிவன்வெகுளி கொளுமுனம் அம்புலீ
யாடவாவே அருமறையின் ஒலிநிலவு சமரபுரி முருக
னுடன் அம்புலீ யாடவாவே. ௪

66 முக்கணு மகனரிய திருநுதற் குறுவியர்வின் மூரிவட
வையினுதித்தோன் மூதண்ட கோளகை கிழித்தெழுந்
தாயிர முகந்தொறும் வெகுளிபொழியத்
தக்கன்மக சாலையுட் புக்கியங் குறைகின்ற சதகோடி
தேவரையெலாஞ் சாடிக் கொழுங்குருதி யாடிப் பெருந்
தூளியாடித் தருக்கியாடி
மிக்கவுன துடலமொரு கறியாக மாநிலம் மிகுத்தபே ரம்மி
யாக மேன்மைதரு பாதவெங் குழவிகொ டரைத்தனன்
வியர்வினு லவனையுதவும்
அக்கடவுள் கட்கனல மிக்குழவி நீவிரைந் தம்புலீ யாட
வாவே அருமறையின் ஒலிநிலவு சமரபுரி முருகனுடன்
அம்புலீ யாடவாவே. ௫

67 விரவுபல அண்டங்க ளிவன் உட்டை யெனவைத்து விளை
யாடு பைங்கழற்காய் விரிகருவி யாருறு மிவனேவல் தலை
கொண்ட வீறாழி யக்காரராம்
பொருவரிய இருமாயை யிவனுளம் நினைத்தபடி புரிகின்ற
தாதியர்களாம் பூரணத் திரள்ஞான வாரியெழு சுவைய
முதுபோசன மிவன் தனக்கே
கருதரிய மறைநாலு மிவனர சிருக்குமொரு கதிர்மணிச்
சிங்க அணையாங் ககனசுரர் அனைவரும இவனைப் பணிந்
துகை கட்டும் பெருஞ்சேனையாம்
அரிபிரம ரிவனுக் கமைச்சராம் ஆதலால் அம்புலீ யாட
வாவே அருமறையின் ஒலிநிலவு சமரபுரி முருகனுடன்
அம்புலீ யாடவாவே. ௬

68 மேகசா லங்களென நீலக் கலாபம் விரித்துவிச் சித்ரகிரி
போல் விண்டுவினை மேவியோர் சண்டநா கத்தனை விடுத்த
வனை வேலைமூழ்கப்
பாகுவா ரிதியளறு படமொண்டு சிவலோக பரியந்த மேவி
நின்று பரமனுல கும்பரந் தாமனுல கும்பரி மளிக்கின்ற
கமலனுலகும்



போகமலி கற்பகா டவிநீழல் வாழ்வே பொலிந்தபுரு கூத
னுலகும் புகருலகு மதியுலகு கதிருலகு பூவுலகு பொங்கப்
பொழிந்து மீளும்
ஆங்கிறைவர் பின்வருந் தோகைஇறை தன்னுடன் அம்புலீ
யாடவாவே அருமறையின் ஒலிநிலவு சமரபுரி முருக
னுடன் அம்புலீ யாடவாவே. ௭

69 புலன்மறுகு பொறியையுறு கமடமென வுட்கொண்டு
பொருமுக் குணங்கள் வென்று பூரகம் இரேசகந் தாரக
மெனுந்தொழில் புகன்றகா லிற்பயின்று
கலகமறு நடுநாடி சென்றுமுச் சுடர்களின் கதிர்மண்
டலங்கடந்து கணபணு டவியுரகன் முடியிற் றுளக்கம்
அறு கம்பத்தின் அசைவற்றுளோர்
மலஇரவு விடியமிகு துறவுணர்வு நசையறுதல் மலிகுணக்
குன்றின் முடிமேல் மன்னுஞா னக்கதி ரெழுந்தொளி
பரப்ப மாருதுதச நாதமுழுதும்
அலகில்பவ துயிலறக் கூவுசே வலனுடன் அம்புலீ யாட
வாவே அருமறையின் ஒலிநிலவு சமரபுரி முருகனுடன்
அம்புலீ யாடவாவே. ௮

70 கானவர் குலமட மானை மணந்த கடம்பன் கரைபொரு
நீர்க் கஞ்சச் சரவண அணைமிசை தனில்நனி கண்துயில்
சிறுகுழவி
ஆனவுன் மனைவி வளர்த்திடு மகனிவன் அம்மான் உர
லோடே அன்றளை திருடிக் கட்டுணி இடையன் அனையுஞ்
சிறுவாலை
ஊனமில் அத்தன் பித்தன் இவற்கென் றுன்னி யிருந்து
விடேல் உலக சராசர மிவன்முத் தொழில்விட வுண்டோ
கண்டிகொலோ
வானவர் சேனு பதியுடன் ஆடிட வாஅம் புலிவாவே
மலிசம ராபுரி முருகன தருகே வாஅம் புலிவாவே. ௯

71 குறுமுள் தாள்நெட் டிதழ்வெண் கமலக் கோயி லிருந்த
வள்தன் கொழுநன் தொழில்தந் திடவோ பச்சைக்
கொண்டற் கிணைசெயவோ
தறுகண் சிறுகண் தழைசெவி வெள்ளைத் தந்திக் கரசுறை
யுந் தருநிழல் தரவோ துருவ னிருக்குந் தங்கக் கிரிதரவோ

பிறவிப் பகையைத் தெறவோ தண்கலை பிரியா தருள்
தரவோ பேசறும் மறுவில ரியாவரு நிற்கப் பேரரு
ளேதறியேம்
மறுவற் றுளநினை வாவா என்றனன் வாஅம் புலிவாவே
மலிசம ராபுரி முருகன தருகே வாஅம் புலிவாவே. ௰

---

## 8. சிறுபறைப் பருவம்

72 தனகருவ டெனநிலவு வீரவா குத்தலைவர் ககனமுக டளா
வும் இரதக் கணமணி முழக்குங் கவுட்குழி திறந்துபாய்
கலுழிமத கரிமுழக்கும்
மனகதியி னைப்பொருவு குரகத முழக்கொடு வயப்பூத
கணமுழக்கும் வால்வளை முழக்கும்அதி பேரிகை முழக்கும்
அகல் வானவர்கள் முடிமுழக்கும்
பனகஅணை துயிலுமவன் முதலினோ ருபயதிசை பல்லாண்டு சொலு
முழக்கும் படிறவுண மாசுணக் குருமெனச் செவிபுகப்
பண்டுசூர் வென்றசதுரா
தினகரனை நிகர்சமர புரியிலுறை குமரவேள் சிறுபறை
முழக்கியருளே செறிகலப மயில்முதுகி னுதயசின் மயதூய
சிறுபறை முழக்கியருளே. ௧

73 குடமுழா வாணன்ஆ யிரகரங்கொண்டு குமுகுமென வேமுழக்கக்
கொண்டலின் திறக்கடவுள் முழவொலி முழக்கவிரி கோகனக மாலிகை
யினுன்
தடமருவு கைத்தாள நற்றொலி முழக்கஅந் தமருகத் தொனி
முழக்கத் தாரளி முழக்கமறை நூபுர முழக்கவிரு(து)
ஆள்கள்தா ளம்முழக்க
அடல்நதி யிரைக்கமணி யரவுக ளிரைக்கஉமை அலறமுய
லகன் நெளிவுற ஆடக மணிச்சபையின் நாடகம் இழைத்துமைக்
கன்புசெயு மின்பவடிவோன்
திடமருவு குமரனே சமரபுரிமுருகனே சிறுபறை முழக்கியருளே
செறிகலப மயில்முதுகி னுதயசின் மயதூய சிறுபறை
முழக்கியருளே. ௨

74 ஆறுசம யக்கடவுள் வேறுவே றின்றியான் ஒருவனே யங்கங்கிருந்
தன்பர்க்கு முத்திதரு வித்தென்று யாவர்க்கும் அறிவித்த வதனமணியே



வீறசுரர் துஞ்சவெஞ் சிறைவிண்டு வானவர்கள் விண்
ணகத் தமுதருந்த வெற்றிமுர சன்றுனது சேனைவா ரிதி
யிடை வியப்புற முழங்குமுறைபோல்
மாறுபடு காமாதி வெம்படைகள் துஞ்சிட மலச்சிறை
கழன் றுஞான மாவிண் ணகத்திருந் தாலந்த அமுதெனது
வாய்மடுத் துண்ண அறிவில்
தேறுமறை நாதமென நினதுமுள ரிக்கரச் சிறுபறை
முழக்கியருளே செறிகலப மயில்முதுகி னுதயசின் மயதூய
சிறுபறை முழக்கியருளே. ௩

75 கட்டைமுள் தழுவுதாள் நெட்டித மூடுத்தசெங் கமலநான்
முகனகினமுங் கவுத்துவ மணிப்பணியொ டம்போரு
காடவி கலித்தபச் சைப்பன்றியும்
மட்டுலவு சீர்பாதம் இன்றளவு கண்டிலா வானவனு
மோரொருவரை வழிவருஞ் சரியாதி வருவித்து வீடுதரும்
வனை தமிழ்க் காழிமேவி
அட்டுணையும் அறிவரும் அனந்தசீ வரைவநுவை என்றுபோ
ரிட்டமைந்தங் கிரும்புண்ட நீரில் திரும்பாத வீடுதரும் இனியாகவு
ணியர்விளக்கே
திட்டமொடு வரமுதவு சமரபுரி முருகவேள் சிறுபறை
முழக்கியருளே செறிகலப மயில்முதுகி னுதயசின் மயதூய
சிறுபறை முழக்கியருளே. ௪

76 வெளியில்வளி யசைவற்று நின்றவா றமலஉளம் மிளிர்
பரத் திலயமாகி மெய்த்தவ மிறைப்பவர்க் ககல்வான நதி
நீர் வியன்தொளைக் கரநிமிர்த்தங்
களியொடுங் கரிமொண்டு குண்டிகை நிறைப்ப அலவற்
பகைக் கவிகள்தாவி அங்கற் பகக்கனி கொணர்ந்துவந்
திக்கஅனு தினமுமவ ரறையும்மறை நூல்
கிளிகள்பயி லக்கஅன கந்தருவர் வந்தமுத கீதநா தம்முழக்
குங் கிளர்சந்த னப்பொங்கர் மலிசாரல் கயிலையங் கிரிவார
வள நிகர்க்குந்
தெளிவுதரு சமரபுரி தனில்நிலவு குமரவேள் சிறுபறை
முழக்கியருளே செறிகலப மயில்முதுகி னுதயசின் மயதூய
சிறுபறை முழக்கியருளே. ௫

77 புகர்படு தொண்டை நிமிர்த்துச் சிகிவாய் பொருவக்
கரிமதியிற் பொங்கமு தள்ளிப் பிடிகளி பெருகப் போழ்
வாய் வழியூற்றி

மகவுடு தடவும் பொழில்படு முகில்வாய் மணிநீர் திணிதர
ளம் வாரி யிறைத்துக் கற்பக நற்குழை மலர்நறை சொரி
தரவே

தகர முறித்துக் கயமுனி பகுவாய் தந்தப் பிடிநுதலைத்
தைவந் தருகி லணைத்து மணந்திடு சண்பக மலர்துயி லுங்

குகைபடு சாரற் போரூ ரிறையே கொட்டுக சிறுபறையே
கொத்துறு முத்தமிழ் மெத்தவ ளர்த்தவ கொட்டுக
சிறுபறையே. ௬

78 அளைகடை முடைகது வியதளிர் வடிவத் தாய்ச்சியர் மத்
தொலியும் அங்குட மடிமுலை விம்மிக் கன்றுளி ஆன்நிரை
கத்தொலியுங்

கிளைபடு தொளைவழி விரல்விடு தொறுவர்கள் கீதக் குழ
லொலியுங் கேழ்செறி கானக் கோழிகள் முறைமுறை
கிட்டிக் கூவொலியும்

விளைதரு தளவத் தளிபல விளரி விளக்கிய சீரொலியும்
விடியற் காலைக் கடலைப் பொருவ மிகுத்தெழு மாமுல்லைக்

குளமலி கண்ணன் தருபோ ரூரிறை கொட்டுக சிறு
பறையே கொத்துறு முத்தமிழ் மெத்தவ ளர்த்தவ கொட்
டுக சிறுபறையே. ௭

79 கிளிமொழி புகல்வார் கீதம் பயில்வார் கின்னரி வாசிப்
பார் கேழ்கலன் அணிவார் மாலைகள் புனைவார் கிளர்
மயில் நடமிடுவார்

அளிசுழல் பூம்பந் தெறிவார் குங்குமம் அள்ளி யிறைத்
திடுவார் ஆடவர் புயவணை மீதிற் றுயில்வார் அழகு பணிக்
கருள்வார்

களிறிடை வருவார் சிவிகையில் வருவார் கவனப் பரிவரு
வார் காமன்இல் வருவார் மாமன்இல் வருவார் கஞ்சன்
இல் வந்தருள்வார்

குளிர்தமிழ் புனைவார் திகழ்போ ரூரிறை கொட்டுக சிறுபறையே கொத்
துறு முத்தமிழ் மெத்தவ ளர்த்தவ கொட்டுக சிறுபறையே. ௮

80 உதடு கடந்த நெடும்பலும் உள்குழி கணும்எக் கியவயி
றும் ஊரர வங்கள் நெளிந்திடு செவிகளும் உளநெட்
டைப்பலபேய்



கதழெரி வெம்பசி யற்றனம் என்று களிப்பொடு கைகொட்
டக் ககனர்க் கரசிகல் அற்றனம் என்றணி கடகத் தோள்
கொட்ட

மதமலி யவுண ருளம்பறை கொட்டிட வானவர் நகரி
யெலாம் மன்னிய வீரப் பேரிகை கொட்ட மணிக்குடர்
உதிரநிணங்

குதிகொளும் வெற்றிச் சத்தி தரித்தோய் கொட்டுக சிறு
பறையே கொத்துறு முத்தமிழ் மெத்த வளர்த்தவ கொட்
டுக சிறுபறையே. ௯

81 மரகத மணிக்குவடு தழைசிறை விரித்துரகன் மணிமுடி
நெளிக்க இருமூ வளமுள முடிப்பவள வரையினை யெடுத்து
நடமிடலென மயிற்பரியின்மேல்
அருள்விழி கொழிக்கமுக மதிநில வெறிக்கநினை அடியவர்
களிக்கவருவோய் அமணர்கள் பிதற்றுகலை யலைகடல்முழக்
கம்அற அருமறை முழக்கமுறையே
இருமதுரை யிற்பெரிய நதிவிடு திருப்பதிகம் எதிர்செல விடுத்த பெரு
மான் இருளென மலைக்கும்மல மறவுன தடிக்கமலம் எனது
புன் முடிக்கண் அருள்வோய்
செருவள முழக்குநிசி சரர்கெட வுருத்தஇறை சிறுபறை
முழக்கியருளே செழுமணி மதிற்சமர புரியிலுறை சிற்
பரம சிறுபறை முழக்கி யருளே. ௧௦

---

## 9. சிற்றிற் பருவம்

82 தேமாங் கனியின் அடுப்பமைத்துத் திகழூன் கழிந்த வலம்
புரியிற் செந்தே னுலைப்பெய் தரவீன்ற செழுமா மணி
வெங் கனல் மூட்டிப்
பூமா தளையின் விதையரிசி புகட்டிச் சமைத்துக் கதலி
மடற் பொங்கப் பிழியும் அதன் கனியும் பொருந்த
அளவிக் கறியட்டுக்
காமா தவிப்பூம் பந்தரிடைக் கயற்கண் ஆயம் இழைத்த
வண்டல் கருதும் புவன கோடியெல்லாங் கரந்தும் படைத்துங்
காக்குமொரு
சீமான் உனக்கோரிலக் கோசொல் சிறியேஞ் சிற்றில்
சிதையேலே தேரூர் வீதிப் போரூரா சிறியேஞ் சிற்றில்
சிதையேலே. ௧

83 அங்கைத் தலத்திற் குண்டகழ் நீர் அடக்கு முனிவர் ஏறணையான் அகத்தின் ஞான விளக்கேற்றும் அடிகேள் பவள விளக்கவியேல்
செங்கண் திரள்மெய் யுடையோற்குச் செழுங்கற் பகத்தின் நிழல் தருவோய் செந்தேன் துளிக்குங் குருந்தநிழல் திர்க்கேல் மேன்மேற் புடைத்தெழுந்த
கொங்கைச் சுமையோ டருங்களபங் கூடச் சுமந்து வாடு மிடைக் கொம்பர் அரம்பை மடமகளிர் குலவச் சிதையா வீடளித்தோய்
திங்கட் கிரண நித்திலப்பூஞ்சிற்றில் சிதையேல் சிதையேலே
தேரூர் வீதிப் போரூரா சிறியோஞ் சிற்றில் சிதையேலே.

84 விரையாயிருக்கும் ஐந்தெழுத்தும் வேதாகமமும் முத்தமிழும்
விளங் குந்தசரியாதிகள் நான்கும் விரும்பிய மெய்ச் சிவமதமுஞ்
சுதையா நரிக்குந் திருநீறுஞ் சோதி நயனத் திருமணியுந்
துகள் தீரபத்தி விதி செறியின் தொடர்புஞ் செடிதீர் மெய்யடி [யார்
இதயாலயந்தைப் பிரியாதங்கிருந்து தீர்ஞான மணிவிளக்கும்
இலங்கு மவுனந் துளும்பாத இன்பவளனுஞ் சந்ததமுஞ்
சிதையாதளிக்கு மோரிறையே சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தேரூர் வீதிப் போரூராசிறியேஞ்சிற்றில் சிதையேலே. ௩

85 மறையின் சிரமெய் வாச்சியமும் மருவுங் கருவி யாறுநின் வயங்கு முடியிற் பேரருளும் வானோர் முடியின் நறுந் தொடையுங்
கறைகொள் மிடற்றோன் திருப்புயத்துக் கடியா ரிதழிச் செழுந்தாருங் கவுரி கருணை நறவு பொழி கண்ணென் கமலத் தண்மலரும்
அறையுந் தனிகை மலைச்சுனைக்குள் அலரும் மலரும் மணக்குமன தருஞ்சீறடிசிற் றிலிற் புழுதி அளவி மணப்பத் தகுமோதான்
சிறைவண் டோகைக் கிறையோனே சிறியேஞ் சிற்றில் சிதையேலே தேரூர் வீதிப் போரூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. ௪

86 அடியார் நிமலத் திருவகத்துள் அன்பு பொறுமை யவாவறுத்தல்
அடுப்பாங் கமைத்து மலக்காட்டந் தகிக ஞானக் கனல்மூட்டி
மடியா திருந்த வுயிர்க்கலசம் வழிய அருட்பே ருலைவார்த்து
மாருப்பெருமைச் சிவானந்த மதுரச் சோறு தினம்பொங்கி



விடியாச் சிவ போதஇருள் வீய மவுனச் சுடர்விளக்கு [ஞ்
விளக்கி யிருந்த படியிருந்து மேலாஞ் சிற்றில் விளையாடு
செடிதீ ரகத்தோர் புகழ்வாலை சிறுவா சிற்றில் சிதையேலே
தேரூர் வீதிப் போரூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

87 ஆறு வதன தாமரைகள் அலரு மதுரச் சுவைமடுவே
அடியார் இதய தாமரையுள் அரும்பி மாறுப் பரிமளமே
வீறும் அமரர் கணஞ்சூழ்ந்து வியப்ப முளைத்த முழுமதியே
வெள்வா ளவுணக் கருங்கடலை விழுங்கி யெழுந்த வடவனலே
மாறுபடுபுன் சமயவன மலைத்து முறித்த மதகளிறே
மாயாப் பிறவிக் கனலவிய வளருங் கருணை பொழிகாரே
தேறு முயிருட் பூரணமே சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தேரூர் வீதிப் போரூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

88 கரியின் கோடும் அகில்திரளுங் கடிச்சந் தனமுங் கழைமணியுங் கடுவூற் றிருந்த தொளையெயிற்றுக் கடுங்கண் அரவின் முழுமணியும்
விரியுந் தரங்கக் கரங்கள்கொடு விரவிக் கொழித்து நிலங்கிழித்து வேலை புகுதப் பாதலத்தில் மிளிரும் இராச வுரகபடம்
பரியும் மணிகள் நீர்கதுவல் பரிதி யுருவம் பலஎடுத்துப் பரமா னந்தக் கடல்படிவான் பரிந்து மூழ்கித் தவஞ் செயல்போல்
தெரியும் பாலித் திருநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தேரூர் வீதிப் போரூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. ௭

89 தருவிற் படரும் வல்லியெனத் தகுமா டவரை மடவார்கள் தழுவப் புயத்தின் முலைக்கோடு தைப்பத் தெரியல் முகையுடைந்து
மூருகூற் றெழுந்து துகில்நனைக்கும் மூரிச் சுதைமா ளிகை யிழைத்த முதிரும் பதும ராகவொளி முழுமீன் திகழும் அகல்வானப்
பருநித் திலவெண் பந்தருக்குப் பவள நெடுங்கால் பலநாட்டும் பண்பா மதியம் பந்தர்நடுப் பால்வெண தரளப் புஞ்ச மெனத்
தெரியும் பாலித் திருநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தேரூர் வீதிப் போரூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. ௮

90 கமலக் களைசெந் நெலிற்களையுங் கடைச்சி மகளிர் வளை
யொலியாற் கயல்போய்க் கரும்பை வளைத்தொடிப்பக்
கலித்த கொழுஞ்சா றெழுகுவழித்

தமரக் களிவண் டொழுங்கேறல் சம்ப ராரி நாணேற்றுந்
தனுவைப் பொருவ மலரோடை தருக்கு மவன்தூ ணியை
நிகர்ப்ப

நிமலக் கமுகின் குடப்பணில நிலவுக் கவிகை தனையேய்ப்ப
நெடுமா ளிகையின் மகளிர்அவன் நேரும் ஞாயிற் படை
யேய்க்குந்

திமிலப் பாலித் திருநாடா சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தேரூர் வீதிப் போரூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

91 அருணன் தபனஞ் செவ்விளநீர் அகற்றப் பசும்பொற்
புரவியிளைப் பாறும்பும் பொதும்பில் துயில்முகில்நீர் ஆற்றக்
கமுகு குடைநிழற்றக்

கருவின் இருந்து நிமிர்ந்துதலை கவிழ்க்குஞ் சாலிக் கதிர்
கற்றைக் கவரி மருங்கின் காலசைப்பக் கடிச்சண் பகங்கள்
மணம் வீசத்

தருணவாழை யாலவட்டஞ் சந்தப் பொதியக் காலெறியத்
தரணி யிதயங் களிசிறப்பத் தயங்கு மணித்தேர் மெலச்
செலுத்துந்

திருவண் பாலிச் செழுநாடா சிறியேஞ் சிற்றில் சிதை
யேலே தேரூர் வீதிப் போரூரா சிறியேஞ் சிற்றில்
சிதையேலே. ௧௦

## 10. சிறுதேர்ப் பருவம்

92 மதுகரம் புக்கிடற விரைநறுங் குறியமுகை வாய்விண்டு
மடல் மடக்கி மதுமாரி பொழிகின்ற தொங்கலஆ
கண்டலன் வயத்தொடுந் தேருருட்ட

விதுகரமும் மட்கவோ ராயிர கரங்கொண்டு வேலையிருள்
அள்ளியுண்டு வெற்பின்முடி யெழுகடவுள் சூர்மகற்
கஞ்சாது வியன்மணித் தேருருட்டக்

கதமெழரிச் செங்குஞ்சி வெண்பற் பசுங்கட் கரும்பேய்கள்
அவுணருடலக் கார்வரை யுருட்டமால் அட்டதிசை தன
தானை கைக்கொள்சக் கரமுருட்டச்



சிதைவறு பெருந்தே ருருட்டும்போ ரூரிறைவ சிறுதே
ருருட்டியருளே சிமயமொய்த் திடுமிமய மயில்வயிற் றுதய
மணி சிறுதே ருருட்டியருளே. ௧

93 மறுகுவெளி யெறியுங் கடுஞ்சிறைப் புலிநக வளைத்துண்ட
வெண்டலைச்செம் மாமுது குடைக்கருடன் மீதிவர்ந்
தொளிபெருகு மரகத நிறக்கடவுளும்

முறுகெரி கடுக்குஞ்சி கைப்பவள வாய்வெண்மை மொய்த்த
சிறை விள்ளா அடி மூதோதி மத்திவர்ந் தாரண முழக்குநா
முண்டக மனைக்கடவுளுங்

குறுகியிரு புறனும்வர நடுஇடைப் பைஞ்சிறைக் குரகதங்
கடவியடியார் குறைகளைந் தாறுமதி வதனவழி கருணைபொழி கோண்
டலே யண்டர்அரசே

சிறுகிடைப் பெருமுலைத் தேவகுஞ் சரிகணவ சிறுதே
ருருட்டியருளே சிமயமொய்த் திடுமிமய மயில்வயிற் றுதய
மணி சிறுதே ருருட்டியருளே. ௨

94 பாதஇகி ரியுமெலும் புப்பெரும் பலகையும் பகர்நாடி
யுருவாணியும் பரியமரு மத்தட்டும் அரியசீர்க் கூவிரம்
படிறுசெறி பொறியாடியுங்

காதல்தரு குஞ்சிக்கொ டிஞ்சியும் பலமொழி கலித்தபல்
லியராசியுங் கனைமொடு மலிந்தவுட லெனவுரை தரும்
பெரிய கடுவேக முடையநாறு

பேதமுறு தேர்கள்மீ தாருயிர்ப் பிளையைப் பிறங்கிட
விரா த்தி வெற்றிப் பேசரு மனப்புரவி கட்டிவினை வட
வழிப் பெருமநின் னருள் வலவனால்

தீதற நடத்திடச் செய்தகும ரேசனே சிறுதே ருருட்டி
யருளே சிமயமொய்த் திடுமிமய மயில்வயிற் றுதயமணி
சிறுதே ருருட்டியருளே. ௩

95 உலகினொடு சரஅசர மெவையுமாய் ஒன்றினொடும் ஒருபற்
றிலாதபொருளாய் உறுமறிவை யறிவிடத் தெழுகின்ற
சிற்றசைவில் உயிருலகு மயல்பரமும்

இலகுமவை யெங்ஙன மெனிற்கருதும் அறிவொன்ற தெழு
நினைவு சுட்டுபொருளென் றிவையோ ரிரண்டையும்
இணைத்தும் பிரித்தும் இயக்கிவரு பொருளொன்றுயாங்

கலகமுறும் அந்தகனை வின்றுகின் முப்பொருளு மின்று
பர கதியுமிதுவே காணென்று கடையேனை வாவென்று
முடிமீது கஞ்சமல ரடிதரித்தென்
சிலைமனங் கனிசெய்த குமாசற் குரவனே சிறுதே
ருருட்டியருளே சிமயமொய்த் திடுமிமய மயில்வயிற் றுதய
மணி சிறுதே ருருட்டியருளே. ௪

96 ஒருபொரு ளிடத்தினிற் சச்சிதா னந்தமுடன் உருவநா
மமுமுள்ளதென் றுரைதந்து முன்னர்பின ருண்டாய்
விளங்கியுறு பிரியமா யுளமூன் றுளே
மருளிரிய வருமெய்ம்மை யுருவநா மம்பொய்ம்மை வன்
பழுதை யுரகவுருவின் மாறு தறிந்திடுதி பின்பழுதை
நன்று மதித்தவர்க் கரவின்மையின்
இருளறும் பிரமமே நிகழுமற் றொருபொருளும் எதிரிட்
டிலங்காதென ஏழ்பிறவி வாரிதியி லாழுமென வாவென்
றெடுத்தருள் அளித்தகுரவா
தெருளுறுங் கலைமுனிவர் பரவுபோ ரூர்முருக சிறுதே
ருருட்டியருளே சிமயமொய்த் திடுமிமய மயில்வயிற்
றுதயமணி சிறுதே ருருட்டியருளே. ௫

97 வடவைக் கனலென வுதரக் கனல்மிக மண்டப் பசிவிஞ்சி
மண்டையின் மூளையை யளையென முதுபேய் வாரி விழுங்க
அதின்
புடையிற் சிறுபேய் கெஞ்சிக் கெஞ்சிப் பொருமி
யழத்தேர்கள் புணரிக் கலனிற் குருதிக் கடலிற் போகக்
காகநிற
மிடறற் றுடு கவந்தக் குழுவினை விரிதலை முதுகூளி
வெங்களை நாடக சாலையி லாட்ட வெகுண்டெழும்
அவுணர்கணத்
துடலைக் கறியின் அரைத்தெழு தேர வுருட்டுக சிறுதேரே
உமையொரு பாகற் கருமைக் குமரன் உருட்டுக சிறுதேரே.

98 கவைதரு குறுமுள் தாள்ஞெண் டாகுறு கண்டற்
கரியெயிறு காணென வெண்முகை யுண்டாய் விண்டது
காலுந் துகளள்ளி
நவையறு பெடைஞெண் டுங்குத விப்பகல் நள்ளிருள்
அலைமனைவாய் நண்புறும் அஃதொடு புக்குக் கொண்டல்
நறுங்குறு துளிவீசத்



தவநனி குளிரான் உலையக் கடல்தன் தண்திரை வண்
கையால் தரளக் கதவும் பவளக் கதவுந் தந்தம் மனைமூடும்
உவமையில் நெய்தற் போரூ ரிறைவன் உருட்டுக சிறுதேரே
உமையொரு பாகற் கருமைக் குமரன் உருட்டுக சிறுதேரே.

99 பசுமைப் புல்லிச் செந்நிற வல்லிப் பங்கே ருகமீதும்
பால்பாய் தாறொ டடுக்கும் மடல்குலை பரியுங் கதலியினும்
நசையுற் றிடுகள் தேறல் பாளை நறும்பூ கத்திடையும்
நவைதீர் ஈர்வாள் நெட்டிலை முண்டக நகுவெண் துணர்
தோறுந்
திசையுற் றருமணம் வீசுபுன் னாகஞ் செறிபுளி னத்தி
டையுஞ் சினைவலை மதியமு தத்திரள் சிந்துஞ் செய்தியின்
மணிசொரியும்
உசிதக் கல்வியர் சூழ்போ ரூரன் உருட்டுக சிறுதேரே
உமையொரு பாகற் கருமைக் குமரன் உருட்டுக
சிறுதேரே. ௮

100 தரளவெண் மணியுஞ் சங்குந் துகிருந் தடவாள் வாய்
முரணுந் தண்திரை யெறியும் வண்கட லிடையே தந்திக்
கனகோடு
நரைதரு கவரியும் நாவியும் அகிலும் நற்சந் தக்குறடும்
நாடறு திரையால் உந்திப் பலநதி நண்ணுறல்
பண்ணுறவே
இருநில முழுதா ளரையர்க் கங்கங் கெய்திய நிருபரெலாம்
ஏர்திறை யிட்டங் கவனு ளடங்கி இருந்திடு முறைமானும்
உருமலி நெய்தற் போரூ ரிறைவன் உருட்டுக சிறுதேரே
உமையொரு பாகற் கருமைக் குமரன் உருட்டுக சிறு
தேரே. ௯

101 வடவரை யோரா யிரமுறை தோறும் வருங்கொடி
மினலெனவே வாடரு கவைநா நீள விரித்திடு மாசுண
ராசனையே
கடகரி யெட்டுஞ் சென்னி கவிழ்த்துக் கால்கள் மடித்
திடவெங் கடுவே கத்துட னோடிக் குத்திக் கதிர்செறி
புஞ்சமெனப்
படமுடி தாழ எடுத்துத றிப்பர தத்தின் நடித்திடுமோர்
பருமயில் கடவும் பவளக் குன்றே பால சமுத்திரமே

உடலுறு முயிர்கட் கினிதரு ளமுதம் உருட்டுக சிறுதேரே
உமையொரு பாகற் கருமைக் குமரன் உருட்டுக சிறு
தேரே. ௧௦

பிள்ளைத் தமிழ் முற்றிற்று

---

## 11. அலங்காரம்

காப்பு

102 முக்கட் பவள மலைவந்த தேனை முராரி தங்கை
பக்கத் தெடுக்கும் பரிமளப் பூவைப் பரிமயிலோற்
கொக்கத் துணைவந்த வுத்தம தேவை யுயர்பொருளைச்
செக்கச் சிவந்தநன் மால்யானை யைச்சிந்தை சேர்க்குதுமே.

நூல்

103 பூமேவு நாபனும் நான்முகத் தோனும் புரந்தரனுந்
தாமேவு வாழ்வும் அதிகார மும்பெறத் தார்புனைந்த [ன்
கோமேவு வேல்கொண் டவுணரை மாய்த்த குமரனெங்கோ
தூமேவு தாள்மலர் போரூரி லென்முடி சூட்டினனே. ௧

104 தெய்வப் பிடிவந்து சேருந் துகிர்க்கிரி செந்தளிர்போல்
மெய்வைத்த வள்ளிக் கொடிபடர் தாரு வியனுலகிற்
சைவப் பயிரை வளர்க்குந்தண் மேகம் தகைமைசெறி [வமே.
நெய்வைத்த வேல்கொண்டு போரூரி லென்றும் நிகழ்தெய்

105 கருதார் புரங்கொன்ற சேவக னூர்க்குங் களிப்புறவே
ஒருதா ரகப்பொரு ளோதிய வாவுன தன்பரைப்போல்
தருதா ரணிசொலும் நாயேனும் அன்புளந் தானுளனே
விருதாசெஞ் சேவற் சமரா புரிவரு வேலவனே. ௩

106 சிற்றறி வொன்று நினைப்பொடு நித்திரை சேர்ந்தியங்கு
மற்றிவை நீங்கி லதுதா னெவைகளு மாகிநின்ற
அற்றமில் பேரறி வூடே கலந்திடு மாயமிதே
பற்றறு முத்தியென் றுன்சம ராபுரிப் பண்ணவனே. ௪

107 எல்லார்க்கு மேலவன் நீயென் றறிந்துனை யேத்தியன்பாய்ப்
பொல்லாக் கருமலந் தீர்ந்தான் பொதியப் புகழ்முனிவன்
சொல்லாற் புனைதொங்கல் நக்கீரன் சாத்தித் துனிகடந்தான்
நல்லார்க்கு நல்லவ னேசம ராபுரி நாயகனே. ௫



108 தோட்குங் குமநக்குங் கோக்குழை மாதர்க்குந் தொல்லைமத
வேட்கும் உளங்குலைந் தேனைவி டேல்விண்டு மாமலர்க்கை
வாட்குங் கொடிய மருப்பார் மகிடன் வளைப்பிலுரு
தாட்கொண் டருளுகண் டாய்போரி வாழும் மயிலவனே.

109 அண்டஞ் சராசரம் எண்திசை யாவும் அளித்தவனுங்
கண்டங் கரிய சிவனுந் தமஅங்க ரங்களின்மேல்
மண்டன்பின் ஏந்தி முறைமுறை தந்து மகிழ்மதலாய்
தொண்டன் டெனக்கு முளதோதென் போரிச் சுராதிபனே.

110 கொங்கணர் ஆரியர் ஒட்டியர் கோசலர் குச்சரராஞ்
சிங்களர் சோனகர் வங்காளர் ஈழர் தெலுங்கர்கொங்கர்
அங்கர் கலிங்கர்கன் னடர் துருக்க ரனைவருமே
தங்கள்தங் கட்கிறை நீயென்பர் போரிச் சரவணனே. ௮

111 மான்கூட் டிறைச்சிசெந் தேன்தோய்த் தருந்தும் வன
சரர்மான், கூன்கோட் டிளம்பிறை நெற்றிக்கும் வேலிணைக்
கூர்விழிக்கும், கான்கூட்ட மாமலர்க் கூந்தற்குங் கொங்
கைக்குங் காதல்கொண்டோன், தேன்கூட்டம் வாழ்
பொழிற் போரூர னென்குரு தேசிகனே. ௯

112 கோக்குஞ் சரமத நாற்றந் தவிர்த்துக் குலநரந்தந்
தேக்கும் புழுகு மணம்வீசும் போரியெந் தேவன்செவ்வேள்
நோக்கும் விழியருள் போக்கும் பிணியினை நூபுரத்தாள்
காக்கும் பவம்புக வொட்டா நமக்கென் கவலைநெஞ்சே.

113 ஆயர் குழலிசை கேட்கும் பணமுடி யாடரவம்
வாயையங் காந்து மணிகா லுதல்வள்ளல் பாடல்கொண்டு
தூய கொடைகொடுத் தாங்குறும் போரிச் சுராதிபனை
நாயக னைக்கும ரேசனை நாடுவர் ஞானிகளே. ௧௧

114 இடமுறச் சூழும் முழைதொறும் நாகம் எரிபுரையும்
படமணிச் சென்னி யெடுத்தாள்தன் மங்கலப் பந்தரிலே
சுடர்மணித் தண்டினைச் சூழ விளக்கிட்ட சோதியொக்குந்
தடவரைப் போரிச் சரவண நாயகன் தஞ்செனக்கே. ௧௨

115 பிடிபார்த் தலற எயினச் சிறுர்கள் பிரிந்தகன்றைக் [சூழ்
கொடியாற் பிணித்ததன் மேலேறி யாடுங் குளிர்பொழில்
அடிவாரப் போரிப் பதிவே லவனைவந் தண்டினனென்
குடியார்க்கு நல்லகதிவாய்த்த தென்றுளங் கொண்டனனே.

116 தோகை நடித்திட வேடச் சிறுமைத் தோற்பறையை
நாகம் பறித்துலர் வாகைநெற் றுட்கொட்ட நாடியளி
ஓகை தரும்பண் ணிசைபாடுஞ்சந்தன வொண்பொழில்சூழ்
மாகர் தொழுந்திருப் போரூரன் தாளென் மதிவிழியே.

117 மேகங்கள் சூற்கொண்டு சாரற் படிந்து மிகக்குமுற
நாகங்கள் கோடிறப் பாயத் தெறித்த நகைத்தரள
மோகந் தருங்குற மின்னார்கள் மேலுற மொய்த்தெதிர்பார்த்
தாகந் தடவிய போரூர்க் குகனென் னருட்டந்தையே. ௧௫

118 வரைமுத் தொளிரும் பளிக்கா டரங்கின் மயில்நடித்தல்
புரையில் சசிமண் டலத்தாடல் மாதர் புரிவதொக்கும்
விரவுற்ற சாரலம் போரூர் விசாகன் விரைமலர்த்தாள்
உரையற் றுளர்வீற் றுயரின்ப மாகிய வுள்ளொளியே. ௧௬

119 பளிக்கறை யூடு தருக்குழைப் பாயலிற் பள்ளிகொண்டே
களிக்குறு மாகந் தருவர்தங் கீதமுங் காரத்தினால்
விளக்குறு மேனிலத் தோகையர் கீதமும் வேறறவே
கிளக்க லுறுந்திருப் போரூரன் அன்பர்தங் கேண்மையனே.

120 கருநாகத் தொண்டைக் கயமுனிக் கூட்டங்கள் கல்லுச்சில்லுப்
பொருநாசிக் கேழ லுடனுடுஞ் சாரலம் போரிச்செவ்வேள்
இருபாத தாமரை யேத்தி வணங்கியெந் நாளுநினைந்
தொருவா திருந்திலை நெஞ்சேயென் வீணி லுழன்றனையே.

121 அகிலேந்து நல்ல முகிலேய்ந்த கூந்தல் அரிவையர்தம்
நகிலேந்தும் ஆர வடம்போல் அருவி நகந்திகழும்
முகிலேந்தும் மாடநம் போரூர்க் குகன்பத முண்டகத்தைத்
தகவேந்து நெஞ்சினர் மேன்மத வேளெய்யத் தானஞ்சுமே.

122 மதுவார்த் திடுகடம் போலே மயக்குறு மாதரையோர்
கொதுகாக் கருதுறுங் காலமுண் டோகொடி யேன்றனக்கே
விதுவாற் சலந்தருங் கற்சுனை யூடு விளங்குபிடி
சதுராக் குடைந்து விளையாடும் போரிச் சரவணனே. ௨௰

123 அள்ளித் தெளித்தன்ன கள்ளிவெங் கீழ லுறுகுழைதான்
அள்ளிப் புனலெனப் பேய்த்தேரை நாடி நலிவதுபோல் [ள்
உள்ளிப் பொய் வாழ்வினை யூர் தொறுஞ் சென் றுழலா தெனையா
வெள்ளிப்பொருப்பினன் மைந்தாதென் போரியில்வேலவனே.

124 முடைமாற முல்லை குழல்சூடும் ஆய்ச்சியர் மூதனைதான்
கடைதோறும் ஆரத்தின மார்பில் தெறித்திடக் கன்றுதுள்ளும்



புடைபாய் உழுவை குமுறுமென் றிங்கிலப் போரியெங்கோன்
படைவேல் துணையுண் டெமக்கொரு நாளும் பயமில்லையே.

125 பூவையுங் கோவும் அசுணமும் நாகமும் பூம்பொறிக்கான்
சேவலுஞ் சித்திரம் போற்கேட் டுறங்கச்சிறார்ப்பொதுவர்
தூவருந் தீங்குழ லோசை வளர்க்கின்ற தொல்லைமுல்லைத்
தேவருந் தேடும் பொருள்போரி வேலன் திருவடியே ௨௩

126 கட்டான் நிரம்பி யகவிதழ் கீன்றெழு கஞ்சமுடன்
முட்டா துவைத்திட மேதி தெறித்தொளிர முத்தையன்னப்
புட்டான் சினையென்ற ணைக்கின்ற போரிப் புனிதச் செவ்வேள்
மட்டாருஞ் சேவடி தொட்டா லெமக்குநல் வாழ்வுளதே.

127 மடுப்ப மயக்கிடை கொண்டேகுநெஞ்சினை மாற்றியென்னை
எடுப்ப துனக்குக் கடனைய னேயெழில் கூர்பழனத்
துடுப்பு முகக்கொழுச் செல்கின்ற சீதையி லூறியநீர்
கடுப்ப வனசப் பிழியூறும் போரியன் காங்கெயனே. ௨௫

128 பச்சைக் குடைதிருப் புந்தகைப் பாசடை யூடுருவ
மெச்சக் கடைசியர் சேல்பாயும் போரிவிசாகனெங்கோன்
கொச்சைச் சிறியனை யிந்நாளும் பண்ணிய கோகனகத்
தச்சற் கினியெனைப் பண்ணக் கொடானிது சத்தியமே.

129 விருந்துண்டு பின்னைக் குபசாரஞ் செய்யும் விதத்தின்நத்துப்
பொருந்துஞ் சரோருகத் தேனுண்டு முத்தமிழ் போரியிலோர்
மருந்துண்ட தன்பெயர் செவ்வே ளஃதென் மலப்பிணியுந்
திருந்து முடற்பிணி தன்னையும் போக்கிடுஞ் சித்தமிதே.

130 தண்டா மரையில் அனப்பே டுறவது தன்னருகே
வெண்டா மரையிரண் டாலுதல் வாணிக்கு வெண்கவரி
கொண்டார வீசுதல் போலுறும் போரிக் குகனிருதாள்
கண்டாலும் இன்பக் கடல்வந்து கோக்குங்கருத்தினையே.

131 வண்டுகிண டக்கஞ்சம் விண்டுகண் தேன்சிந்த வால்வளைகள்
கண்டயின் றின்புறும் போரூர் முருகன் கழலிணைக்கே
தொண்டுவந் தின்புறு வோர்பாத தாமரைத் தூளென்சென்னி
கொண்டுவந் தேன்மலம் விண்டேன் பரகதி கூடினனே. ௨௯

132 கன்னிய ராடிக் கழித்தகத் தூரி கயல்மணக்கும்
மன்னிய வாவி திகழ்சம ராபுரி மாமயிலோன் [வையேல்
பொன்னியல் கிண்கிணித் தாளையுந் தோளையும் போற்று
உன்னிய யாவு முறுநெஞ்ச மேயுண்மை யுண்மையிதே.

133 வள்ளைக் கொடிச்செவி சைவலக் கூந்தங் வனசமுகந்
தெள்ளூற்ற நீலக்கண் ணைம்பற்செவ் வாய்திக ழுந்திகிரிப்
புள்ளுக் குயமன்னப் பேட்டு நடையுடைப் பொய்கைமங்கை
நள்ளத் திகழ்கின்ற போரூர் விசாகனை நாடுளமே. ௩௧

134 கருப்புத் திரளை யறுத்துச் செறித்த கனைசகட
மருப்புப் பகட்டைக் கழையால் உழவர்கள் மாறுதொறும்
விருப்புற்ற முத்துத் தெறித்தொளிர் சாளர வீடுபுகுந்
திருப்பெற்ற போரிக் குகன்தா ளறிஞர்க்குத் தித்திக்குமே. ௩௨

135 கரண்டம் அடிக்கடி நீர்மூழ்கி யாங்குக் கயலெடுத்தே [கு
மருண்டமென் னேக்கியர் முன்காட்டல் நுங்கண் மலர்விழிக்
வெருண்ட கயலன் றிதுபார்மி னென்று விளம்பலொக்குந்
தெருண்டவர் சூழ்திருப் போரூரின் தேவர் சிரோமணியே.

136 காளைச் சலப்பெயர் நாயின மூழ்கக் கயமடுவில்
ஆளைப் பகட்டுறும் வாளைப் பகட்டினம் அம்பினிற்போய்ப்
பாளைக் கமுகின் மிடறறப் பாய்ந்துநெற் பண்ணைபுகுங்
கேளொத்த போரிக் குகனன்ப ரேயென் கிளைஞர்களே.

137 கருக்கடல் நாயடி யேன்புகு தாவகை காத்துமுத்திப்,
பெருக்குறு மின்பத் திருத்துகண் டாய்பெரு நீர்க்கரையின்,
வருக்கை வெடித்தெழு செஞ்சாற்றுச் சேற்றில் வழுக்கிநத்
துக், குருக்கொளும் முத்துமிழ் போரூர்ச் சடானனக்
கோக்கொண்டலே. ௩௫

138 வீட்டின்ப நாடி யிருப்போர் தமக்கும் விடயசுக [வே
நாட்டங்கொண் டாங்கவர் போலிருப் போர்க்கும் நலனுற
காட்டும் உவமைய தாக்கொக்கு நீர்மடைக் கண்ணிலகுந்
தீட்டும் புகழ்கொண்ட போரூரன் வேல்சுரர் தேவதையே.

139 வாவிக் கரைக்கமு கேகொக்கு நீழல் வயங்கத்தெண்ணீர்
தாவிக் கயலதைக் கண்டே வெருவுதல் தன்கனவின்
மேவுற்ற காட்சி நனவிற்கண் டாங்கு விளங்கலுறும்
பூவிற் றிருத்திகழ் போரூர்க் குகன்பதம் போற்றுளமே.

பச்சை நிறத்த நிறைநீர்க் குடங்கள் பலசுமந்தே
உச்சியி லுற்ற கதிரோனுக் கீயு முயர்ந்துளதெங்
140 கெச்ச மறச்செறி போரூர்ச்செவ் வேளை யிறைஞ்சிநின்னைப்
பிச்சைநெஞ் சேயடு கின்றனன் பாரேன்பிர தாபத்தையே.



141 சாறூற் றெழுந்து கணுவுடைத் தோடுந் தழைக்கரும்பை
வீறேற்று வாழைக் குலையொடு மாசினி வீழ்ந்தொடித்துச்
சேறுக் கியவயற் போரூர் முருகன்நந் தீதகற்றிப்
பேறுக் கருணைசெய் தேநெஞ்ச மேதரும் பேரின்பமே. ௩௯

142 பவளக் கொடியிற் பிணித்தூசல் புன்னையிற் பார்வைமயற்
குவளைக்கண் கற்கு மடமாத ராடவக் கோடரும்பைத்
தவளத் தரள மழைபோ லவர்மெய் தனிற்சொரியுந்
திவளுற்ற போரிக் குமரேசன் என்குல தேவதையே. ௪௦

143 வல்லைத் துரந்த முலைநுனை மாதர் வனையெறியப்
பல்லைத் திறந்துறும் அக்கவி தாலப் பழமெறியும்
தொல்லைத் திருத்திகழ் போரூர்க் குகன்பதஞ் சூடும்சென்னிக்
கில்லைப் பிரமன் னயநுறக் கீறும் எழுத்துக்களே. ௪௧

144 வாடைக் கொதுங்கிடப்பார்ப்புகள்வெள்ளை வனசங்கள்மேல்
தேடிப் பெடையனந் தன்பா லணைத்துறுந் தீதில் நெய்தல்
நீடத் திகழ்கின்ற போரூர் விசாகன் நிமலபதம்
நாடிக் களிப்பவர்க் குண்டோ நுயரெனும் நாமங்களே. ௪௨

145 செக்கர்க் கிடையின் உடுக்கூட்ட மென்னத் திரைகளினால்
தொக்கப் படுந்துகிர் வண்டலின்மீது சுரிமுகங்கள்
கக்கப் படுமுத் தொளிருந்தென் போரியிற் காங்கெயனைப்
பக்கத் துடன்பணி வாரவரேசுக பாரணரே. ௪௩

146 வண்டணை யாக்கொண்டுகண் தூங்கும்பூங் குழல்மாதரையே
கண்டனை யாயுனுங் காலமுண் டோகடை யேன்றனக்கே
ஞெண்டினங்கேதகைத் தாதரித் துண்டறல் நீடுபொய்கைத்
தண்டுறை ஞெண்டுடன் ஆடிடும் போரிச் சரவணனே.

147 சந்திர காந்த மணிமாடத் தூடுதன் சாயைகண்டோர்
பைந்தொடி மாது தலைவனென் றூடப் பரிந்தவனே
சுந்தர ஆடி நிழற்காட்டி யின்புறு சொற்புகலுஞ்
செந்திருப் போரிக் குகனைக்கண் டார்க்குண்டு சித்திகளே.

148 ஏதங் கருதினர் செல்மினென் றேயும் இதங்கருதும்
போதஞ் சிறந்தவர் வம்மினென் றேயும் புகல்வனபோல்
வாதஞ் செறியக் கொடியாடும் போரி வரதன்தண்டை
நாதங்கள் யோகியர் யோகினிற் காண்குறு நாதங்களே.

149 தேரூர் இரவி வலவன்கை மீது செழுங்கொடிகள்
ஏராகத் தாக்குத லெங்கோன அயிலொளிக் கெய்துமுள்கோல்

நேரோசொல் நில்லென்று போரூர்கைக் கொண்டு நிறுத்த
சீருரும் இந்நக ரேகயி லாயந் தெளிந்தவர்க்கே. [லொக்குஞ்

150 மனப்பரி சோர இறுமாந்து நாவி மதம்பொழியுந்
தனக்களிற் றன்ன முருகா குகாஎன்று தானுரைப்பப்
புனக்கிளி கற்கின்ற போரூர் இறையைப் புகழ்ந்தவரைச்
சினக்கனல் காமக் கனலும்விட் டோடுந் திசைப்புறனே.

151 மதிகொண்ட பூச்சக்ர வாளக்குடையின் வருநிழற்கீழ்த்
துதிகொண்ட யானைப் பிடர்மேல் வருமச் சுகந்தனிலும்
நதிகொண்ட பேரன்பி னுற்போரி வேலனை நண்ணியின்பக்
கதிகொண்ட மேலவர் கால்தலை தாங்கல் கனசுகமே. ௪௯

152 அளகா புரியன்ன பட்டணத் தேசுதை யால்வனைந்த
களவார் முகில்படி மாடத்தி னூடு களித்தலினும்
புளகா டவியெழ மெய்ப்போரி வேலனைப் போற்றியுய்வார்
வளவார் புறந்திண்ணை வைகுத லேதமில் மாசுகமே. ௫௦

153 உள்ளக் கவலை யெலாமொழிந் தேன்ஒழி யாதுசெய்யுங்
கள்ளக் கருமங்கள் யாவும்விண் டேன்கலை வாணியுடன்
வள்ளக் கமல மலர்மாது தந்தருள் வாழ்வடைந்தேன்
தெள்ளத் தெளிந்தனன் போரூர் முருகனைச் சேவைசெய்தே. ௫௧

154 பூதர விற்கொண் டவுணரை மாய்த்த புராரிமைந்தன்
ஆதர வாலணிப் போரூ ரிருந்திங் கவனருளாற்
சீதர நன்மரு காமுரு காஎன்று செப்பினன்பின்
தாதரம் போலுறுந் தீவினை யாவுந் தணந்தனவே. ௫௨

155 வட்டாடல் போலப் பிறப்பதுஞ் சாவது மாக்கிஎன்றும்
ஒட்டாரஞ் செய்கின்ற மாயை புணர்ந்தும்உணர வொட்டா
தட்டாவ தானஞ் செயுஞ்சீ வரைப்பொய்மை யாயிருந்தும்
கட்டாணி யானமுத் தேசம ராபுரிக் காங்கெயனே. ௫௩

156 ஆள்வேட்டம் ஆடும் அயில்விழி மாதர் அமைசடந்த [டே
தாள்வேட்ட புன்னெஞ்ச மேயது சீவரைச் சூழ்ந்துகொண்
வேள்வேட்டம் ஆடுவ தாங்கேகல் போரி விசாகன்இரு
தாள்வேட்டு நாடுதி மேல்வீட்டின் இன்பந் தழைத்துறுமே.

157 ஆறு சமயருந் தம்மிலொவ் வாதங் கலைவதென்னே
தேறும் அறிவின ரெல்லாம் அறிந்துந் தெளிந்திலரே
பேறு தருந்தெய்வம் யாவைக்கும் யான்பெருந் தேவனென்றே
வீறு முகங்கொண்டு போரூர் முருகன் விளக்கியதே. ௫௫



158 மற்றவர் நிற்க மெய்ஞ்ஞானி கள்வம்மின் வகுத்துரைக்கேன்
உற்றது கேண்மினெம் போரூர் முருகன் உயர்கதியை
நற்றமிழ்க் காழிவந் தெண்ணிலி பேர்க்கு நயந்தளித்தான்
கொற்றம் அவன தலாலெவர்க் குண்டினிக் கூறுமினே.

159 கரும்பாற் செய்வேலி சுரும்பார்க்கும் போரியங் காங்கெயன்
திரும்பாச் சுகந்தரு வீடவ தற்குஞ் சிறப்புடனே [போல்
பெரும்பாற் றிருத்தரு பெற்றிக்குந் தேவர் பிறரிலையென்
றிரும்பாற் கடற்றுயின் றோன்நெய்யி னாடுகை யிட்டனனே.

160 வேதனெங் கேயவன் தாதையெங் கேவிண்ணின் நண்ணுபுரு
கூதனெங் கேமிகு தேவரெங் கேகுறை யாததவப்
போதரெங் கேயற மாதியெங் கேதிருப் போரியில்வாழ்
நாதனெங் கோனவ ரைப்போலச் சூரையும் நாடிடிலே.

161 திருநீல கண்டம்வெந் தீவினை தீண்டப் பெறாதெனவே
கருநீல கண்டனைப் பாடி யடியரைக் காத்தவன்எம்
உருமே லிருந்த பிணியையும் மாற்றுவன் உண்மைநெஞ்சே
இருநீல வாவிநம் போரூ ரனைப்பணிந் தேத்துவையே. ௫௯

162 அஞ்ஞானத் தாலடி யேன்பிழை செய்யினு மாரருள்சேர்
மெய்ஞ்ஞானத் தாய்பொறுத் தாட்கொள்ள வேண்டும் வியன்மறைதேர்
செஞ்ஞானத் தார்புகழ் போரூர்முருக செகமுயிராம்
பொய்ஞ்ஞானக் கூட்டத்துக் குட்புறனாகியபூ ரணனே.

163 புரங்கொன்ற தேவெள்ளி மாமலை நீலப் புயமலைமேல்
உரங்கொண் டெடுத்தவன் ஈரைந்து சென்னியும் ஊடுறவே
கரங்கொண்ட வாளியி னாலெய்த மாயன் கனமருகா
திரங்கொண்ட போரி முருகாஎன் தீவினை தீர்த்தருளே.

164 நெஞ்சைக் கலக்குறுஞ் சேலோ டிரண்டுடை நேரிழையார்
வஞ்சக் கலவிமெய் யென்றே மயங்கினை வன்னெஞ்சமே
துஞ்சற்கும் வந்து பிறத்தற்கும் ஏதது சொற்கதிசேர்ந்
துஞ்சற்கு நீதிருப் போரூர்க் குகனை யுறப்பணியே. ௬௨

165 கொலையாதி செய்தவ ராயினும் அன்பு குணம்பொறுமை
இலையாம் உளத்தின ராயினும் போரி இசைந்துகுண
மலைபோ லிருந்த வடிவே லனைவந்து வாழ்த்தினரேல்
தொலையாமெய்ஞ் ஞான மடைவார் பின் மேவுந் துயரிலரே.

166 இமையாக் கருங்கண் முலையானை மாதரை யெண்ணிபெண்ணிச்
சுமையாகப் பாவஞ் சுமக்குநெஞ் சேயிது துன்புகண்டாய்

சமயாதி யாறும் உடையோர்க்கு வீடு தரும் பெருமான்
நமையாட்கொள் போரிக் குமரேசன் சேவடி நாடின்பமே. ௬௪

167 சடையாம் பவளக் கொடிபடர் பேரின்ப சாகரத்தே
கடையா தெழுந்த சுகவா ரமுதினைக் கஞ்சம்ஒன்று
புடைதோன்றும் உந்திப் புணரி மருகனைப் புண்ணியனை
யிடைதீரப் போரியிற் கண்டேன் கதியின்ப மேவினனே.

168 மேருப் பொருப்பினைச் சென்றே வியன் அண்ட கூடமுட்டுஞ்
சூரப்பொருப்பைத் தொளைத்தவை வேலவன் துங்கன் எங்கோ
போரிப் பிரான்எம் பிழைபொறுத் தாலன்ன பூதலத்தே [ன்
பாரிப் படிபொறுப் பார்சொல்க நீயிங் கறிந்துள்ளமே. ௬௬

169 அண்டப்பரப்பினைக் கண்டோர் நொடிவரும் ஆய்ந்தபச்சைக்
கொண்டற் சிறைப்பெரு மாமயி லோன்குகன் எங்கள் ஐயன்
தண்டைத்திருப்பதம் போரூரில்வானவர் தம்முடிமேல் [மே.
தொண்டுற்ற பேர்முடி மேல்மறை மேலென்றுந் தோன்றிடு

170 தரைபகச் சீத்துத் திசையதி ரச்சிறை தான்புடைத்தே
எரிநிறச் சென்னி நிமிர்த்து வளைத்தெண் புவிநகவாய்
விரைவுறத் தோன்றத் திறந்தூழி மேக மெனத்தொனிக்கும்
பொருகொடிச் சேவலன் போரூரனூரினும் புண்ணியனே.

171 நதிபிறை கொன்றை செறிசென்னி மூன்றுகண் நான்குபுயந்
துதியிரு தாள்நிகழ் மாணிக்க வெற்பைத் தொடர்ந்துபடர்
கதிதரு பச்சைக் கொடிதோன்றும் இன்பக் கனிஅளகை
அதிவளம் மேவிய போரூரில் வந்தெமை யாட்கொண்டதே.

172 நன்மை நினைத்துன் திருவடி சேர நயக்குமென்னைப் [னேன்
புன்மை நினைந்துளங் கொண்டேகநொந்தனன் பொய்ம்மையி
மும்மை யழிக்குறும் இன்பன்நம் போரி முருகப்பிரான்
செம்மை யளிக்கும் நினைவினை வேண்டுஞ் சிறியனுக்கே.

173 அவுணக் கருங்கடல் செங்கட லாக்கு மணிநெடுவேற்[காற்
சிவனுற்ற தோட்கிரிச் சேவகன்தன்னைச் செழுங்கொடிக்
கவனுற்ற கைக்குற மானைத் திருடிய கள்வன்தன்னைக்
குவடுற்ற சாரலம் போரியி லேகண்டு கொண்டனனே. ௭௧

174 கோலக் கருங்குயி லேமயி லேயென்று கொஞ்சுமலை
வாலைப் பருவமின் தந்தருள் ஆனந்த மாமுகிலைச்
சோலைப் புயல்மலர்த் தேன்பொழி போரிச் சுராதிபனை
மாலைக் கடந்த மனத்திற்கண் டார்க்குண்டு வாழ்வுகளே.



175 நீரிற் கயலெனக் கண்ணீர் துலங்கிநெஞ் சைக்கவற்று
நாரிச் சமனையும் நம்புவ ரோநல னேகொடுக்கும்
போரிப் பதியெங் குமரேசன் தாட்கன்பு பூண்டுநித்தஞ்
சீரிற் பெரிய கதிமேவி யின்பஞ் செறிபவரே. ௭௩

176 சூரன் கிளைகளைந் தெண்ணிலி தேவர் துயர்களைந்து
வீரஞ் சிறந்த நவவீரர் முன்னவன் வேலையில்மேய்ந்
தாரம் புயல்துயில் போரூர் முருகன் அருளெனக்குச்
சீருங் குணமும் மருவுந் தவமும்நற் செல்வமுமே. ௭௪

177 இருகோட் டொருமதி சூடும் பிரான்மகிழ்ந் தின்புறவே
திருகோட்டு போதம்உரைசெய்த தேசிகன் செங்குழையாற்
குருகோட்டி மாதர் விளையாடும் போரிகைக் கூப்பினரைப்[மே.
பொருகோட் டொருமையன் கண்டாலும அஞ்சிப்புறஞ்செல்லு

178 ஆரணன் நாரணன் இன்னமுங் காண்டற் கரியபரி
பூரணந் தோன்றிய பூரண னேதிருப் போரியில்வாழ்
காரண னேயொரு நாள்நீ யளித்த கரையில்சுக
பாரணம் என்றருள் வாய்கடை யேற்கெம் பரம்பொருளே.

179 மெய்வேடம் பூண்டவர்க் குள்ளும் புறனும் விளங்கும் பிரான், போய்வேடம் பூண்டனன் என்றாலுங் காத்தனை பூங்கணையால், எய்வேட னல்வருந் தாதெனை யாளினி யேய்ந்ததினை, கொய்வேடமானை மணந்தோய்தென் போரிக் குணக் கொண்டலே. ௭௭

180 அருணகிரிப்பெயர் மெய்ஞ்ஞான நாதன்சொல் லால்வனைந்த
பொருநை நதிக்கீரி யான்புகழ் மாலை புனைபுயனே
கருணை மிகுத்தென்னை யாண்டாய்க்கும் ஈண்டுகைம் மாறு
தருண வளத்தின னேசம ராபுரிச் சண்முகனே. [ளதோ

181 மாலோன் விருந்தையை யுண்டாக்கிக் கொண்டிலன் மாமலரோன், மேலான நன்சிரம் ஒன்றுக்கிக் கொண்டிலன் மீதுயர்ந்த, நாலா மறைபுகழ் போரூரன் சம்பந்த நாமங்கொண்டே, நூலாம் இடைமயி லாக்கினன் என்னை நொடியினிலே. ௭௯

182 சகல மதங்களை யெல்லா முணர்ந்த தவமுனிவோர்
புகலும் இலக்கம்எண் ணாயிரம் பேரைப் பொருகழுவில்
இகலற வைத்தும் வரும்ஏத மொன்றின்றி யேயிருந்தான்
திகழுறும் போரியின் சம்பந்த நாமஞ் சிறந்துகொண்டே.

183 எண்ணற் கரிய சமணக் களைகளைந் தேதமிலாத்
தண்ணுற்ற பேரருள் நீர்பாய்ச்சிச் சைவப் பயிர்வளர்ந்து
நண்ணச் சிவானந்த போகம் விளைவிக்கும் நல்உழவன்
விண்ணுற்ற தேவருஞ் சூழ்போரி வாழ்கின்ற வேலவனே.

184 தாருகன் கோளரி மாமுகன் கொக்கின் தனதுபெயர்க்
காருறு மால்வரை சூதம்வெஞ் சூரகங் காய்ந்தவைவேல்
பேருறு வோர்தமைக் காலனுந் தீண்டப் பெறுன்எனிலே
போரியென் நாயகன் தாட்கே சரணம் புகுநெஞ்சமே.

185 ஆருயிர் யாவைக்கும் ஆனந்தத் தேனை யளிக்கமுக்கண்
தாருவி னுற்கவி மாமழை யேபொழி தண்முகிலே
காரிருள் மாமலந் தீர்த்தெனை யாளக் கடனுனக்கே
சீருறு தேசிக னேபோரி மாநகர்ச் சிற்பரனே. ௮௩

186 வீரத் தவுண ருயிர்களை மேய்ந்து விரைவின் அவர், சோரிக்
கடலிடை யாடிக் குடர்த்தொங்கல் சூடிவெற்றிக், கூருற்ற
வேல்கரங் கொண்டோன் தென்போரிக் குமரன் என்மேல்,
சீருற்ற பேரருள் வைத்தான் இஃதென் தெளிந்திலனே.

187 தேவரும் நாகரும் யாவரும் மும்முறை தெண்டனிட
மேவரும் மாமகு டத்தின் இராசிகள் மீதொளிருந்
தூவரு மாமணி ராசிகள் மேவித் தொடச்செவந்த
பூவரு தாளினன் போரூர்க் குகனெனும் புங்கவனே. ௮௫

188 கொக்கரித் தேவருந் தானவர் சேனையைக் கொன்றுழக்கி
மிக்கரத் தக்கட லாடிப் பிணமலை மீதிவர்ந்து
செக்கரில் தோன்றுங் கணநாதர் சேவிக்குஞ் சேவடியான்
இக்கரிக் குஞ்சுரும் பார்க்கின்ற போரிக் கிறையவனே.

189 மணிகொண்ட சேடன் படர்முடி தூக்கி மணியுதறித்
திணிகொண்ட மால்வரை மாடே பறந்துறச் சேண்பறந்தங்
கணிகொண்ட தேவர் தொழச்சென்று மீண்டிங்ககவுமெம்மைக்
குணில்கொண்ட பேரிகை யார்க்கின்ற போரிக் குகன்மயிலே.

190 வாரிசுழல வடவரை யாதி வரைசுழலக்
காரொடு சந்திர சூரியர் மீன்கறங் காச்சுழலக்
கூரிருள் யாக்கை அரக்கர் சுழன்றிடக் கோதில்பச்சைத்
தேரென வட்டம் வரும்போரி வேலன் சிறைமயிலே. ௮௮

191 மின்னல் சுடர்விழு தோட்டு மணிக்குழை மெல்லியலார்
பொன்னுற்றபூண் முலைவேட்ட நெஞ்சே யிதுபொய்ம்மயக்கே



தனைத் தலைவனை யாராய்ந் தடையுந் தகைமையின்புக்
கென்னப்ப னாகிய போரூர்ச்செவ் வேளை யிறைஞ்சுவையே.

192 முகடிடித் துச்சக்ர வாளத்தை முட்டிவெம் மூரியெட்டுப்
பகடுகுத் திக்கனல் சிந்திடப் பார்த்துப் பரவையெல்லாம்
அகடுறத் தேக்கி விடுத்துறத் தாவி யரைக்கணம்போய்க்
ககனமுற் றும்வரும் போரூரன் ஏறுங் கனதகரே. ௯௰

193 மகுடங்க ளாறுங் குழையோர் பனிரண்டும் வானவரும்
புகழுங் கடகங்கள் ஈராறும் ஆழியும் பூனதப்பொன்
திகழும தாணியுஞ் செந்துகிர் ஆடையுஞ் செஞ்சிலம்பும்
நிகழும் படிதரித் தோர்தெய்வம் போரி நிலாவியதே. ௯௧

194 நின்பாத தாமரைக் கன்பேது மின்றிய நீசன்பொல்லேன்
புன்போத மேலிட்ட பொய்யேன் பிழையைப் பொறுத்தருளாய்
அம்போ ருகமலர் ஓரா றலர்ந்த அருட்கடலே
செம்போரி வேலவ னேயிமை யோர்கள் சிகாமணியே. ௯௨

195 செப்புக் கவித்தன்ன வன்குரத் தால்மண் சிதைத்தெறியுந்
துப்புற்ற மாவிற் கிளையாக வோதினர் சொல்கணத்தே
ஒப்பற்ற மூவுல கும்போய்த் திரும்பு மொருமனத்தை
எப்பெற்றி யாலுரைத் தார்சம ராபுரி எண்குணனே.

196 மெய்யாம் நெறிக்கண் அடியேன் செலுத்த விலங்கிமிகு
பொய்யாம் நெறிக்கண் எனைக்கொடு போமுளப் போர்க்களிற்
ஐயா நினதரு ளாங்கயிற் றுற்பிணித் தானதண்டைச் [றை
செய்யாருந் தாட்கந்து சேர்ப்பாய்தென் போரியஞ் சேவலனே.

197 உள்ளூறு புல்வினை வெல்லா மொழிந்திங் குணர்வரிய
நள்ளிரு ளன்ன அஞ்ஞான முந்தீர்ந்து நலனுதவுந்
தெள்ளிய பேரரு ளூடே கலந்தின்பு சேர்ந்திருப்பக்
கள்ளநெஞ் சேற்கும் வருமோதென் போரியங் காங்கெயனே.

198 எல்லாப் பொருள்களுந் தானாகித் தானொன்றிலேய்வதின்று
சொல்லாற் கருதத றூற்சென்று கூடருஞ் சோதியதாம் [யச்
மல்லா ரணப்பொருள் நாயேற்கும் ஈய மதித்திகொல்லோ
நல்லார்க் கினிய குகனேதென் போரியென் னாயகனே. ௯௬

199 பண்ணிய எண்ணிய வாறே சிறியனுக் கீந்தருளும்
புண்ணிய னேநின் மகிமையை யோர்ந்திலன் பொய்யவனேன்
கண்ணுறு மாமணி யேகருத் தூறுங் கனிரசமே
தண்ணளி மாமுகி லேபோரி மேவிய சண்முகனே. ௯௭

200 உள்ளத் தழுக்கினை யெல்லா மகற்றி யுனதுபத
வள்ளக் கமலத் தெழுநற வானந்த வாரியிலே
கள்ளச் சிறியனை வைத்தாள வேண்டுங் கழனிமடை
அள்ளத் திறந்திடும் வாளைகள் போரி அயிலவனே. ௯௮

201 மலஞ்சோர் கடத்தைப் பிணிக்கூட்டை ஒன்பது வாயிற்பையை, நலஞ்சால எண்ணிக் கடையேன் களித்தன னுய்ப்புலையேன், திலஞ்சார் தயில மெனஎங்கு மான சிவானந்தத்தேன், கலந்தே களிப்பதென் றோசம ராபுரிக் காங்கெயனே. ௯௯

202 எண்ணிலி காலத்தின் பின்னரிக் காயம் இனிதளித்தாய்
நண்ணுறும் ஈதினும் மெய்ப்பத்தி யீந்திலை நாயடியேன்
பண்ணிய பாவமென் றேகும் பரகதி யென்றடைவேன்
விண்ணுறு தேவருஞ் சூழ்போரி வாழ்கின்ற வேலவனே.

203 திரவணி நீடிய போரூர்கை கூப்பிச் செழுங்கமலச்
சரவண வாவியில் நீராடித் தங்கச் சதங்கை கொஞ்சுங்
குரவணி பாதம் பணிவோர்க் கினிமை கொடுக்கும்பிரான்
அரவணி வோன்கும ராவடி யேனுன் அடைக்கலமே. ௧௦௧

---

## 12. மாலை

### காப்பு

204 மருப்புநில வாலென் மலதிமிரம் போக்குங்
கருக்கோடை போக்குமதக் காரால்—திருப்போரூர்
நிம்பத்தின் கீழிருந்து நேயர்க்கு வாழ்வளிக்குங்
கம்பக் கடமா களிறு.

### நூல்

205 பூவார்ந்த கற்பகப்பூம் பொங்கரிடத் திற்சிறந்த
தேவாய்ந்த செல்வமுதற் செல்வமெல்லாம் - தூவாய்ந்த
வேள்பணிந்த பேரழகா மேதகுபோ ரூராநின்
தாள்பணிந்தார்க் குண்டாகுந் தான். ௧

206 காழியிலே வந்து கணக்கிலாச் சீவரைநீ
டூழியின்பத் துய்த்த வொருவனே - யாழியெனுந்
துன்பத் திருந்தேனைத் தூக்கித்தென் போரூரா
இன்பத்துள் வைப்பாய் இனி. ௨



207 இருட்டறைய நோக்குவிழிக் கேற்று விளக்கென்றாழ்
பொருட்டனையே காட்டும் அதுபோல - மருட்டனையும்
மாயையினுற் பேரருளால் மாற்றி யறிவளிக்குந்
தாயனையான் போரூரன் தான். ௩

208 நாயேனுன் சீரடிக்கு நன்கல்ல செய்தாலும்
பேயேன் இழைத்த பெரும்பிழையை - நீயே
பொறுத்தாள்வ துன்கடனும் போரூரா என்னை
ஒறுத்தா லெனக்கார் உறவு. ௪

209 ஐம்பொறியாற் கண்டுபின்னர் அற்பித்தால் நாயடியேன்
எம்பெருமான் மிச்சிலுனக் கேறுமோ - வம்பனேன்
நீகாட்டக் காண்பதென நேயமுறப் போரூரா
ஆய்காட்டி தற்புதமே யாம். ௫

210 விதிவழியே நின்றுன் மிளிர்கமலத் தாளை
மதிதனழயும் அன்பால் வணங்கிக் - கதிதழையும்
அன்பரைப் போல்வேடம் அணிந்துநின்றேன் போரூரா
வன்பருக்குள் வன்பனேன் வந்து. ௬

211 இல்லறந்தான் அல்லேன் இயற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லேன் நாயினேன் - சொல்லறத்தின்
ஒன்றேனும் இல்லேன் உயர்ந்ததிருப் போரூரா
என்றேநான் ஈடேறு வேன். ௭

212 இன்போ ரணுவாய் இடரதற்கு மாமலையாம்
புன்போகம் வேண்டிப் புலம்பாதே - என்போடே
உள்ள முருகவரும் ஒண்போரூர் ஐயன்அருள்
வெள்ளமுற நெஞ்சே விரும்பு. ௮

213 மயக்கமெலா நீங்கியுன்றன் மாமலர்த்தாட் கீழே
இயக்கமறு வாரிதிபோ லென்றே - தியக்கமறு
பேரானந் தம்பெறுவேன் பேணுதிருப் போரூரா
சீராருந் தேவா தெளிந்து. ௯

214 அளகையர்கோன் வாழ்வும் அனங்கன்போல் ஏரும்
அளகவட மீன்போல் அணங்கும் - உளமதனில்
உன்னுது கைவிட் டுனைப்பிடித்தார் போரூரா
என் ஆதரவு கொண்டே னியான். ௧௦

215 வள்ளிக் கொடிபடரும் மாகற் பகதாரு
தெள்ளிப் புகழ்தெய்வச் சிந்துரமே - உள்ளிக்

களித்துவிளை யாடுங் கனகமலை போரூர்
அளித்துவிளை யாடும் அரசு. ௧௧

216 மெய்ப்பொருளாம் நின்னை விரும்பியின்ப மேவாது
பொய்ப்பொருளை நாடியிடர்ப் போந்தேனைச் - செப்பரிய
மட்டமுகார் சோலை மலிந்ததிருப் போரூரில்
கட்டமுகா காத்தாள் கடன். ௧௨

217 வள்ளையார் ஓடை மலிபோரூர் ஆறுமுகப்
பிள்ளையார் பாதம் பிடிநெஞ்சே - கொள்ளையார்
வன்பிறப்பு நீங்கும் நமை வாரிதிபோல் வந்தடருந்
துன்பிறக்குங் கூடுஞ் சுகம். ௧௩

218 இருளிற் கிடந்த எனையன்றே தூக்கி
அருளைத் தரத்தனுவே யாதி - தெருளுற்றுத்
தந்தவனீ மற்றவையைத் தந்ததுபோல் நிற்கிதல்
எந்தவகை போரூ ரனே. ௧௪

219 இடர்களையும் இன்பக் கரும்பை யெமது
தொடர்பிறவி நீக்குந் துணையைத் - தொடர்பாகி
உள்ளும் புறமும் ஒளிவிசுர் போரூரில்
தெள்ளுமணி யைநெஞ்சே சேர். ௧௫

220 சேர்ந்து நமதுசெய லற்றமுடி மேற்சேர்த்தி
ஆர்ந்தகளி மேன்மேலும் ஆக்கியே - சார்ந்தெவனும்
பொங்கி மணக்கும் இன்பப் போரூரன் தாட்பூவைத்
தங்கி மனமே தருக்கு. ௧௬

221 முடித்தேன் களித்தேன் முசிப்பெல்லாம் மாறிக்
குடித்தேன் ஆனந்தக் கொழுந்தேன் - நடித்தேன்விண்
ஆர்ஊரர் போற்றி யடிபணிந்து நின்றுதொழும்
போரூரன் பாதாம் புயம். ௧௭

222 அருளே வடிவாகி ஆனந்த வாரிப்
பொருளாய்யான் என்னதெனல் போமோ - மருளேதும்
இல்லானே போரூர் இறைவனே நாயேற்கு
நல்லானே சொல்லாய் நயந்து. ௧௮

223 என்னை விழுங்கி யிருக்கநீ ஆனந்தந்
தன்னை விழுங்கித் தருக்கநான் - அன்னையினுஞ்
சால அருள் புரிந்த சற்குரவா போரூரா
ஏலமருள் செய்யேல் இனி. ௧௯



224 படல முரித்தவிழி பானுவைக்கண் டாற்போல்
உடலமுத லாணவநோ யோட்டி - அடியிணையைக்
காட்டியநீ மீட்டுங் கனமயக்கிற் போரூரா
கூட்டியெனை யாட்டாதாட் கொள். ௨௦

225 எனதபிமா னம்பிடித்த இந்த வுடலாதி
உனதபிமா னம்பிடித்தாய் உற்றே - எனதாகக்
கொண்டேன் மயக்கங் குலையுநாள் எந்தநாள்
கண்டேபோ ரூரா கழறு. ௨௧

226 எனக்கவலம் வாராமல் எந்நாளுங் காத்து
மனக்கவலை மாற்றும் மருந்தாம் - புனச்சிறுமி
முத்துவடக் கோடுமுத முந்நான்கு தோளுடையான்
தத்துபுனற் போரூரன் தாள். ௨௨

227 பொருப்பெனவே பஞ்சின் பொதியெனினுஞ் சின்ன
நெருப்பணுகில் நீறுகு மாப்போல் - விருப்பமுடன்
உன்னைத் தொடர்வார்க் குறுபவநோய் போரூரா
பின்னைத் தொடரா பிறந்து. ௨௩

228 கண்ணிற் கருமணியே கற்பகமே கற்றோர்கள்
உள்நிற்கும் ஓரொளியே ஓர்பொருளே - எண்ணிற்கும்
போரூர் இறையே புனிதநிறை ஆனந்தச்
சீரூரில் நாயேனைச் சேர். ௨௪

229 வேல்கண்டேன் தோளில் வியன்சதங்கை மொய்த்திருந்த
கால்கண்டேன் ஆறுமுகங் கண்டேனே - நீல்கொண்ட
மாயூரங் கண்டேன் வளமைதரு போரூரிற்
போயூரங் கண்டேன் புகுந்து. ௨௫

230 தாயாம் எனக்குரிய தாதையாஞ் சற்குருவாந்
தேயாக் கருணைபொழி தெய்வமாம் - மாயப்
பொருள்நீக்கும் அன்பர் புனிதவீ டேற
இருள் நீக்கும் போரூர் இறை. ௨௬

231 கேட்டதெல்லாம் பாலிக்குங் கேடிலாத் தாதாவும்
வீட்டுநெறி காட்டும் வியன்குருவும் - நாட்டமென
உள்நின்று நாயேற் கொளிகாட்டுஞ் சிற்பரனும்
எண்ணின்ற போரூர் இறை. ௨௭

232 ஐம்பொறியாற் போகம் அயின்றாலும் நாயேனுன்
செம்பதுமத் தாளிணையே சிந்திக்க - உம்பருக்குந்

காண அரி தாம்இன்பங் காணத்தென் போரூரா
பூண அருளே புரி. ௨௮

233 அன்பெலாம் நின்பாலே யாக்கி யடியேனுன்
இன்பெலாம் உண்டிங் கிளைப்பாறக் - கொன்புனைவேற்
கையாதென் போரூரிற் காங்கேயா வீடுதவும்
ஐயாநீ கண்பார்த் தருள். ௨௯

234 நீலக் கடல்முகட்டில் நேருதய சூரியன்போற்
கோலக் கலாபக் குரகதமேல் - சாலவும்நீ
தோன்றி யடியேன் துயர்தீரப் போரூரா
ஊன்றியடி யென்முடிமேல் ஓது. ௩௦

235 மலையரையன் ஈன்றபிடி வாழ்ந்துதவும் யானை
கலையரைய னைப்புடைத்த காளை - சிலையரையன்
மாப்பிளைதென் போரூரின் மாணிக்கச் செஞ்சதங்கைக்
கால்பிளை நாயேனுர் கதி. ௩௧

236 ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே - நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற ஆறுநீ பேசு. ௩௨

237 முக்கரணத் தாலும் முசியா துணைப்பணியுந்
தக்கவர்கள் தாள்தா மரைமீது - புக்கபொடி
ஒன்றினும் என்சென்னிக் கோரணியாப் போரூரா
சென்றுறுவேன் வீடு தெளிந்து. ௩௩

238 மூவாசை கொண்டு முசிக்குநெஞ்சே போரூரில்
தேவாசை கொள்ளத் தெரியாதோ - தேவாசை
கொண்டாயேல் நம்தங் குறைகளெல்லாம் இக்கணமே
விண்டாயே கண்டாயே வீடு. ௩௪

239 குழவி யழுத குரல்கேட்ட தாய்வந்
தழுதகண்ணீர் மாற்றி அமுதூட்டுங் - கெழுதகைபோல்
நாயேன் இடர்களைந்து நல்லருளூட் டும்போரூர்ச்
சேயேநம் தாயாகுந் தேர். ௩௫

240 கலங்கினேன் கண்ணீருன் கையால் துடைத்தே
அலங்கிலைவேல் ஆறுமுகத் தையா - புலன்கரணங்
கண்டறியா இன்பங் கடையேற்குப் போரூரா
உண்டறியத் தந்தாள் உவந்து. ௩௬



241 மலைமுழையில் உற்றாலென் மாமருந் துண்டாலென்
கலைமுழுதுங் கற்றாலென் காணார் - இலைநிலவு
வேல்பிடித்த கையான் வியன்போரூர் ஐயன்இரு
கால்பிடித்தார் காண்பார் கதி. ௩௭

242 விருப்பமுட னேபணியும் மெய்யன் பரையும்
இருப்புநெஞ்ச என்போ லியையுங் - கருப்பிரதக்
கட்டியார் தீஞ்சுவைபோற் காதலர்க்கீ யும்போரூர்ச்
செட்டியார் தாம்அறிவார் தேர்ந்து. ௩௮

243 கோழிப் பதாகையுஞ்சீர்க் கோலமயில் வாகனமும்
ஆழிப் பெருக்குறிஞ்சி யார்வேலும் - வாழியெனத்
தோத்திரஞ்செய் போரூரிற் சுந்தரனார் பேரருளோர்
மாத்திரையில் நெஞ்சே வரும். ௩௯

244 அயிலேந்து தோளானை ஆறுமுகத் தானை
மயிலேந்து தாளானை வாழ்த்திப் - புயலேந்து
தண்டலையார் போரூர்ச் சரவணனை நெஞ்சமே
கண்டலையா துற்றார் களி. ௪௦

245 புயல்போற் கருணை பொழிவிழியான் தன்னை
மயல்போக்கு மாமருந்தை வந்தெஞ் - செயல்போக்கும்
போதானந் தச்சுடரைப் புண்ணியனைப் போரூரில்
நாதாந் தனைமனமே நாடு. ௪௧

246 உரகபடந் தூக்கி உதறுபசுந் தோகைத்
துரகமிசைத் தோன்றுஞ் சுடரே - பரகதியில்
வாழ்ந்துய்ய நாயேன் வளமைதரும் போரூரா
சூழ்ந்தருளாய் சாலத் தொடர்ந்து. ௪௨

247 கடலைச்சே றாக்கிக் கடுவரைநீ றாக்கி
மிடலுற்ற சூரனுரம் வீட்டி - அடலுற்ற
வேல்கொண்டார் தெய்வத்தை மெய்யாகப் போரூரின்
பால்கண்டார்க் குண்டோ பவம். ௪௩

248 மறப்புநினைப் பாகி வருதிரையெந் நாளும்
புறப்படா இன்பப் புணரி - உறப்புகுந்தே
ஆடிக் களிக்கும் அருட்போரூர் ஐயனடி
கூடிக் களிக்குங் குழாம். ௪௪

249 முந்நூர் சிவிகையராய் மூரிமத யானையராய்த்
தந்துபரி மான்தேரில் தங்குநராய் - மெத்தும்

அரியா தனத்தராய் ஆளுவர் பூம்போரூர்ப்
பிரியாதான் நீறணிந்த பேர். ௪௫

250 பேய்போம் துயரம்போம் பித்தம்போம் போகாத
நோய்போம் மிடிபோம் நுவலுங்கால் - தாய்போல
நன்னிதியைப் போல நயந்ததிருப் போரூரன்
சன்னிதியைக் கண்டளவே தான். ௪௬

251 குமரா நமனென்று கூறினோர் ஓர்கால்
அமரா வதியாள்வ ரன்றி - யமராசன்
கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாயுதரப்
பைபுகுதார் சேரார் பயம். ௪௭

252 குற்றம்இழைத் தாலுங் குணமாகக் கொண்டுநம்மேல்
பற்று விடாத பழம்பொருளாம் - முத்தமழைக்
காரூர் அரையனுக்குக் கற்பகநீழற்கொடுத்த
போரூர் அரையன் நெஞ்சே போற்று. ௪௮

253 வேலும் மயிலும் விளங்குஞ் சிறுசதங்கைக்
காலும் ஈராறு கனதோளுஞ் - சால
அருளுதவும் ஆறுமுகமும்உள போரூர்ப்
பொருள்நமது நெஞ்சமே போற்று. ௪௯

254 சரவண வாவிச் சலமூழ்கி யன்பால்
குரவணி தாள்நாடிக் கைகூப்பிப் - பரகுருவே
என்றோதி வாழ்த்தி யிரும்போரூர் சூழ்ந்தவரை
நின்றோதி நெஞ்சே நினை. ௫௦

255 வேலைநினைத் தாயோ வியன்கிண் கிணிசூழ்ந்த
காலைநினைத் தாயோ கனபோரூர் - வேலையாச்
சூழ்ந்துதொழு தாயோநீ சூரியா காரிருளைப்
போழ்ந்திடுவாள் ஏதோ புகல். ௫௧

256 அம்புலியே போரூர்வந் தாறுமுகங் கண்டாயோ
நம்பும்அடி யார்சபையை நண்ணினையோ - எம்பரனைப்
பண்அளியாற் பாடினையோ பாற்கடல்போ லேவிளங்குந்
தண்அளிநிற் கேதுகாண் சாற்று. ௫௨

257 கடவுட் பிடிக்கோர் களிப்பாகும் வள்ளிக்
கொடிசுற்றத் தானுங் குலாவும் - அடியர்க்கே
எண்ணுதோறும் உள்ளத்தில் இன்பூறும் போரூரில்
கண்ணுதலான் தந்த கரும்பு. ௫௩



258 வாளைப் பகடு மடைவாய் அடைக்கவரும்
ஆளைப் பகட்டும் அணிபோரூர் - நீளிடத்தில்
ஐவண்ணம் உண்டங் கதிலோர் அரசிருக்கும்
நைவண்ணம் போகநெஞ்சே நாடு. ௫௪

259 என்போதம் நின்பாலே யீதலே நல்லறனும்
உன்போதங் கைக்கொள்வ தொண்பொருளாம்-உன்பாதத்
தானந்தம் இன்பமாம் ஆரமுதே போரூரா
மோனந்தான் வீடாகும் மொய்த்து. ௫௫

260 சூக்குமையாம் வாக்குந் துனிஆணவவுடலும்
நீக்கரிய என்போத நெஞ்சமே - போக்கி
இருந்த படியிருக்க என்றுபோ ரூரா
திருந்தவரம் பாலிப்பாய் செப்பு. ௫௬

261 ஐவாய் அவாவையும்உன் னூரடிக்கே வைப்பதலர்
மெய்யான அன்பே வியன்சலமாம் - பொய்யாத
உன்போதத் தாலறிவ தொண்சுடராம் போரூரா
என்போத நைவேத்தி யம். ௫௭

262 அமரர்க்கின் பாகும் அவுணர்க்கே கைப்பாம்
இமயப் பிடிகரத்தில் எய்துஞ் - சமயத்
தலைவனூர் மோந்துகொளச் சாரும்போ ரூரில்
கலைவலா ரேத்துங் கனி. ௫௮

263 மரகத மாமலைமேல் மாணிக்க வெற்புத்
திரகதமாய்த் தோன்றுந் திறம்போல் - வருமுனது
காட்சியினை நாயடியேன் கண்டுதொழத் தந்தருளாய்
மாட்சிதரு போரூரா வந்து. ௫௯

264 ஆணிப்பொன் என்கோ அருளாழி தானென்கோ
மாணிக்கம் என்கோ மதியென்கோ - பேணிப்
பணிவார் இருள்போக்கும் பானுஎன்கோ போரூர்க்
கணியாகுந் தெய்வத்தை யான். ௬௦

265 ஆனந்த மாகடலே யாரா அமுதமே
மோனந் தருஞ்சுடரே முத்திவித்தே - தேனந்து
கஞ்சமலர் வாவிக் கனபோரூர் ஐயாநீ
தஞ்சமெனைக் காத்தாள் சரண். ௬௧

266 பாம்பாகத் தோன்றிற் பழுதைசற்றுந் தோன்றாதாம்
பாம்பின்றாத் தோன்றிற் பழுதையே - மேம்பாடாய்ப்

பொய்தோன்றின் மெய்தோன்றா போரூரா நின்னருளால்
மெய்தோன்றிற் பொய்தோன்றா வீடு. ௬௨

267 கானலைநீ ரன்றென்று காட்டக்கண் டாலொருவன்
மாநலநீ ரென்று மயங்கல்போல் - நீநலமாய்ப்
பொய்யுலகம் பொய்யாகக் காட்டியும்போ ரூரனே
மெய்யெனவுள் ளைந்தேன் மிக. ௬௩

268 கும்ப முனிக்குக் கொடுமலங்கள் மூன்றறுந்துச்
செம்பதுமத் தாள்கொடுத்த தேசிகா - நம்ப
அறியேன் மலமறுந்தாய் அற்புதம் போரூரா
சிறியேன்மேல் என்னருளோ செப்பு. ௬௪

269 அஞ்ஞான வல்லிருள்போய் அன்பர்குணக் குன்றின்மிசை
மெய்ஞ்ஞான பானுவெளி தோன்றச் - செஞ்ஞான
நாதத் தொனிகூவும் நற்கொடிப்போ ரூரன்இரு
பாதத்தை நெஞ்சே பணி. ௬௫

270 பவளக் கொடியூசற் பன்னிரண்டின் மீதே
இவருற்ற சூரியர்போல் ஏய்ந்து - திவளுற்ற
குண்டலங்க ளாடவரு கோவைப்போ ரூரனைப்போல்
கண்டிலன்பொய் யாக்கருணைக் கார். ௬௬

271 மூதண்ட கூட முகடுதொடத் தாள்நீட்டுங்
கோதண்ட பாணி குலமருகன் - தீதண்டா
வண்ணமெமை யாண்டான் மகிழ்போரூர் ஐயன்இனி
எண்ணமெனை நெஞ்சே யெமக்கு. ௬௭

272 ஆம்பல்வாய் விள்ள அடியார் கரகமலங்
கூம்ப வுதிக்குங் குளிர்மதியே - தேம்பி
அழுதபிள்ளைக் காய்போல் அருட்போரூர் ஐயா
தொழுதளற்கு நீயே துணை. ௬௮

273 என்செயலாய்த் தோன்ற இருள்திரோ தம்புரிந்தாங்
குன்செயலாய்த் தோன்றவொளி அருள்செய் - துன்செயலால்
என்போதந் தோன்றாதுன் இன்பாரப் போரூரா
உன் போதந் தந்தாள் உவந்து. ௬௯

274 உள்ளந் தனிலே உவமையிலா ஆனந்த
வெள்ளந் ததும்ப விளையாடும் - பிள்ளையே
சூழுந் திருப்போரூர்ச் சுந்தரனால் என்பிறவி
ஏழும்போம் நெஞ்சே யெமக்கு. ௭0



275 ஒளியாற் கதிரவுணர் ஊனடலாற் காலன்
அளியாற் குளிர்மதியே யாகும் - எளிதில்நனி
தூரம்போய் மீளுதலாற் சொல்மனமாம் போரூரில்
வீரன் கரத்தேந்தும் வேல். ௭௧

276 கைக்குரிய கஞ்சமாங் கண்ணுக்கோர் காட்சியாம்
மெய்க்குரிய சென்னிக்கே மெல்முடியாம்-பொய்க்காதென்
நெஞ்சத்துள் இன்பம் நிறைக்கும் பரஞ்சுடராந்
தஞ்சுற்ற போரூரன் தாள். ௭௨

277 வள்ளவளச் செம்முளரி மாளிகையின் மீதிருந்து
பிள்ளைமட அன்னப் பெடைநோக்க - உள்ளலொடு
செவ்வாய்ச் சிரலாடுந் தேன்வயற்போ ரூராளன்
எவ்வாய்ப்பும் ஆகும் எமக்கு. ௭௩

278 வீதி மணக்கும் விரைக்குங்கு மச்சேறே
ஓதி மணக்கும் உயர் மாடந் - தாதுசெறி
பூமணக்குஞ் சோலை புகழ் மணக்கும் போரூரிற்
பாமணக்குஞ் செவ்வேள் பதம். ௭௪

279 மயிலடையுஞ் சந்த மலைச்சாரல் எங்கும்
குயிலடையும் பூஞ்சோலைக்குள்ளே - புயலடையும்
பொன்மாட மெங்கும் புகழ் போரூர்வாழ் தெய்வந்
தன்மா டடைவார் தவர். ௭௫

280 தன்னை மறந்துகண்ணீர்த் தண்தரள மார்பணியும்
பின்னை முருகாவென்று பேசுமுளத் - துன்னும்
குயிலாலுஞ் சோலைக் குளிர்போரூ ரானை
மயில் மேல் வரக்கண்ட மான். ௭௬

281 எத்திக்குந் தானா யிருந்தடியேன் உள்ளத்தே
தித்திக்குந் தேனளிக்குஞ் செட்டியாங் - கொத்தி
அரவமணிப் பைதூக்கி யாடு மயிலேறிக்
குரவமணி போரூர்க் குகன். ௭௭

282 அன்புந் தருநல் லருளாழி யுந்தரும் பேர்
இன்புந் தருமெண் ணியதருமே - மன்பதையைக்
காக்கும்போ ரூரான் கடையேனைத் தன்னடியான்
ஆக்கும்போ ரூரான் அறிந்து. ௭௮

283 நோவஉரை யான் எம்மை நோவக்கண் பார்த்திடான்
சாவ நினையான் தளரவிடான் - பாவனைய

சொல்வாய்க் குறந்தி துணைபிரியாப் போரூரன்
நல்வாய்ப் பரையன் நெஞ்சே நாடு. எகூ

284 திருவடிக்கே தோன்றுஞ் சிறியேன் துயரம்
ஒருவருக்குந் தோன்றாதென் னுள்ளே - சருவிளனை
எந்நாளும் வாட்டும் இடர்களையப் போரூரா
நன்னுளிந் நாளா நயந்து. அ0

285 ஆசையும் அன்பும் அபிமான மும்உனது
பூசையிலே வைக்காது பொய்க்காளாய்ப்-பேசரிய
பெண்ணாசை யாதி பிடித்துழன்றேன் போரூரா
எண்ணாது நின்னை யிருந்து. அக

286 தீயவனென் குற்றந் திருவுளத்தில் நாடாதென்
தாயனைய போரூர்ச் சரவணா - தூயசுக
வீட்டுக்குள் வைப்பாய் வினையேனைப் பொய்க்காயக்
கூட்டுக்குள் வைக்கேல் குறித்து. அஉ

287 வேல்விடலா யென்றுமணி வீரக் கழல் புனைந்த
காலுடைய சூரடுகா ளாயென்று - மாலின்
மருகனே யென்று மடநெஞ்சே போரூர்
முருகனே யென்று மொழி. அங

288 காதலித்த வாறுதவுங் காங்கெயனார் தாளிணையை
ஆதரித்து நன்றாய் அனுதினமும் - நீதரித்துக்
கள்ளமெலாம் போகக் கருது நெஞ்சே போரூர்வந்
துள்ளமெலாம் இன்பம் உறும். அச

289 கருப்புச் சிலையானுங் கைகூப் பழகா
பொருப்புச் சிலையான் புதல்வா - விருப்புற்ற
என்னெண்ணத் தின்படியே யீந்தருளாய் போரூரா
உன்னெண்ணத் தின்பாய் உவந்து. அரு

290 நாடு தனி லேயுழலும் நாயேனை வாவென்று
வீடுதனில் வைக்க விரும்புவாய் - பீடுதரு
காட்சியே போரூரிற் கற்பகமே ஆருயிர்க்கோர்
சாட்சியே உன்தாள் சரண். அசூ

291 ஆரியனாய் வந்தும் அறிவுக் கறிவாயுங்
கூறியநூல் தந்துங் கொடியேற்குப் - பேரறிவு
தந்தாய் மறந்து தளர்கின்றேன் போரூர்வாழ்
எந்தாய்என் செய்கேன் இனி. அஎ



292 என்றும் அபிமானம் ஏழையேன் மீதுவைத்து
நன்றுபுரி யுங்குமர நாயகா - இன்றுசுக
பூரணத்தில் நாயேன் புகவைப்பாய் போரூர்வாழ்
காரணத்தாய் உள்ளே கலந்து. அஅ

293 கைவிட்டால் நாயேனைக் காப்பா ரொருவரில்லை
பொய்விட்டார் போற்றும் புனிதனே - மையிட்ட
கண்ணா ரிருவர் கலந்த புயத்தழகா
தண்ணார்போ ரூரா தரித்து. அகூ

294 ஆனைமுகத் தாற்கிளைய ஆறு முகத்தானை
மானையிடத் தில்வைத்தோன் மாமகனை - மானுதவ
வேடிச்சி தோள்சேர்ந்த மெய்ப்புயனை நெஞ்சமே
நாடிச்சி போரூர் நயந்து. கூ0

295 மெய்யடியார் போல மிகநடிப்பேன் மெய்யடியார்
செய்யடிமைத் தொண்டொன்றுஞ் செய்திலேன்-பொய்யடியேன்
உன்னுட் கமலபதத் துள்நிறையப் போரூரா
எந்நாட் கிடைக்கும் எனக்கு. கூக

296 நோயுற் றடராமல் நொந்துமனம் வாடாமற்
பாயிற் கிடவாமற் பாவியேன் - காயத்தை
ஓர் நொடிக்குள் நீக்கியெனை யொண்போரூர் ஐயாநின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து. கூஉ

297 குறைகளையுங் கோவே குணமளிக்குந் தேவே
மறை முடிவு காட்டு மணியே - இறைவனே
போரூரா என்று புகழ் நெஞ்சே யெந்நாளுங்
காரூர் மயக்கமறுங் காண். கூங

298 கோது படாத குணஞான சாரமே
ஏது படிறேனும் இழைத்தாலும் - தீதாகக்
கொள்ளாது போரூர்க் குமரவேள் நாயேனை
எள்ளாது காத்தாள் இனி. கூச

299 மருளுடையேன் செய்தபிழை வண்போரூர் ஐயா
அருளுடைய நீபொறுத்திங் காளாய் - தெருளுடையாய்
வேறுதுணை காணேன் வினையேன் தனக்குரிய
ஆறுதுணை ஆறா னனம். கூரு

300 பஞ்சரத்தின் மூடிவைத்த பைங்கிளிபோல் நாயேனை
அஞ்சிரத்தக் கூட்டிலடையாதே - விஞ்சும்

அருளொளியிற் சேர்த்தி யமுதூட்டி வைப்பாய்
தெருளொளியே போரூரா தேர்ந்து. ௯௬

301 எப்போதும் என்முடியுன் இன்பத் திருப்பாத
மெய்ப்போதின் கீழிருக்க வேண்டுமே - மெய்ப்போத
வேதாவணங்கவரும் வித்தகா போரூரில்
நாதா மயில்வாகனே. ௯௭

302 கன்றழைக்கும் முன்னே கருதிவரு மாப்போல
நின்றழைக்கும் நாயேற்கு நேர்தோன்றி - ஒன்றினுக்கும்
அஞ்சாதே வாவென் றழைப்பாய்தென் போரூரா
எஞ்சாத பேரருளா லின்று. ௯௮

303 ஊழுக்கா ளாகி யுறுபோக மேகருதிப்
பாழுக் குழைத்த படிறேனை - ஏழுக்குள்
போகா வகைபுரியாய் போரூரா பன்னிரண்டு
வாகா வடிவே லவா. ௯௯

304 உண்ணாத போகமில்லை யுற்பவியாக் காலமில்லை
நண்ணாத தேகமில்லை நாயினேன் - உள்நாடிப்
பண்டுவந்த துன்பமறப் பார்தொழுபோ ரூரானைக்
கண்டுவந்து நெஞ்சே கருது. ௧௦௦

305 களங்கமெலாம் அற்றேன் கதிபுகுந்தேன் நாயேன்
உளங்குளிர ஆனந்த முண்டேன் - வளங்களெல்லாம்
உற்றேன் திருப்போரூர் உத்தமனார் சீர்பாத
நற்கு மரைதொழுத நான். ௧௦௧

306 ஆறு முகம் வாழி ஆறிரண்டு தோள்வாழி
தேறுபதம் வாழியிரு தேவிமார் - வீறுபுடை
வாழிவேல் வாழி மயில்வாழி போரூர்
வாழி சகம்வாழி மகிழ்ந்து. ௧௦௨

## 13. தாலாட்டு

### காப்பு

307 கனக வரையிருபாற் கங்கைவழிந் தாங்குக்
கனகருணை யேமதமாக் காட்டும் - கனகவரைக்
கோதண்டன் ஈன்றதிருக் குஞ்சரத்தைக் கைதொழுவார்
தீதண்டார் சேர்வார் திரு.



### நூல்

308 பூமாது நாமாது போதசுக மாமாது
தாமேவு போரூர்ச் சரவண நாயகனே. ௧

309 மாணிக்க மால்வரைமேல் மன்னுசெக்கர் வானமென
வேணிப்பி ரான்தோளின் மேவுஞ் சிறுகுருந்தோ. ௨

310 உலகீன்ற மாதா வுதவியபால் கஞ்ச
மலர் வாய்கள் ஆறும் மணக்கின்ற வான்குருந்தோ. ௩

311 பெண்ணாய்ந்த கற்புப் பிடியும் பிணைமானுங்
கண்ணாரக் கண்டு களிக்கவரு கற்பகமோ. ௪

312 நீலமயில் வாகனனே நெட்டிலைவே லாயுதனே
கோலநிறை கோழிக் கொடி படைத்த சேவகனே. ௫

313 ஆறிரண்டு தோளானே ஆறு முகத்தானே
தேறுமறை கொஞ்சுஞ் சிறுசதங்கைத் தாளானே. ௬

314 மகுடங்கள் ஆறும் மணிக்குழைகள் ஈராறுந்
திகழ்கடகம் ஈராறுஞ் சிலம்புந் தரித்தானே. ௭

315 சடைமேற் பிறையைமுந் நூல் தன்னாற் பிணித்தணிந்து
விடையான் மடிமேல் விளையாடும் ஆரமுதோ. ௮

316 செஞ்சதங்கை கொஞ்சச் சிறுகிண் கிணியாடக்
கஞ்சமலர்த் தாள் உமையாள் கண்களிக்க வந்தானே. ௯

317 ஆய்மார் அறுவர்களும் அம்பிகையுங் கங்கைமின்னுஞ்
சேயேயென் றேந்திச் சிரமோந்து கொள்குருந்தோ. ௧௦

318 கானந் திரிவேடர் கன்னிகைக்கா கப்பரண்மேல்
ஞானங் கமழ்பாத நண்ணவைத்த நாயகமோ. ௧௧

319 புராரிசிறு வாவென்னப் பூவுலகங் காக்கும்
முராரிமரு காவென்ன முன்வந்து நின்றானே. ௧௨

320 அமராபதியில் அமரரெல்லாஞ் சூழ்ந்து
தமராகி வாழ்த்த வெள்ளைத் தந்திமேல் வந்தானே. ௧௩

321 அண்டம் அனந்தம் அருளுருவின் நின்றிலகக்
கண்டமரர் போற்றக் கனகவரை நின்றானே. ௧௪

322 தவமுனிவர் தேவர் சயசயஎன் றேத்த
நவவீர ராமணிக்கு நடுவிருந்த நாயகமோ. ௧௫

323 பொதிய முனியகத்துப் பொங்கும் இருள்நீங்க
விதியும் அறியா விளக்கேற்றுந் தேசிகனே. ௧௬

324 அருணகிரி நாதன் அருந்தமிழ் நூற்கீரன்
கருணைபெற வோதுங் கவிமாலைத் தோளானே. ௧௭

325 பிரமன் அறியாப் பிரணவத்தின் அத்தம்
அரனார் செவிகுளிர அன்றுரைத்த சற்குருவோ, ௧௮

326 அரிவை முருகாஎன் றழைக்குமுன்னே வந்து
கரமுதவி நின்ற கருணைப் பெருந்தேவோ. ௧௯

327 வேலைக் கலைபயின்ற மேதகுபொய் யாமொழிக்குப்
பாலைக் கடையிதென்று பகர்ந்தபெரும் பாவலனே. ௨௦

328 தார்மார் பகனே சமரபுரி நாயகனே
சூர்மார் புருவத் தொளைத்தவடி வேலவனே. ௨௧

329 குன்றமுங் கொக்குங் குரைகடலுஞ் சூர்மார்புங்
குன்றவடி வேலெறிந்த கொற்றவனே நற்றவனே. ௨௨

330 சமரபுரித் தேவோ தணிகைமலைத் தேனே
அமரும் பழனிமலைக் கான மணிவிளக்கோ. ௨௩

331 சீரலைவாய் முத்தோ திருப்பரங்குன் றத்தரசோ
ஏரகத்தி லென்றும் இருந்த பெருவாழ்வோ. ௨௪

332 பழமுதிர் சோலைப் பரனே குறிஞ்சிக்
கிழவனென நல்லோர் கிளக்கும் பெருமானோ. ௨௫

333 சங்கப்பலகைத் தமிழைப் புலவோர்க்குப்
பங்கப் படாமற் பகர்ந்த பெரும் பாவலனே. ௨௬

334 நாயினேன் செய்பிழைகள் நாடா தெனதுளமே
கோயிலாக் கொண்டு குடியிருந்த மெய்ப்பொருளோ. ௨௭

335 வானவர் சூழ் போரூரை வந்தடைந்த பேர்க்கெல்லாம்
மோன சுகங்காட்டி முத்திதருந் தேசிகனே. ௨௮

336 உள்ளத் திமிரம் ஒழித்துச் சிவானந்த
வெள்ளத்துள் அன்பர் விளையாட வைத்தானே. ௨௯

337 அரனோடு வந்தமை யளித்தவள் ளப்பாலைப்
புரைதீர உண்டவரைப் போதமுறக் கண்டானே. ௩௦

338 பொற்றாளம் பொற்சின்னம் பொற்பார் சிவிகையொடு
நற்றாளப் பந்தரையும் நம்பர் கையிற் பெற்றானே. ௩௧



339 மதுரைச் சமண மதகரிகள் எல்லாஞ்
சிதறத் துரந்த சிவசமய கோளரியோ. ௩௨

340 மயிலை நகர் தன்னில் வன்னியடும் என்பைக்
குயிலை நிகரும்மொழிக் கோதையாச் செய்தானே. ௩௩

341 ஆச்சா புரத்தில் அனந்தம்உயிரை யெல்லாம்
பேச்சோ டுளங்கடந்த பேரின்பம் வைத்தானே. ௩௪

342 வந்தோர் பிணிதீர்க்கும் மாமருந்தோ அன்பருக்குச்
சந்தோடம் நல்குஞ் சமரபுரி மாநிதியோ. ௩௫

343 தாயோ தமரோஎன் தாதையோ சற்குருவோ
தேயாக் கருணைபொழி தென்போரி வேலவனே. ௩௬

344 முத்தோ குலிசமோ மூதொளிமா ணிக்கமோ
சித்தோதென் போரூர்ச் சிவானந்த வாரிதியோ. ௩௭

345 பாலோசெந் தேனே பழமோ பழமறையோ
மேலோர் புகழ்போரூர் வீற்றிருந்த பார்த்திபனே. ௩௮

346 அன்னமோ பைங்கிளியோ அம்பிகைகண் ணுக்கினிய
சொன்னமோ போரூர்ச் சுகபூ ரணவொளியோ. ௩௯

347 ஞானக் கரும்போமெய்ஞ் ஞானனந் தக்கடலோ
தானற்றார் போற்றுஞ் சமரபுரித் தண்ணளியோ. ௪௦

348 என்றென்றே தாலாட்டி யெல்லோரும் இன்பமுற
நன்றருளே செய்யுமெங்கள் நாதன்போ ரூர் இறையே. ௪௧

## 14. திருப்பள்ளியெழுச்சி

349 திருமலி குணதிசை அருணன்நல் லுதயஞ்
செய்தனன் இருவினைச் சமமல பாகம்
பருவம துடையவர் தமதுள மெனவே
பாரகம் விளங்கின அவர்குணக் கிரிமேல்
அருளொளி வீசிநின் றிலகுமுன் பதம்போல்
அருக்கனுங் குணதிசைப் பொருப்பெழு கின்றான்
இருளறு குறுமுனி பரவிய போரூர்
இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே.

350 ஆடுறு மணிமயில் சிறைவிரித் ததன்மேல்
அருளொளி திகழநீ யெழுந்தருள் முறைபோற்
பீடுறு மரகதக் குரகதம் பூண்ட
பெருந்தடந் தேர்மிசை யெழுந்தனன் கதிரோன்
வாடுறு தாமரை நினதரு ளடைந்த
மாதவர் முகமென மலர்ந்தன எங்கும்
ஏடவிழ் மலர்ப்பொழில் பொதுளிய போரூர்
இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. உ

351 பகரரு சுடர்விடும் உனதயில் கண்ட
பாதகர்தம் மனமெனச் சுரர் மனம் எனவே
புகருடு மழுங்கின விகசித மாகிப்
பொலிந்தன முளரிகள் தடந்தொறும் உனது
திகழ்பதம் அடைந்தவர் உயிர்ச்சிறு போதந்
தேய்ந்தென மதியொளி தேய்ந்தது குணபால்
இகலறு கதிரெழு கின்றது போரூர்
இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. ௩

352 என்றனைக் கைப்பிடித் தாளுறும் இறைவன்
எழில்பெறு மலர்விழி மலர்ந்தெழு சமயம்
உன்றனதுள இருள் போக்குவன் நோக்கால்
ஒல்லையில் வருகென எல்வினைக் கூவி
நின்றன திருக்கொடி யழைத்துறு முறைபோல்
நீடுறு மனைதொறுங் கூவின மிகவும்
இன்றெனை யாண்டுகொண் டருளிய போரூர்
இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. ௪

353 மன்மதன் விருதுகள் ஊதின பொழில்வாய்
மாயவன் கரப்படை தொனித்ததுன் எதிரே
தென்மலி மலரவன் ஊர்திகள் தடத்துச்
சிலம்பின நின்கொடி பதளச் சரிக்கை
பன்முறை பண்ணுவ போல்மனை தோறும்
பாழியங் குரலொலி காட்டின அருளால்
என்மல இருள்தெறும் ஆரிய போரூர்
இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. ௫

354 கின்னரர் கிம்புரு டர்களொடு கருடர்
கந்தரு வர்கள்சித்தர் வித்தியா தரரும்
மன்னிய முரசதிர் சிகரியின் வாய்தல்
வந்தனர் ஐந்தொழில் வாத்தியந் தொனித்தார்



பொன்னில மடவார் இந்நில மடவார்
புரிந்தனர் நாடகம் இருந்தகை மயில்போல்
இன்னருள் பொழிமுகி லேதிருப் போரூர்
இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. ௬

355 வானவர் புகழ்நவ வீரர்க ளொருபால்
மால்வரை யனகண நாதர்க ளொருபால்
தீனமில் எண்டிசைப் பாலக ரொருபால்
தேவர்கள் முனிவர்கள் பாதல ரொருபால்
தானம துதவிய கரங்கொடு பாரி
சாதநன் மலர்மழை பொழிந்தனர் பணிந்தே
ஏனலம் புனமலி சாரலம் போரூர்
இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. ௭

356 மறைமுடி யுணர்ந்தவர் மறையவ ரடியார்
வருபரி சாகரர் அரசர்கள் வணிகர்
குறைவறு வளவர்கள் மற்றுள ரெவருங்
குழுமியே வடமொழி தென்மொழிப் பாவால்
நிறைதய வுறநினைப் புகழ்ந்துநின் றேத்தி
நீளுற தண்டெனப் பணிந்தெழு கின்றார்
எறிமணி அருவிகள் சொரிகிரிப் போரூர்
இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. ௮

357 விலையறு நவமணி மாலைகள் கொணர்ந்தார்
வெயில்விடு குலிசகே யூரங்கள் கொணர்ந்தார்
அலகறு மணிசெறி மகுடங்கள் கொணர்ந்தார்
ஆழிம தாணிகள் நூபுரங் கொணர்ந்தார்
நிலைபெறு கவிரிதழ் நேத்திரங் கொணர்ந்தார்
நிறைந்துளம் வேண்டிய பெறவுறப் பணிந்தார்
எலையறு பெருவரம் அருள்செயப் போரூர்
இறையவ னேபள்ளி யெழுந்தரு ளாயே. ௯

358 ஐங்கரங் கொடுதழு வுறநினை யொருகொம்
பானையுள் மகிழ்ந்தது முக்கணம் பொருப்புன்
பங்கய முகஅணி கண்டுகண் களிப்பப்
பரிவொடு நினைந்தது பனிவரை யுயிர்த்த
செங்கயல் விழிப்பசும் பிடிநினை மடிமேற்
சேர்த்தருட் பால்தரத் திருவுளத் துனும்ஈண்
டெங்களை யாண்டுகொண் டருளிய போரூர்
இறையவ னேபள்ளி யெழுந்தருளாயே. ௧௦

359 பவளமலை உபயதிசை அருவிசொரி முறைகரட
பரமஇப மகிழிளைய கோவே
தவளநிற முளகவள கரியின்மிசை சுரருலகு
தழையவலம் வருமதிக தேவே
துவிதமய லறுமுனிவ ரெனும் அளிகள் படியமிகு
சுகநறவு பொழியுமொரு பூவே
குவடிலகு குறவர்தரு கொடியினொடு சமரபுரி
குலவியருள் வரமுதவு காவே. க

360 பரவைமுக டெழும்உதய கிரணபரி தியின்நடன
பரதமயில் முதுகில்வரு தீரா
விரவுபரி மளகுரவு கமழுபய சரணகலை
விதரணிக புரணகெம் பீரா
சுரர்அரசு சசியினொடு தருநிழலின் உறையமதி
சுமடஅசுரர் களையடு வீரா
கரவுநெறி யறும்அடியர் கதியமுது பெறவுதவு
கனசமர புரிநிலவு தாரா. உ

361 மறைகள்பல கலைகள்பல லிபிகள்முத லியவுதவு
வளர்சொருப நிசப்ரணவ வொளியே
முறைமைதரு சரஅசர வுயிர்கள்செயி ரறுபுவன
முழுதுநிறை பரமசுக வெளியே
கறைகள்முழு வதுமுடுகி மிகவுநினை பவர்தய
கமலமலர் குடிபுகுதும் அளியே
பிறையறுகு நதியரவு சடிலமுடி யணிபரமர்
பிரியமுற வொருசொல்மொழி கிளியே. ங

362 இமயகிரி யுதவுபிடி குடமுலையின் இடைபெருகி
எழமமுத வுதிசெறி வாயா
சமரஇர ணியஅசுர னுடலம்அடும் உகிர் கொள்அரி
தருமருக னெனநிலவு தூயா
அமரர் முனி வரருயகர் நரர்ககனமதியிவர்கள்
அடிபணிய வரமுதவு நேயா
திமிரதின கரனெனவுள் இருளிரிய வொளிர்சரண
திரசமர புரிவரு முபாயா. ச

363 வடவைவிழி பிறையெயிறு குடவயிறு தடியுதடு
மலியலகை பரியையடு வேலா
அடியும்நெடு முடியும் அரி அயனும்அறி வரியசிவன்
அகமகிழ மழலைமொழி பாலா
நடனமிடு மயுரமிசை அடியர்நினை தொறுமவர்முன்
நகைமுகமொ டெதிர் கொள்குண சீலா
தடவரைகள் கிடுகிடென வுலகைவல னொடியில்வரு
சமரபுரி தழையவுறை லீலா. ரு

364 ககனமுக டளவிவரு கனகரத நவஇளையர்
கருதுபுடை வரமகிழு நாதா
சகமுழுதும் அடும்அசுரர் குலமுழுது முடுகியடு
சமரகண முடிகள்தொடு பாதா
செககணக செககணக தகுதகுகு திகுதகுகு
திமிதியென நடனமயில் நீதா
தகுகடவுள் இபமயில்கொ ளொருபதிரு புயமருவு
சமரபுரி தனிலுறுசவ் வாதா. சா

365 உததிசுவ றிடஇடர்செய் குவடுபொடி படஅசுரர்
உடல்கள்கிழி படஅயில்கொள் கரனே
குதிகொள்கரு ணையினிலகு வதனமுடன் அடியரெதிர்
குலவிவரு மினியகுண தரனே
அதிகம்ருக மதபடிர களபபரி மளதொடைகள்
அணிகளிவை திகழ்புனித வுரனே
புதியபரி புரவொலிகள் கலகலென வருசரண
புகழ்சமர புரிமருவு பரனே. எ

366 மலயநில வியமுனிவன் இடருததி யகலஅவன்
மனநினைவு கொடுதழுவு கலனே
கலைகள்தெரி பலகையுறை புலவனுறு சிறையைவிடு
கதிர்கொளயி லுடையதெய்வ குலனே
நிலைமைநெறி யுளதெரிவை முருகவென வுரைதருமுன்
நிலவியவள் கரமுதவ வலனே
தலைமைசெறி பிரமசுகம் அநுதினமும் விளையுமொரு
சமரபுரி மருவுகதி நிலனே. அ

367 கலவில்அடு மகளையொரு பதிகமதில் வரஅருள்செய்
கவுணியர்கள் குலதிலக நிதியே
பனகஅணை யனும் அயனும் மகிழமரர கதவொளிசெய்
பருமயிலின் மிசையுதய மதியே

தினகரனை நிகருமொரு சிவசமய நெறியொழுகு
திகழடியர் பரவியடை கதியே
தனபதிதன் அளகையென வளமைசெறி சமரபுரி
தனிலுறையும் அமரரதி பதியே. ௯

368 பசிதம் அரன் நயனமணி யிகழுமதி மடமைசெறி
பலசமண திமிரமடு சூரியா
நிசிசரர்க ளெனும்உததி யளறுபட வொருகொடியில்
நிகழ்கரிய புருவநெறி வீரியா
உசிததமிழ் முழுதுமொரு மதுரைநக ரவர்புகழ
உரைசெய்தள விடுமதிக கூரியா
சசிதரனும் உமையும்உளம் மகிழஎதி ருளநிலவு
சமரபுரி யதனிலுறை சீரியா. ௰

---

## 16. சின்ன கட்டியம் - ௧

369 சுரர்முனிவ ருலகர்பணி பாதா-சுகசொருப நிசகலைவிநோதா
பரஅறிவை யறிய அருள்போதா-பரவதிக சமரபுரிநாதா.

370 குறவர்மகள் தழுவுமணி மார்பா-குலவுபரி பூரணசொரூபா
நறவுபரி மளநிறையும் நீபா-நயசமர புரிமருவு பூபா. ௨

371 நெட்டூர சூரசங் காரா - நித்தமிடு பச்சைமா யூரா
விட்டொளிரும்வச்சிரகே யூரா-வித்தகர்து தித்தபோ நூரா

372 குஞ்சரமு கற்கிளைய கோவே-கொஞ்சியுமை முத்தமிடு பூவே
தஞ்செனநி னைக்குமவர் தேவே-தண்சமர நறபதியில் வாழ்வே

373 ஆறுமதி சூடியருள் பாலா-ஆயஅரு ளாறுமுக வேலா
தேறகலை பேசுகுண சீலா-சீர்சமர மாநகரி லீலா. ௫

374 தேவர்கள் மநோபயங் கரனே-சேவலங் கொடியாட் கரனே
மேவுகுங் குமவாச வுரனே-வீறுசெம் போரிவாழ் பரனே.

375 தெய்வசிந்துரமருவு தோளா-திவ்யமங் களநிலவுதாளா
பொய்வருந் தேவர்மண வாளா புணணியபோ ரூர்வருக ளாளா.

376 பலகலைப் பரவையந் துறைவா-பரமனுக் குபதேச இறைவா
தலைமையிற்குறையாதநிறைவா-சமரநறபதிமேவுபொறைவா.

377 அசுரர்குல காலவேல் நேயா-அமரர்சே னைபதித் தூயா
உசிததமி ழறிதருமு பாயா-உயர்சமர புரிவரு சகாயா. ௯

378 மலயத்தின் முனிவன் ஆரியனே-மலம்அட்ட ஞானசூ ரியனே
தலமெச்ச மேவுசீ ரியனே சமரப்பு ராதிவீ ரியனே. ௰

## 17. பெரிய கட்டியம் - ௨

379 மழையின் இல கியகருணை பொழியும்மழ களிறதிக
மடியின்மிசை நிலவுகுல மணியே
உழையும்அட லுறும்மழுவும் இருகரனும் மருவுசிவன்
உவகைகொடு தழுவுதெய்வ அணியே
கழைகள்குழு மியவரையில் எயினர்தரும் உழைமனது
களிபெருக நிழலுதவு கணியே
தழையுமிரு நிதியுதவு சமரபுரி யதனில்வரு
தகைமைசெறி அடியர்குண குணியே.

380 அரியமறை முடியிலுறை பரமசிவை யகமகிழ
அருகில்வரு தருணவள வுருவே
இரவுபகல் அனுதினமும் உயர்தயவின் நினையுமவர்
இதயமல ரதனிலுறும் மருவே
உருவெனவும் அருவெனவும் ஒளியெனவும் வெளியென
உனலரிய பொருளுதவு குருவே [வும்
தரணியென இருளகல அறிவுதரு சமரபுரி
தனில்உறையும் அமரர்பணி தருவே. ௨

381 அதிமதுர நறவுபரி மளமழகு நிறையும் அறு
பதம்முரலு மினியதொடை நீபா
பொதியமலை யுறையுமொரு குறுமுனிவன் இதயகுகை
புதையும் இருளறவொளிசெய் தீபா
துதையும்ருக மதபடிர களபபுள கித் அருண
துதிசெயழ கொழுகுமணி மார்பா
ததிதிதிமி திமிதியென நடனமயில் முதுகில்வரு
சமரபுரி தழையவுறை பூபா.

382 பரிதிமர கதமலையின் மிசையுதய மெனநடன
பரதமயில் கடவும்இரு தாளா
கருதரிய தவளகர மலையுதவு மொருவனிதை
கனகமகிழ் மருவுமண வாளா
செருவிலசு ரரைமுடுகி யடுகனக வடவரைகள்
திகழ்வதென நிகழ்பனிரு தோளா
பெருகுவள மைகளுதவு சமரபுரி பணியுமவர்
பிரமரச உணவுதவு கோளா.

383 திடநரட மலைபிளிற நொடியிலடு கரகமல
திரிநயன அரனுதவும் உருவே
வடகலைகள் முழுதுமள விடுமதிக பிரமனறி
வரியபிர ணவமுரைசெய் குருவே
இடருதவு பவவுததி சுவறநினை தருமடியர்
இதயமெழு மினியசுக மருவே
படிககனர் உரகர்முனி வரர் மருவு சமரபுரி
பணியுமவ ரெணியதரு தருவே.

384 கவலைபிணி மிடியிடர்கள் அற அடியர் நிலைமைபெறு
கதியில்நிகழ் வுற அருள்செய் கோனே
உவரியென வொலிமலியும் அசுரரெனும் மதகரிகள்
உருள அயி லெறியும் அரி மானே
நவமருவு முனிவர்சுரர் உரகரெனும் இனியபயிர்
நலன்மருவ அருள்பொழிமெய் வானே
குவலயமெ னுறுசமர புரியிலுறை தவமுனிவர்
குளிரிதய கமலமுறு தேனே.

385 மலையருவி தருமரவின் மணியையன லெனவெருவு
வனசரர்கள் தரும் அரிவை மோகா
தலைமைமக பதியமரர் பரவ இர ணியவுலகு
தழைய இப மிசைவருவை போகா
விலையில்நவ மணிகள்கதி ரொளியின்வெயில் விடுகடகம்
மிளிருமொரு பனிருதிரு வாகா
கலைமுழுதும் அறிபெரிய அறிஞர்வள மையினர் செறி
நனசமர புரிநாக ரீகா.

386 அகமுநடு முடிவுமுறு திசையுமெழு புவியுநிறை
அறிவிலெழு பரமசுக நறையே
தகுதிகுகு தகுதிகுகு தகுதி தரி கிடதிமிதி
தகுதியென நடனமயி லிறையே
பகர்கலைகள் முழுதுமள விட அரிய மிகநுணிய
படிறுளமும் நுழைவரிய மறையே
துகளகலும் மறைமுனிவர் அனுதினமும் நெறியொழுகு
துதிசமர நகரறிவின் முறையே.

387 சுருதிகுரு அநுபவமெய் யொருமையினில் எனைமருவு
துகளரிய அருளொளிசெய் கண்ணே
கருவிமுழு தையும்நியதி கலையுமவர் பரவியடை
கனபுரண அறிவு திகழ் விண்ணே



இரவிசசி அனல்நயன இறைவர்செவி குளிரவரும்
இசைதனிலும் மிகுமொழிசெய் பண்ணே
தருணவள முருகசர வணகுமர எனுமொழிகள்
தழைசமர புரியிலுறை தண்ணே. ௯

388 சுடரினொளி விடுசிகைகொள் பறவைவிரு துடையகுக
துரகமயில் இறைவதெய்வ ராயா
குடமுழவு முரசதிர அலகைபசி கெடஅசுரர்
குலமுழுதும் அடுமயில்கொள் நேயா
படியிலுன தினியபுகழ் பரவுமவர் சுகவுததி
படியஇனி தருள்தரு முபாயா
தடமலரின் ஒழுகுபிழி தவளவளை பருகியுறு
சமரபுரி யதனிலுறை தூயா. ௧௦

---

## 18. சின்ன கட்டியம் - உ

389 ஐங்கரற் கிளையமக மேரே-அம்புவிக் கினிமைதரு சீரே
சங்கரக் கடவுளணை தாரே-தண்தமிழ்ப் போரிவரு காரே.

390 இமயமக ளுதவுகுண மலையே - இதயஅநு பவமுரை செய் கலையே, சமயமுழு வதுநிகழு நிலையே-சனனகடலரை வாரும் வலையே. உ

391 கன்னியர்க்குரியநாயகனே-கண்ணனுக்கினியமருமகனே[னே. பொன்னகர்ச் சுரர்கள்நேயவனே-புண்ணியப்போரிவாழ்பவ

392 நவவீரர் பணிபாத தேவே - நனிபூத கணநாதர் கோவே. தவமேவுபெரியோர்கள்வாழ்வே-தடமேவுபோரிவாழ்காவே

393 நீலக்க லாப மயில் வீரா - நீபத்து மாமலர்கொள் தாரா கோலத் தியாகசெம் பீரா - கோதற்ற நாதபோ ரூரா. ௫

394 வெடியத்தொ னித்தசே வலனே - மிகுகொக்கை யட்டவே லவனே, படிமெத்த மெச்சுபா வலனே - பரமற் குரைத்தநா வலனே. ௬

395 பொன்மாரி பொழிகின்ற புயலே - பொய்யாத அறி ஞோர்கள் செயலே, தென்மாறன் மகிழ்பலகை இயலே - செஞ்ஞான சுகம்விளையும் வயலே. ௭

396 கருணைதரும் ஆறுமுகமதியே - கனதேவர் சேனைபதியே தருணவளம் மாருத நிதியே - சமரபுரி வாழ்சுகோ தயே.

397 மாரவேள் வெகிடவரு சுந்தரா - மாகர்கோன் உதவு தெய்வ சிந்துரா, கோரசூர்ப் பகையயடு தந்திரா - கோதிலா வாறுலிபி மந்திரா. ௯

398 கவலைவெயி லறவீசு கனமே - கருதடியர் நசையான தனமே - சிவன்மருமை அணைதுயிலும் அனமே - திகழ்போரி யடைவோர்கள் இனமே. ௧௦

---

## 19. எச்சரிக்கை

399 சீரார்குற மானுளணி செப்பார்தன மேவுந்
தாரார்புய சமராபுரிச் சண்முகா எச்சரிக்கை. ௧

400 பிறைசூடிய சடையானருள் பிள்ளைப்பெரு மாளே
மறையோர்நிறை போரூர்வரு மன்னு எச்சரிக்கை. ௨

401 பனிமாமலை மிசைபூத்தருள் பச்சைக்கொடி தந்த
கனியேதிருப் போரூர்வரு கந்தா எச்சரிக்கை. ௩

402 அருமாமறை முதலோதிய ஆனைக்கொரு துணையே
பரிபூரண சுகமேபோரிப் பதியே எச்சரிக்கை. ௪

403 ஆறுஅமு தனையா அயில் வேலாவுயர் வானோர்
சேனுபதி சமராபுரித் தேவா எச்சரிக்கை. ௫

404 தெய்வகுஞ்சரி கணவாபச்சைத் திருமால்திரு மருகா
சைவநன்னெறி வளர்போரூர்ச் சண்முகா எச்சரிக்கை. ௬

405 வேலாகுண சீலாகன லீலாவிடைப் பாகன்
பாலாதிருப் போரூர்வளம் பதியா எச்சரிக்கை. ௭

406 நவவீரர்கள் பணிநூபுர நளினத்திரு வடியாய்
தவர்சூழ்தரு சமராபுரிச் சண்முகா எச்சரிக்கை. ௮

407 ஈராறுயர் தோளா தண்டைக் கிசைந்தபத்மத் தாளா
சீரார்திருப் போரூர்மயில் வீரா எச்சரிக்கை. ௯

408 கோழியங்கொடி படைத்தாய்நல்ல குணத்தாயென்னை யளித்தாய், வாழியம்மலர்ப் பதத்தாய்போரி வரதா எச்சரிக்கை. ௧௦

409 பூவேபரி மளமேமறைப் பொருளேமயி லேறுங்
கோவேசுரர் தேவேபோரி வாழ்வே எச்சரிக்கை. ௧௧

410 பிரசமேபிரம ரசமேதவர் பேசுங்கதி நலமே
சொரூபமேபோரி நகர்வாழ்சுப்ர மணியா எச்சரிக்கை. ௧௨



411 மதுராகுக்குட விருதாசிற்சுக வடிவா சுப்பிரமணியா
சதுராதிருப் போரூர்வரு சண்முகா எச்சரிக்கை. ௧௩

---

## 20. திருவடிப்பற்று

412-421 வண்ணத் தாழிசை 422-431 மட்டு விருத்தம்
432-441 கலிவிருத்தம் 442-451 பெருங்கழி நெடில் விருத்தம்

412 இந்திரப்பெய ருடையான்முத லெவருஞ்செறி வளனுக்
கிடையூறுகள் வாராவகை யெணிமுற்பணி களிறென்
சிந்தைப்ரிய என்கண்சிறு பிள்ளாய்வரு கென்றே
திருமார்பிறு கப்புல்கிய தெய்வச்சிர மணியே
அந்திப்பிறை முடியானரு ளின்பக்கனி நினைவந்
தண்டிப்பணி தொண்டர்க்கினி யருளும்படி நினையாய்
சந்தப்பொழி லிடைவெற்பன தந்திக்களி றுலவுந்
தண்சாரல்ம ணஞ்சூழ்தரு சமராபுரி யானே. ௧

413 வேயொன்றுறு தோள்மாதுமை வெற்பன்னத னத்தின்
மிசையூறரு விப்பாலினை மிகவுண்டுக ளித்த
வாய்குங்கும வாசந்தரு வள்ளாலெனை விள்ளா
வகையாளுநி னக்கோதுகைம் மாறுஞ்சிறி துளதோ
தாயொன்றுவ ளர்த்தோன்விட நாடானது போலும்
நல்லோர்கள டைந்தோர்களை யெள்ளாரது போலுந்
தாயொன்றிய சேயைப்புடை தள்ளாளது போலுந்
தமியேனைவி டேலண்டினன் சமராபுரி யானே. ௨

414 ஓதுங்கலை யாவும்மனம் ஓடாதுநி றுத்தி
உன்பாதநி ழற்கீழுற லுயர்நன்கென வோத
வாதஞ்சொலி ஏதஞ்சொலும் மனமோடுசு ழன்ற
மதியின்றிய சிறியேனுனை வந்தண்டுவ தென்றோ
தீதின்றிய குறநாயகி சேருந்திரு மார்பா
சிவனார்தரு குமராவுமை சிறுவாஅரி மருகா
தாதொன்றிய வனசத்தட மீதொன்றிய எகினந்
தண்மாலையில் வண்கா அடை சமராபுரி யானே. ௩

415 ஏலும்மனம் ஓடிப்பொருள் யாதொன்றினை நாடி
இசையும்பொழு தேனும்மதை யெண்ணுதுவி டுத்துன்
வேலுஞ்சிறை மயிலுங்கன தோளுஞ்சிறு தாளும்
வீறுறருள் முகமும்உன வேண்டுஞ்சிறி யேனே

கோனும்மறை நாலின்முடி மேலொன்றிய தேவே
குணகுஞ்சரி கோவேசுரர் கொண்டாடிய வாழ்வே
தாலம்புக முனியேயென துயிர் நின்றொளிர் மணியே
தவமானுறை கணியேயநல சமராபுரி யானே.

416 உருவுந்தரு புகழும் பல கலையும்முய ரறிவும்
ஒருந்திகழ் குணமும்பல மாருந்தவ நெறியுந்
திருவும்மதி மதியும்பதி கதியும்மினை யொருநாள்
சேவித்தவர் தமைவந்தெதிர் தெரிசிப்பினும் வருமே
மருவுஞ்சிர புரமாநகர் வந்தெண்ணிலி பேரை
மாருவள வீடேறிட வைக்கும்மறை முதல்வா
தருவும்மிகு நிதியுஞ்சுர பியுமன்னக ரத்தார்
தண்மேகமெ னப்பொன்பொழி சமராபுரி யானே.

417 அத்தம்மனம் உதயஞ்சிறி தறியாரவி போலுன்
அருளாகிய ரவியென்னுள மகலாதுநி றைந்தே
சித்தம்மல இருளும்பல தத்வம்மெனும் உடுவுஞ்
சிறுபோதவெண் மதியும்மகல் சீரென்றினி வருமே
நித்தன்மகிழ் தரவோர்மொழி யத்தம்புகல் குரவா
நீலக்கல பத்தோகைகள் மாலைப்புயல் கண்டு
தத்தாதிமி தித்தாதிகு தெய்த்தெய்யென ஆடத்
தண்காவளி பண்பாடிய சமராபுரி யானே.

418 மறையாதிய கலையோதிய வனசப்பெரு மானும்
மண்ணுண்டுவ டத்தேதுயில் பண்ணும்பெரு மானும்
நறையாரிதழ்த் தார்புனைச டைபெம்பெரு மானும்
நாடிக்களி கூரத்தக ரேறித்திகழ் வோனே
இறையாகிய அளவாயினும் மறவாதுனை நாடி
இன்பத்துயில் கொள்ளும்படி யென்புத்தியில் நிறைவாய்
தறையாதியி லுறைவோர்பணி சரணாபரி புரனே
தண்ணாரளி யண்ணுமகிழ் சமராபுரி யானே.

419 எளியேனையோ ரடியானென இன்பத்திரு வுள்ளத்
தெண்ணிச்சிறு நாயேனுளம் நண்ணச்சுக வாரிக்
களியேயுல கெங்கும்மிலை தல்லாதிலை யென்றே
காட்டிப்பின்ம றைத்தாயென் கண்மாயம்இஃ தென்னே
அளியேயருள் வெளியேயுயி ரொளியேமறை முடிவின்
அஞ்சொற்புகழ் பஞ்சப்பிர ணவம்ஓதிய கிளியே
தளிரேயன கையார்மயி லெனவேநட மாடுஞ்
சசிவெண்சுதை மாடஞ்செறி சமராபுரி யானே.



420 அவனேயுடைய ளதுயானெனும் அலர்கானலை நாடி
யான்செய்தனன் பிறர்செய்தன ரென்றின்பொடு துன்பு
நவமாய்வரு தோறும்மிகு விழைவும்வெகு ளியுமே
நணிநீயுயிர் உள்நின்றுந டத்துஞ்செயல் நாடேன்
பவவேலைக டத்தும்முன பாதத்துணை வங்கம்
பற்றத்திரு வுளம்வைத்தருள் பாலித்திடு கண்டாய்
தவராசர்கள் கவிராசர்கள் புவிராசர்கள் ஞானோ
தயராசர்கள் புடைசூழ்தரு சமராபுரி யானே. ௯

421 எண்ணின்செய லாயும்எழி லுடனின்செய லாயும்
யாதாயினும் நாவார இசைக்குஞ்செய லாயும்
நண்ணுஞ்செயல் வருதோறுநின் னருளின்செய லாக
நாடுஞ்செய லென்றேவரும் நாயேன்செயல் போயே
விண்ணும்புகழ் வேலும்விரி கதிரோனைய மைக்கும்
மிளிர்செஞ்சிறை விருதுந்தரு கரமீதுபி டித்தோய்
தண்ணந்துறை வாவிக்கயல் பாயக்கம லத்தேன்
சாயக்குட வளைமேய்தரு சமராபுரி யானே. ௧௦

422 ஆதரவாய் அடியவருக் கருள்சுரக்கும் ஐங்கரத்தோன் அன்பு கூர்ந்து, மாதவமே யெனஅழைத்துப் புயந்தணைக் கத் திருவுளத்து மகிழுங் கோவே, ஏதமுறு தடியேனைக் காததளிப்ப துன்கடனும் இசைப்ப தென்னே, போத மலர்க் கற்பகமே போரூர்வாழ் ஆறுமுகப் புனித வேளே.

423 சிறுகுழவி யெனைக்காவென் றாய்க்குரையா துறக்காக் குஞ் செய்தி போலும், அறிவிலியேன் காத்திடென திருக்கவுங்காத் தளிப்பதுன தருட்கே யுண்டாம், உறியி லிடு நவநீதம் உண்டவன்றன் மருகாவே லுரவா பச்சைப் பொறிமயிலே றியமுருகா போரூர்வாழ் ஆறுமுகப் புனித வேளே. ௨

424 தருமவயித் தியனொருத்தன் பிணிதீர்த்தல் கடனாகித் தணித்தல் போலச், சுருதிகுரு சுவாநுபவ மாயடியேன் மலந்தவிர்த்துஞ் சுழலா நின்றேறன், மருவளரும் உனதுபய வாரிச பதநிதற்கீழ் வைக்க வேண்டும், பொருவிலருள் பொழிமுகிலே போரூர்வாழ் ஆறுமுகப் புனித வேளே. ௩

425 என்னையொரு பொருளாகத் திருவுளத்தி லடைத் தாய்க்கிங் கெதுகைம் மாறு, மின்னனைய சடாமகுடப் பெருமான்கண் களிக்கவரும் விறல்வே லோயே, உன்னை

மறவாதுன்னு துறுவேனை யுன்னடியா னென்ன வைத்
தாய், பொன்னனைய திருத்தாளா போரூர்வாழ் ஆறுமுகப்
புனித வேளே. ௪

426 உவமையறு பவசலதி கடத்தியிம்மா னிடப்பிறப்பில்
உதிக்கச் செய்து, நவமநவும் உனதுபதம் நாடவைத்தாய்
அதைமறந்தேன் நாயினேனே, கவலையெலாம் அற்றுனது
திருவடிக்கீ ழிருக்கஇனிக் கருணைசெய்யாய், புவனைகர தல
மணியே போரூர்வாழ் ஆறுமுகப் புனித வேளே. ௫

427 மயக்கமிடர் காணுநின் மலர்ப்பாதப் பேரொளியில்
வயங்கா நின்ற, இயக்கமறும் ஆனந்தக் கடல்படிவ தெந்
நாளோ ஏழையேனே, நயக்குமணப் பைம்பூவே நாகர்பர
வியகோவே நறவே காவே, புயற்கருணை பொழிதேவே
போரூர்வாழ் ஆறுமுகப் புனித வேளே. ௬

428 மங்கியுழற் பவித்துழல் வல்லிடரிற்புகுதாமல்மதியி
லேனை, இங்குனது பதநிழற்கீழ் வைத்தியேல் உய்கேன்
மற்றேழையேனே, கொங்கலரும் பைங்கூந்தற்குறமாதின்
கணவாஎண் குணவா சூழ்ந்த பொங்கரளி பண்பாடும்
போரூர்வாழ் ஆறுமுகப் புனித வேளே. ௭

429 இல்லாதான் வள்ளலாய்உள்ளானை இரவாமுன்ஈதல்
போலும், நல்லானே யுனதுபதம் விரும்பாதே னாயிடினும்
நல்க வேண்டுங், கல்லாத புல்லியர்போல் தேகபோ கம்
விரும்பிக்கலங்கா நின்ற, பொல்லாதேன் பிழைபொறுக்கும்
போரூர்வாழ் ஆறுமுகப் புனிதவேளே. ௮

430 ஊமர்கண்ட களவினைப்போல் உரைப்பரிய சிவாநு
பவம் உணராநின்ற, காமருஞானிகள்பரவு முனதுசேவடி
நாயேன் காண்பதென்றோ, தேமருவு மலர்க்கூந்தல் தெய்வ
இளம் பிடி நோக்குஞ் சேருந் தோளாய், பூமகளுக் கணி
காட்டும் போரூர்வாழ் ஆறுமுகப் புனித வேளே ௯

431 மடமைசெறி புலைநாயேன் மனந்திருத்தித் திருவடிக்
கீழ்வைக்க என்றுங், கடனுனக்கே யாயிருக்க அடிக்கடி
யிங் குரைப்பதென்னே கடையனேனே, சுடரனைய
செழுஞ் சூட்டுப் பல்பொறிச்செஞ் சிறைச்சேவல் துவசத்
தோனே. புடவியிடர் தவிர்த்தாளும் போரூர்வாழ் ஆறு
முகப் புனிதவேளே. ௧௦



432 அருளைங்கரன் இளையோய்திகழ் ஆறானன நாதா
இருளின்றி யிருந்துன்பதம் என்றெய்துவல் அடியேன்
மருவொன்றிய நீபத்தொடை மார்பாவடி வேலா
திருவொன்றிய போரூருறை தேவேகுக வேளே. ௧

433 ஈசன்தரு குமரா இமகிரியான்மகள் புதல்வா
நேசந்திகழ் இருபாவையர் நிலைவொன்றிய வடிவா
மாசின்றுன தருள்நின்றிடு வழிதந்தெனை யாளாய்
தேசொன்றிய போரூருறை தேவாகுக வேளே. ௨

434 புவனஞ்சர அசரஞ்செறி புறனுள்ளொடு கீழ்மேல்
நவமொன்றிய சுகபூரண நாதாசிவ போதா
தவமும்பதி யறிவும்நனி தந்தின்றெனை யாளாய்
சிவனின்சுத போரூருறை தேவாகுக வேளே. ௩

435 சூர்சேனைய அடுவீரர்கள் தொழுபங்ய பாத
ஏர்கூரஎந் நாளும்மென துளமன்னுற நினையாய்
தார்மார்பக கூர்வேலவ தடமாமயில் வீரா
சீர்மேவிய போரூருறை தேவாகுக வேளே. ௪

436 தகரப்பரி மிசையேறிய தாளா அணி தோளா
சுகநற்கதி பெறவெற்குள துகளற்றிட நினையாய்
நிகழ்க்குக்குட விருதாசுரர் நிருபா அரி மருகா
திகழ்வுற்றிடு போரூருறை தேவாகுக வேளே. ௫

437 நல்வந்தனை யடியாருள நாடும்படி தருவோய்
அல்வஞ்சனை யறஎன்னுளம் அருள்செய்தநில் நிறைவாய்
எல்வந்துறு வேலாமயி லேறுந்தெய்வ ராயா
செல்வந்திகழ் போரூருறை தேவாகுக வேளே. ௬

438 கனகும்பன ஒளமாவிழி காணுந்திரு வடியாய்
நினைவும்மல இருளும் அறு நிலைதந்தெனை யாளாய்
வனசந்திகழ் திருமாதருள் வளருஞ்சனர் குழுமித்
தினமும்புகழ் போரூருறை தேவாகுக வேளே. ௭

439 அயனோறி வருமோர் மொழி அரனார்க்கரு ளியவா
மயல்தீர்பரி புரணத்திடை வைத்தின்றெனை யாளாய்
உயர்மாமறை முடிமீதினி லுறுகாரண சுகமே
செயவேலவ போரூருறை தேவாகுக வேளே. ௮

440 வானோர்தொழு பதியேசடை மன்னன்தரு மதியே
ஞானோதயம் அகலாதெனை நண்ணும்படி யருளாய்

கோனேயரு ளோனேகுண வானேமயி லோனே
தேனூர்பொழிற் போரூருறை தேவாகுக வேளே. ௯

441 இசையொன்றிய இயல்நாடகம் எணியோதிய புலவா
வசையின்றி யிருந்தென்றன தடிசேர்குவல் அடியேன்
விசைசென்றிடு மயில்வாகன மிசையேறிய கோவே
திசையெண்ணுறு போரூருறை தேவாகுக வேளே. ௰

442 சோம கிரணப் பெருங்கருணை சுரந்த முகங்க ளோராறுஞ் சுருதி வழுத்தும் பன்னிரண்டு தோளும் நீபத் தொடைமார்பும்,

காமர் நிறச்செம் பட்டாடைக் காட்சி மருங்குஞ் சிறுசதங்கை கலித்த வுபய திருத்தாளுங் கடையேன் துதிக்கப் பணிப்பாயே,

சேம நிதியே சுரர்பதியே தெய்வத் தருவே மலர் மருவே செறிபூ ரணமே ஆரணமே சிறியே னுயிருக் கோருயிரே,

பூம னறியாப் பிரணவத்தின் பொருளைப் பகரும் பூங்கிளியே போற்றும் அடியார்க் கோரருளே போரூர் முருகப் பெருமானே. ௧

443 மறையா கமத்தின் நெறிப்படியே வணங்கு மவரி லொருவன் அல்லேன் மனுபே ரன்பு தழைத்துனை வந்திப் பாரி லொருவன் அல்லேன்,

நிறைவால் நினது புரணசுக நேசித் தவரி லொருவன் அல்லேன் நீச னேனுன் திருப்பாத நிழற்கும் உரித்தே னவேனோ.

சிறையார் தோகை மிசைத்தோன்றுந் தேவே யமரர் பணிகோவே சிவனார் புயத்தி லணைத்தேத்துந் தெய்வக் குதலை மொழிக்குருந்தே.

பொறையா லுயர்ந்த பெரியோர்கள் புந்திச் சுவையாஞ் செந்தேனே புனித நிறைந்த செவ்வேளே போரூர் முருகப் பெருமானே. ௨

444 எண்ணி லாத நெடுங்காலம் எண்ணி லாத பலபிறவி யெடுத்தே யினைத் திங் குவைநீங்கி இம்மா னிடத்தில் வந்துதித்து,

மண்ணின் வாழ்க்கை மெய்யாக மயங்கி யுழன்று லடியேனுன் மாறாப் பெருமை தரும்பாத வனசத் துணையென் றடைவேனே,

கண்ணின் மணியே யுயிர்க்குளியே கருணைப் புயலே சுகக்கடலே கச்சித் தாயுச் சியைமோந்து கண்ணோ டணைக்குந் திருத்தாளா,

புண்ணியோ ரெண்ணிய கரும்பே பொழியும் மதவா ரணமுகத் தோன் பொற்பார் துணையே அற்புதனே போரூர் முருகப் பெருமானே. ௩



445 கள்ளஞ் செறிந்த வஞ்சநெஞ்சக் கயவ னேனைப் புலையனெனைக் கருதா சார ஈனமுடைக் கசட னேனை மயல்செறிந்த,

உள்ள முடைப்பொய் யவனேனை உன்பே ரருளா லுறநோக்கி உயர்பே ரின்பத் திடையிருத்தா துறில்நா யடியேன் உய்வேனோ,

வெள்ளஞ் செறிந்த சடாமகுட விமலன் புதல்வா அரிமருகா வேடர் குலமா மகள் கணவா விறல்மா முனிவர் தொழுந்தலைவா,

புள்ளுஞ் சிமிறுங் கலந்தார்க்கும் புனித நீபத் தொடை மார்பா புரை தீர் தகரப் டரியேறும் போரூர் முருகப் பெருமானே. ௪

446 சீல மிகுந்த பத்திநெறி தினமு மாறு நடையினராய்ச் செலுத்தா நெறியிற் பொறிவழியிற் செல்லா திருந்த வுளத்தினராய்க்,

கோலஞ் சிறந்த படியேநற் குணமுஞ் சிறந்தோ ராகியுனைக் கூடும் அடியார் போலெனையுங்குறித்தாட்கொண்டாய் நீயன்றே,

நாலு வேதந் தொழுதேத்து நாத முடியிற் பேரொளியே நம்பும் அடியார்க் கின்பமெல்லாம் நல்குந் தேவே கயவர் தமைப்

போலுந் திரிந்தேன் உளம்புகுந்த போதா னந்தப் பெருங்கடலே புவியீ டேற மயிலேறும் போரூர் முருகப் பெருமானே. ௫

447 தனுவோ டிலகு கரணமுடன் சாரும் போக புவனம் இவை தமையான் எனதென் றுணர்ந்துமயல் தழைத்துத் தருக்கோ டுழல்கின்றேன்,

உனதாம் அவைகள் மாயையிடை உதிக்கச் செய்தாய் நீயதனால் உள்ள வாறிம் முறைமைதனை உணராச் சிறியேன் உய்வேனோ,

பனகா பரணர்க் குபதேசம் பாலித் தருளும் பரகுரவா பைந்தார்க் கூந்தல் தெய்வானை பரிந்து மகிழ வருகணவா,

புனைபா மாலை தரிந்தேத்தும் பொருவில் அருண கிரிநாதன் புகழ்விட் டின்பம் பெறவுதவும் போரூர் முருகப் பெருமானே. ௬

448 மன்னரா வாருறுசுகமும் வானோர் மகிழ்ந்து பெறுசுகமும் மணிப் பைந் நாகத் தவர்சுகமும் மற்றை யோர்கள் அடைசுகமும், பன்னு மிடத்திற் சிவத்தெழுந்த பரமா னந்த லேசமெனப் பகர்ந்தாய் குருவா யெழுந்தருளிப் படிறேன் மறந்திங் குழல்கின்றேன்,

கன்ன லெழுந்த தெளிசாறே கட்டுமாவின் தீங்கனியே கதலிக் கனியே நற்பலவின் கனகச் சுளையே கதிர்முளையே

பொன்னம் பொருப்பே யென்விருப்பே போதச் சுகமே இஞ்சுகமே புரண வெளியே யுள்ளொளியே போரூர் முருகப் பெருமானே. எ

449 ஓகை புரிந்து நன்னூலால் உணரத் தகுவ வெலாம் உணர்த்தி உறுபே ரருளா ரியனுகி உபதே சங்கள் பல மொழிந்தீண்

டாக மருவும் உயிர்க்குயிராய் அறியா தனயா வையு முணர்த்தி அடியேன் தனையிங் காண்டுகொண்ட அருளுக் கோர்கைம் மாறுளதோ

வாகை புனைவேல் இறையோனே வழுத்து நாலு மறையோனே வானோர்க் குறுசே னாபதியே மலய முனிவன் குருபதியே

பூக மலிந்த செங்குலைக்காய்ப் புடையிற் சிதறக் கயல் பாயும் பொருவின் மருதச் சூழல்செறி போரூர் முருகப் பெருமானே. அ

450 வேத முடியின் உறுபொருளை விரிபூ மிசைச்சே வடி பொருந்த விகிர்த குருவா யெழுந்தருளி விளம்பும் அவித்தை இருளிரிய

ஓது மணியே யடியேனுன் உபய சரணம் மறந்தாலும் உறுபே ரருளால் மனந்திருத்தி உயரச் சரணத் திருத் தாயே

நாத மளிக்குங் குரற்புலியின் நகம்போல் துண்டச் செஞ்சூட்டு நலத்த பொறிச்செஞ் சிறைச்சேவல் நளினக் கரத்திற் பிடித்தோனே

பூத கணங்கள் கொண்டாடப் பொருசூர் குலவேர் களைந்தவைவேல் புனிதப் புயத்தின் மிசையேந்தும் போரூர் முருகப் பெருமானே. கூ

451 அலையி லாத சாகரம்போல் அனிலஞ் சேரா விளக் கதுபோல் அருங்க லிரும்பொன் சமமாகி ஆன தராசின் நுனியதுபோல்

நிலையொன் றியநற் சமாதியுற்று நின்தாள் கமலத் தெழும்பிரச நிறைவா ரிதியிற் புகுந்ததனில் நேசித் தடி யேன் இருப்பேனோ



விலையின் மகுடத் திருமுடியாய் மிளிர்குண் டலங்கள் செறிகாதா வியன்கே யூரத் திருத்தோளா விஞ்சுஞ் சதங்கை சூழ்தாளா

புலையுங் கொலையுங் களவுமில்லாப் புனிதத் தவத் தோர் தொழுதேத்தும் புராரி குமரா வுமைசிறுவா போரூர் முருகப் பெருமானே. ௧௦

---

## 21. குயிற்பத்து

452 நன்றரு ளுதவைங் கரவன் துணைவனை நனிபவனி மலை மகள் மகனைக் குகனை, மன்றினு ளாடிய கொன்றைச் சடைமுடி மன்னன் உவப்புறு பொன்னங் குழவியைக், கன்று குறுந் தடியாவிள எறிதரு கண்ணன் மருகனை யெண்ணுந்துணையைக், குன்றுதொ ருடிய போரூரிறை யைக் கூவாய் வர நீ கூவாய் குயிலே. க

453 மறைமுடி குலவிய பிரமர சத்தினை மருவடி யவருள மலர்வா சத்தினை, நிறைசர அசர வுயிர்ப்புர ணத்தினை நிமல கதிக்கொரு வித்தினை முத்தைச், சிறைமயில் உதயச டானன ரவியைத் தேவர்கள் தொழவரு தேவைக்காவைக், குறைவறு வளநிறை போரு ரிறையைக் கூவாய் வரநீ கூவாய் குயிலே. உ

454 அரிவைய ரெனவரு காகத்திரள்களை அணுகேல் மய லெனும் அலகா னலியும், இருநிதி சுதரெனும் மேகமெழுந் திக்கெய்தேல் கவலைத் திவலைகள் வீசும், பொருவரு சமயக் காடணு கேல்தற் போதமு ரத்தெழு வாதம் அலைக்குங், குருபரனுநம் போரு ரிறையைக் கூவாய் வரநீகூவாய் குயிலே. ந

455 கயவர்க ளெனும்வல் லூறு களிக்குங் காடணு கேல்தீ துகிர்உடல் தைக்கும், மயல்மிகும் உலகவர் வாழ்வெனும் ஒட்டினை மதியேல் அதுமதிவன்சிறை பற்றும், உயுநெறி யினராங் கிள்ளைக ளுடனே உயர்நூற் கற்பக தருவி லிருந்து, குயின் மணி மாடப் போரு ரிறையைக் கூவாய் வரநீ கூவாய் குயிலே. ச

456 பற்பல்வி தப்பூச் சோலைபு காதேபரிபூ ரணமாம் மேகச் சோலையில், எற்பெறநீயெங் நாளும் மகிழ்ந்தங் கிது அது என்றொன் றையுநா டாமே, செப்பம தாய்நின் னையும்நா டாமே சீரரு ளேவடி வாகி யிருந்து, குப்புகழ் போரூ ரப்பனை நாடிக் கூவாய் வரநீ கூவாய் குயிலே. ரு

457 விடயக் கண்ணியி னிற்புகு தாதே மிகுபொறி யென் பது பொறியதை மேவேல். உடலப் பஞ்சரம் யானென மகி ழ்தல் ஓதுந் திசைமேவிப்பறவாதே, மிடையிற் சித்திர நற் புள் ளதுபோல் மிளிர்பூ ரணமா மீதிலிருந்து, கொடைமிக் குதவிய போரூரிறையைக் கூவாய் வரநீ கூவாய் குயிலே.

458 இன்றைக் கெனவும் நாளைக் கெனவும் எண்ணேல்மயி லிறை இன்னமு தூட்டும், பொன்றப் படுசுக துன்புக ளூன் னிப் பூரிப் போடுவாட் டங்க ளுருதே, ஒன்றைக் கருதியி தென்ன தெனுதே யுயர்கதி யின்னைக் கருதிக் கருதிக், குன்றைப் பொருதடு போரூ ரிறையைக் கூவாய் வரநீ கூவாய் குயிலே. எ

459 நிராசை யுடனரு ளேவடி வாயந் நின்மலன் இருசே வடி நிழல் தங்கிப், புராதன மாய்நிக முறுமா னந்தப் பொங்குர சச்செங்கனிநனி துய்ப்பப். பராபர னேகுகனே மயிலோனே பண்ணவ னேவிண் ணவனே என்று, சூரா வணி வோனைப் போரூ ரிறையைக் கூவாய் வரநீ கூவாய் குயிலே. அ

460 சேவற் கொடியுடை யானே யென்றுந் திகழொளி தரு சாம் பூனத தங்கப், பாவைக் கிணையொப் பாரிரு, வோர்தம் பண்புறு மின்பக் கணவா என்றும், யாவர்க் குந்தலை மையனே யென்றும் எழில்மறை புகழ்தரு பொருளே யென்றுங்,கோவைப் போரூர் வாழ்வைக் கருதிக் கூவாய் குயிலே. கூ

461 சூர னுரங்கிர வுஞ்ச பொருப்புத் துணிபட வடிவேல் விடுவோய் என்றுந், தாரணி பன்னிரு புயனே யென்றுஞ் சரவண னேசண் முகனே யென்றுந், தேர்நவ வீரர்கள் துணைவா என்றுந்தேவர்கள் சேனுபதியே யென்றுங், கூரறி வினர்புகழ் போரூ ரிறையைக் கூவாய் வரநீ கூவாய் குயிலே. கo

## 22. கிளிப்பத்து

462 பவள நிறச்செந் திருமேனிப் பஞ்சக் கரவா னைக்கிளை யோன், தவள நிறப்பொடி பூசும்அரன் தந்தருள் நீபத் தாரமுகன், கவுரி கொடுக்கும் முலையமுதங் கமலத் திருவாய் வழிசிறுவன், புவனம் மதிக்கும் போரூரன் புகழ்பே சிக் களி கிளிநீயே. க

463 கன்னிய ரிருவோர் நாயகனைக் கமலக் கண்ணன் மரும கனை, மின்னிய வடிவே லுடையவனை வீரனை யாரினுந் தூயவனை, அன்னிய மில்லா தெங்குநிறை ஆரண னைப்பரி பூரணனைப், பொன்னியல் மாடப் போரூர்வாழ் புண்ணிய னைக்கிளி பன்னுதியே. உ

464 மரகத முடிமேல் ஆறுமுடி மாணிக் கக்கிரி வருவது போல், விரைசெலும் மயில்மேல் வருவோனை வெற்றி கொள் குக்குட விருதோனைப், பரைதரு பிள்ளைப் பெரு மாளைப் பண்பழ கெழுதரு செவ்வேளைத், தரைபுகழ் போரூ ரிறையவனைத் தண்கிளி பேசாய் அன்புறவே. ங

465 உலகினை நொடிவலம் வந்தானை யும்பர்கள் நகர்வலம் வந்தானைப், பலகலை முழுதும் அறிந்தானைப் பரகதி யடைநெறி தந்தானைச், சிலு கிடும் அசுரரை வென்றானைத் தேவர்கள் பரவிட நின்றானை, இலகிய போரி யிருந்தானை யிசையாய் கிளியே நசையாயே.

466 எனையொரு பொருளா யுளமதனில் எணியருள் பொழியுஞ் சுகமுகிலைக், கனைகட லமுதைச் செந்தேனைக் கன்னலை ரசதா ளிக்கனியை, நனைவழி பலவின் பொற் சுளையை நசைதருகட்டு மாங்கனியைப், புனைமதில் சூழ் போரூரிறையைப் பூங்கிளி சொல்லுதி தீங்கறவே. ரு

467 வாளைகள் பூகச் செங்குலையின் மன்னிய பொன்னுல குறுதென்னம், பாளையின் மோதச் சிதறிவயற் பவளந் தரள மெனத்திகழக், காளைய மள்ளர்கள் மடைதோறுங் கால்வாய் தோறும் அணைகோலும், நீளணி போரூர் நாய கனை நிமலக் கிளியே புகல்வாயே. சு

468 சாரலி னுரப் பரிமளமுந் தண்டலை யுறுசம் பகமணமுந் தீர முறுங்கே தகைமணமுஞ் சீர்நந் தனமல் லிகைமணமும் நாரியர் குழலூட் டகில்மணமும் நாகர் வியப்புறவேவீசும் பேருறு போரூர் நாயகனைப் பேசாய் கிளியே மாசறவே.

469 ஆறுசரோருக முகனென்றும் அணிதிகழ் பன்னிரு புயனென்றும், பேறுத வும்பத யுகனென்றும் பெயர்வே லொளிருங் கரனென்றுந் தேறுமுளத்தினர் வாழ்வென் றுந் தேவர் தமக்கொரு கோவென்றும், வீறுயர் போரூர் நாயகனை விளம்பாய் கிளியே கலங்காயே. ௮

470 முருகா குமரா சரணென்றும் முதிரா வயதாய் சரணென்றும்
நிருபா திகனே சரணென்றும் நிமலா குகனே சரணென்றும்
மருகா வொளியே சரணென்றும் மருளே பொருளே சரணென்றும்
மருவார் பொழில்சூழ் போரூர்வாழ் மயிலோ னைக்கிளி புகல்வாயே. ௯

471 இன்பக் கடலே சரணென்றும் எண்குண மலையே சரணென்றும்
அன்பர்க் கமுதே சரணென்றும் ஆருயிர் முதலே சரணென்றும்
அன்புக் கறிவே சரணென்றும் வளர்பிர ணவமே சரணென்றுங்
கொன்பெற் றுறுபோ ரூரிறையைக் கோலக் கிளியே ஓதுவையே. ௧௦

---

## 23. வண்டுவிடு தூது

472 மூக்கா லுழுதுண்ணும் வண்டுகாள் மூத்தோன் இள வலைக் கண்டுதான், தேக்கா ரமுதரன் மைந்தனே சீர்ப் பார்ப் பதிதரு கந்தனே, நோக்கா யுனைநினைந் தன்பினால் நோற்பாள் தனையின மென்றுநீர், மாக்கா வளமலி போரி வாய் மாத்தா ளிணைதொழு தேத்துமே. ௧

473 தாமரைப் பூமணத் தேனெலாந் தண்டுறை யுண்டுறை வண்டுகாள், கோமளப் பாவையர் கேள்வனைக் கொண்டை மயூரப்ர சண்டனைப், பாமணப் போரியிற் கண்டிதோர் பாவைப ணிந்தன ளென்றுதான். நீர்மனத் தன்பொடு பேசுவீர் நீள்சுகப் பொய்கையில் மூழ்கவே. ௨

474 தாதினைத் தேனொடுங் கூட்டியே சந்தனம் பூசிய வண்டுகாள், ஆதரித் தென்னைமுன் ஆண்டவன் ஆறு முகப்பெரு மாளுடன், பேதைமைப் பான்மைய ளாயினும் பிச்சியை யொத்தவ ளேனுமியான், மூதருட் பேரமு தாழிவாய் மூழ்கிடப் பேசுமின் நீவிரே. ௩

475 சோலை விருந்திட வுண்டுதான் சோபனம் பாடிய வண்டுகாள், காலமெ லாமுனை யேநினை காரிகை கைதொழு



தாளென்றே, ஆலையின் வாயென மேதிவாய் அம்புயத் தேன்சொரி போரிவாழ், வேலவன் நூபுரக் கஞ்சமேல் விழுந்தெழுந் தாடிவி ளம்புமே. ௪

476 கொங்கலர் மாமைம தாணிமேற் குயின்ற மணியன்ன வண்டுகாள், மாங்கனி வாழையின் தீங்கனி மன்னு பலாக் கனிச் சாறெலாந், தேங்குறும் போரியி லுண்டுநீர் செவ் வேள் பதம்பணிந் தேத்தியே, ஓங்கொளி வீடுற நாயினேன் ஓதுமின் என்துலை நீவிரே. ௫

477 சந்தனச் சாரலின் நெய்தலில் தண்டலை நந்தனச் சூழ லில், வந்தொரு நால்வகைப் பூநறை வாசந் துளைந்தாடும் வண்டுகாள், கந்தனைப் போரிவி சாகனைக் கண்டென் கவ லைக்க ருத்தறச், சிந்தை மகிழ்ந்தெனை யாளவே செப்பு மின் எற்குற வானிரே. ௬

478 மல்லிகைத் தாதரித் துண்டலர் வாரிசத் தேன்கொடு வாய்கழீஇ, மெல்லிதழ்ப் பூவணை மீதிலே மென்துயில் கொண்டுறை வண்டுகாள், அல்லியல் நெஞ்சினள் அன் பிலாளான நெறிபுரி யாதவள், புல்லிய ளென்றுவி டாதெ னைப்போரி முருகனுக் கோதுமே. ௭

479 தண்டலை யூர்வண்டு நெய்தலூர்த் தாவடி போய்ப் பனைக் கள்ளெலாம், மொண்டு மிகக்கொள்ளை கொண்டு தான் மொய்த்து வருஞ்சிறை வண்டுகாள், பண்டெனை யாண்டருள் நேசனைப் பண்புறு போரியில் வாசனைக், கண்டினம் ஆண்டுகொ ளென்றுநீர் காண வுரைத்திடு வீர்களே. ௮

480 மாமலைச் சேணிலத் தேதுஞ்சி வார மனைபுகுந் துண்டு பின், கோமலர்க் காமுக சாலையிற் கூடும் அரசிள வண்டு காள், தேமலர்த் தார்புனை மார்பனைச் செஞ்சிறை யஞ் சேவ லாளனைக், காமணக் குந்திருப் போரிவாய்க் கண் டெனை யாண்டிடச் சொல்மினே. ௯

*481 நீல நிறப்பொறி வண்டுகாள் நித்தலுங் கைதொழு வேன்உமை, ஏலவுரைத்த மொழிகளை யெல்லாம் அயர்த்து விடாதுநீர், சால நிகழ்த்திடும் போரிவாழ் சண்முக வேல னுக் குங்களைப், போலு மெனக்குற வுண்டுகொல் பொங் கரும் நுங்களுக் கீவலே. ௧௦

## 24. சித்தொளி

482 - 491 கட்டளைக்கலிப்பா 492 - 501 கொச்சகக் கலிப்பா

482 அருளி ருந்தநின் பாத மடைந்தவர்
அன்பி ருந்தநெஞ் சாலுனி வாழ்த்தியும்
மருவி ருந்த மலர்தூய் வணங்கியும்
மன்னு காலங் கழித்தனர் நாயினேன்
உருவி ருந்தயர் கின்றபொய் வாழ்க்கையை
உன்னி யுன்னி யுழன்றே மயங்கினேன்
தருவி ருந்த பொழில்வளம் மன்னிய
சமர மாபுரிச் சண்முக வேலனே.

483 கானல் நீரினை மெய்யென்ற வாவியே
கனவி டாய்கெட வுண்ணக் கருதினே
னான நீருவர் நீரென நாடுவ
தன்ன மாமய லென்றினி யாறுவேன்
வான நாடரும் மாமுனி வோர்களும்
மதித்த ஆரண முந்துதித் தேதொழுந்
தான மாமழை யானைக்கி ளையவா
சமர மாபுரிச் சண்முக வேலனே.

484 கனவி லேகண்ட காட்சிகள் யாவுமக்
கனவிற் பொய்யெனக் கண்டுத னைக்கண்டோன்
பின்னையும் அந்தக் கனவினை மெய்யெனப்
பேணு மாறும யங்கினேன் பேதையேன்
அன்னையுந் தாதையும் ஆரிய னும்மென
ஆண்ட தெய்வமும் நீயென நம்பினேன்
தனைவி டேலுன்றன் சித்தமென் பாக்கியஞ்
சமர மாபுரிச் சண்முக வேலனே.

485 பழுதை பாம்பல என்றெளி யாற்கண்டும்
பாம்பு வாதனை தீரா தவனென
எழுமுன் சிற்சுகம் நின்னரு ளாற்கண்டும்
இந்நிலப் பொய்மை வாதனை நீங்கிலேன்
முழுது ணர்தல் முதலாய எண்குண
மொய்த்த பஞ்சர மேமறை யுச்சியே
தழுவு வெண்சுதை மாளிகை நீடிய
சமர மாபுரிச் சண்முக வேலனே.

486 பிரண வத்தை விடஅக ராதிய
பிறங்கு ருத பரிசெனப் பேதமாம்
முரண வித்த சொரூபம்விட் டிவ்வுயிர்
முதல இன்றென என்றனக் கோதினோய்
அரணெ ரித்தவன் மைந்தநின் தாள்துணை
அண்டி னேற்கு மவித்தையுண் டாகுமோ
தரணி யைக்கண்ட பேர்க்கும் இருளுண்டோ
சமர மாபுரிச் சண்முக வேலனே.

487 இந்த்ர ஜாலம்பொய் யென்றதன் மூலத்தை
இயம்பிக் காட்டக்கண் டோன்மயக் கெய்தல்போல்
பந்த ஞாலம்பொய் யென்றிதன் மூலநீ
பகரக் கண்டும் படிறேன் மயங்கினேன்
கொந்து லாவிய கொன்றைச் சடாடவிக்
குழக னுக்கழ கானகு மாரனே
சந்த னுடவிச் சாரல்வி ரைதருஞ்
சமர மாபுரிச் சண்முக வேலனே.

488 பளிக்கு மண்டபத் தேயுறு நாய்அதன்
பன்னி ழற்களும் மெய்யென நாடல்போல்
ஒளிக்கு மாயையி னின்றெனை யெண்ணிலா
உருவ மாக்கண் டுழன்றனன் ஐயனே
வெளிக்கு ளேவிளை யுஞ்சுக வாரியே
வித்தி லாதெழு சுத்தசொ ரூபமே
தளிர்க்கை யார்கள்ந டிக்கின்ற மாடமார்
சமர மாபுரிச் சண்முக வேலனே.

489 மைந்த னேதுபி ழைபுரிந் தாலுமே
மன்னு தாதைபொ றுத்தருள் செய்தல்போல்
எந்தை யென்பிழை நீபொறுத் தாள்வதுன்
இனிய பேரரு ளுக்கியல் பாகுமே
அந்த ணாரிய னாகிவந் தேழையேற்
கருள முதம ளித்தகண் ணாளனே
சந்திர காந்தத்த கடொளிர் மாளிகைச்
சமர மாபுரிச் சண்முக வேலனே.

490 விண்ணி லேயெழும் இந்திர சாபத்தை
மேக மின்னலை யொத்தெழு காயங்கள்
எண்ணி லாதள டுத்திளைத் தேனையென்
றின்ப வாரியில் வைத்தினைப் பாற்றுவாய்

கண்ணி லேகண்ட சித்தொளிக் காட்சியே
கருத்தி லேகண்ட இன்பசந் தோடமே
தண்ணி லாமுடி வேணியர் செல்வமே
சமர மாபுரிச் சண்முக வேலனே. ௯

491 காலன் செங்கட்க டாவினி லேறியே
கயிறு வீசிப் பிடியா முனமெனை
வேலுஞ் செங்கையி லேந்தி மயில்மிசை
விரைவில் வந்துவந் தஞ்சலென் றருளுவாய்
ஆல முண்ட களத்த ரிடத்துறை
அரிவை கொஞ்சுறக் கொஞ்சுபைங் கிள்ளையே
தாலம் பாளை மதுக்குடம் ஏந்திய
சமர மாபுரிச் சண்முக வேலனே. ௰

492 மாணிக்க மாரிசொரி வானம்போல் நாயேனைப்
பேணிக்க ருணைபொழி பேரின்ப மாப்புயலே
வீணிற்கா லங்கழிக்கும் வெவ்வினையேன் நெஞ்சகத்துன்
தாணிற்க வைப்பாய் சமரபுரி நாயகமே. ௧

493 பெரும்பே தைமையேன் பிழைகுறியா துள்புகுந்த
அரும்பே ரருளாலென் னகங் குளிர்ந்தேனே
கரும்பேயென் னுருயிரின் கண்ணிருந்த கண்ணே
தரும்போ தகமே சமரபுரி நாயகமே. ௨

494 பேராத சுத்தவெளிப் பேரின்ப சாகரத்தே
ஏராத நாயேன் இருப்பதினி எந்நாளோ
வாராருங் கொங்கையுமை மடிமேலுந் தோள்மேலுஞ்
சாரா வளருஞ் சமரபுரி நாயகமே, ௩

495 காட்டுவதுங் காண்பதுவுங் காட்சியும்போய் நிறைஇன்ப
வீட்டினிடந் துயின்றே வேசறிக்கை தீர்வேனோ
மாட்டின் மிசையேறு மகதேவர் சேயேநின்
தாள்துணையே தஞ்சஞ் சமரபுரி நாயகமே. ௪

496 ஏரகம் அன்பாகி யெழிலுறுபா ஈந்தோர்க்குன்
சீரகமீந் தின்புதவுஞ் செல்வமலி தேசிகனே
நாரகமொன் றில்லாத நாயேனை யாளவைக்குந்
தாரகமே சேயே சமரபுரி நாயகமே. ௫

497 பாலுக்குள் வெண்ணெயெழு பான்மைபோல் என்னுளத்தின்
சீலத்தை யெல்லாந் தெளிவிப்ப தெந்நாளோ



வேலுக் கரசே விறல்மா மயிற்கரசே
தாலத் தரசே சமரபுரி நாயகமே. ௬

498 வெள்ளச்சோ மன்தரித்த வேணியனார் ஆனைமுகப்
பிள்ளைக் கிளையதிருப் பிள்ளைப் பெருமாளே
கள்ளத்தே னுக்குன் கருணையின்பங் காட்டியதைத்
தள்ளத் தகுமோ சமரபுரி நாயகமே. ௭

499 சோரிவேற் கண்ணியர்மேல் தொல்புவிமேற் பொன்னதன்
வாரி யலைபோல் வருமாசை தீர்வேனோ [மேல்
நாரியிடப் பாகருக்கு நான்மறையின் உட்பொருளைத்
தாரிபெற வோதுஞ் சமரபுரி நாயகமே. ௮

500 காமர்குறப் பெண்மானுங் காமுறுதெய் வப்பிடியுங்
கோமளஈ ராறுபுயக் குன்றிலுறச் சேர்ப்போனே
ஓமெனும் வித்துள்ளே யுதித்ததரு வேயெனையுந்
தாமரைத்தாள் சேராய் சமரபுரி நாயகமே. ௯

501 கும்பமுனிக் கின்பமெல்லாங் கொள்ளைகொள்ளத் தந்
வம்பனேற் கின்பம் வழங்குவதும் உண்டாமோ [தருளி
செம்பதுமக் காடலர்ந்த தேசு தரு பேரழகா,
சம்புதவும் மைந்தா சமர புரி நாயகமே. ௰

## 25. ஊசல்

502 சுந்தரமா கந்தொடு மண்டபத்தி னூடே
சுரர்தருக்கள் நாற்றிசையும் நிறுத்தி நாப்பண்
முந்தியசாம் பூனதச் சங்கிலிகள் பூண்ட
முதிர்கதிர்வீ சுங்குலிசப் பலகை மீது
சிந்தைமகிழ்ந் தினிதிருந்தோர் அரம்பை மாதர்
செங்கரங்கள் கொண்டுசிறப் பொடுநின் றூட்டத்
தந்திமுகற் கிளையவரே யாடீ ரூசல்
சமரபுரி நாயகரே யாடீ ரூசல். ௧

503 வடவரையோர் பன்னிரண்டின் முடியின் மீதே
மார்த்தாண்டர் பன்னிருவ ருலாவல் போலுஞ்
சுடர்மணிவீ சுங்குழைகள் புயங்கள் மீதே
தோய்ந்தாட மார்பிலகு மதாணி யாடக்

கடகநிலை யசைந்தாட மகுடம் மின்னக்
கமலபதச் சிலம்பொடுகிண் கிணிக ளாடத்
தடவரைகள் கிடுகிடென மயில்ந டாத்துஞ்
சமரபுரி நாயகரே யாடீ ரூசல்.

504 கங்கைமுடித் தாதையுளத் துவகை பூப்பக்
கணபதியா கியதமையன் களித்து நோக்கப்
புங்கநவ வீரரெனும் இளவ லானோர்
புடையின் நின்று பணிகேட்ப இடைவிடாமே
செங்கண்மா லெனுமாமன் வியந்து போற்றச்
செழுமறைமைத் துனன்தரிசித் தங்கை கூப்பத்
தங்கமணிச் சிலம்படியென் சென்னி சூட்டுஞ்
சமரபுரி நாயகரே யாடீ ரூசல்.

505 இந்திரன்வேத் திரங்கொடுகட் டியங்கள் கூற
இரவிசசி யிருபாலுங் கவரி வீசச்
சுந்தரமா மதனுருக்கொண் டடைப்பை யேந்தத்
துணையுடனே ழ் திசையவரு ழியங்கள் செய்யக்
கந்தருவர் தும்புருநா ரதரும் யாழின்
கன இசையும் மிடற்றிசையுங் கலந்து பாடச்
சந்தமுறு புழுகுமண மெங்கும் வீசச்
சமரபுரி நாயகரே யாடீ ரூசல்.

506 நவமேவு பூதகண நாத ராட
நாடரிய தேவர்கள்பூ மாரி வீசச்
சிவமேவு முனிவரர்பல் லாண்டு கூறத்
திகழுரகர் மாணிக்க மாரி தூவப்
பவவேலை மூழ்காத அடியர் நாடிப்
பரிந்துபர மானந்தக் கடலின் மூழ்கத்
தவமேவும் அந்தணர்கள் வேதம் ஓதச்
சமரபுரி நாயகரே யாடீ ருசல்.

507 இமயமலை தனிற்பிறந்த நற்றாய் வாழ்த்த
எழிற்சடையிற் குடியிருந்த பெருந்தாய் வாழ்
கமலமலர் மாமியுளங் களித்து வாழ்த்தக்
கலைவாணித் தங்கைபுயம் புகழ்ந்து வாழ்த்த
அமரர்புகழ் சசிமுதலாம் அரம்பை மாதர்
ஆலத்தி யெடுத்தேத்த அருகில் நின்று
சமைவுறுநற் றேவிமா ரிருவர் போற்றச்
சமரபுரி நாயகரே யாடீ ரூசல்.



508 அருணகிரி நாதன்மகிழ்ந் தோது பாடல்
அருந்தமிழ் நூல் தெளிந்திடுநக் கீரன் பாடல்
இருள்நையமெய் யன்பர்குழாம் இசைந்து பாட
இன்னியங்கள் ஐவகையின் சும்மை யார்ப்பக்
கருணைபெறும் அரசர்வணி கேசர் மேலாங்
காராளர் முதலெவருஞ் சேவை செய்யத்
தருணவளம் மாறாத பெருமை மேவுஞ்
சமரபுரி நாயகரே யாடீ ரூசல். ஏ

509 மகளிரினம் மயிலினம்போல் நடனம் ஆட
வண்டினங்க ளவர்குழல்மா லையில்நின் றூடப்
புகரறுமெய் யன்பரின்ப நடன மாடப்
பொன்னுலகோர் மண்ணுலகோர் புகழ்கொண்டாட
இகலுறுபொய் யவுணருளம் நனிதிண் டாட
இலைவேலின் வலியலகை பாடி யாடத்
தகைமைசெறி அளகைநிகர் வளமை மேவுஞ்
சமரபுரி நாயகரே யாடீ ரூசல். அ

510 கோழியெழு தியவிருதும் வேலுந் தோகைக்
குரகதமும் உடையவரே யாடீ ரூசல்
ஊழியனற் சினச்சூரன் சேனை யெல்லாம்
ஒருங்கறுத்த சேவகரே யாடீ ரூசல்
ஆழியலைத் துயரமெல்லாம் அகற்றி யென்னை
ஆண்டுகொண்ட தேசிகரே யாடீ ரூசல்
தாழியனை களவு கொண்டோன் மருக னாரே
சமரபுரி நாயகரே யாடீ ரூசல். கூ

511 பொதியமுனி குருபரரே யாடீ ரூசல்
புவிவாழ அருள்பவரே யாடீ ரூசல்
முதியதமிழ் உரைத்தவரே யாடீ ரூசல்
முத்தியெனக் களித்தவரே யாடீ ரூசல்
அதிகவடி வழகினரே யாடீ ரூசல்
அகிலமழை நிகர்ப்பவரே யாடீ ரூசல்
ததையு மலர்த் தாரினரே யாடீ ரூசல்
சமரபுரி நாயகரே யாடீ ரூசல். க0

## 26. சிற்சுகம்

512-521 விருத்தக்கலித்துறை 522-529 அட்டகம் 530-539 பெருங்கழி நெடில் விருத்தம் 540-642 குறுங்கழி நெடில் விருத்தம் 643-652 சந்தக்கழி நெடில் விருத்தம் 653-685 கட்டளைக் கலித்துறை 686-695 நேரிசை வெண்பா.

512 வடமலை வில்லான் உதவிய வொற்றை மருப்பாளன்
திடமுறு துணையே யெனதுயிர் நிறையுஞ் செவ்வேளே
இடமுறு நின்பூ ரணசுகம் அடைகுவ தென்றடியேன்
தடமயி லேறுஞ் சேவக சமரப் பதியானே. ௧

513 உமையமை தனமா ரமுதக் கடலுண் டுயர்சோதிக்
கமைவுறு பதிகப் பெருமழை பொழியும் அருள்வானே
இமையள வும்மற வாதுனை நாடுவ தென்றடியேன்
சமரம யூரப் பரியாய் சமரப் பதியானே. ௨

514 அண்டர் மணிக்குழு நின்றொளிர் கடகத் தணிபூண்ட
திண்டிறல் வாகு இராறுள மோனச் செவ்வேளே
மண்டிடும் அன்பினர் போலடி யேனை மதித்தாளாய்
தண்டைகொள் பாத சரோருக சமரப் பதியானே. ௩

515 அறிவொளி யேயறி வோரமு தேபுவி யாதியெலாம்
பிறிவரு பூரண மேசுர ரோது பெரும்பொருளே
பொறிவழி செலுமென் பிழைகுறி யாது பொறுத்தாளாய்
தறையுயிர் வாழ்தர நிலவிய சமரப்பதியானே. ௪

516 வேடர் குலச்சிறு மானனை வுற்ற விறற்புயனே
ஆடர வப்பணி யத்தன் அளித்தருள் அற்புதனே
மூட னெனத்தமி யேனை விடுத்திடல் முத்திதருந்
தாடலை வைத்தெனை யாளுதி சமரப் பதியானே. ௫

517 நல்லா ரல்லார் செய்தொழில் செய்யும் நாயடியேன்
எல்லாம் வல்லார் பணிநின் பதமல ரென்றடைவேன்
தொல்லா ரணமுத லெல்லாம் ஓது சுகாதீதா
சல்லா பவிநோ தத்தாய் சமரப் பதியானே. ௬

518 இலகிய கற்புக் கடவுட் பிடிசே ரெழில்மார்பா
விலகொளி மொய்த்துன தருளென் அகத்து வெளிப்படுமே



நிலவிய குக்குட விருது படைத்த நெடும்புகழோய்
சலச மலர்ப்பத முருகா சமரப் பதியானே. ௭

519 உனலரும் அன்பினர் நினையும் படிவம துடையோனே
நினைவு கடந்தவர் அறிவெழு சுகமாய் நிறைவோனே
எனையுமொ ரன்பினன் எனவுந் திருவுளம் எண்ணுதியோ
தனபதி யளகையில் நிலவிய சமரப் பதியானே. ௮

520 வானவர் முனிவரர் பாதலர் உலகர் வணங்கியசாம்
பூனத நூபுர வோசை முழங்குறு பொற்பாதா
ஞான பராவமு துண்குவ தென்றினி நாயடியேன்
தானவர் நூறிட வேல்விடு சமரப் பதியானே. ௯

521 உலகுயிர் பரமுயர் சிவநிலை யாவையும் ஒன்றுக
நிலவிய சொருபம தலதிலை யென்று நிகழ்த்தியவா
இலகிய அதனிடை யசைவற வுறைகுவ தென்றடியேன்
தலமகிழ் தருபுகழ் பெருகிய சமரப் பதியானே. ௧௦

522 திருவும் வெளைமுள ரியினி லுறைதரு தேனும் மாதவ
ஞானமும், மருவ விழிவழி கருணை பொழிதரு மாகர் சேவித
மேகமே, உருவும் அருவமும் ஒளியும் இருளுமில் ஒன்ற தாம் பொரு
ளென்றுநீ, தருதி யெனதுளம் நிறைய வளமுள சமர மா
நகர் வேலனே. ௧

523 மதியும் அரவமும் நதியும் இதழியும் வைத்த செஞ்சடை
அத்தனார், அதிக தயவுடன் ஒருசொல் மொழியென அருள்செய் பரகுரு
தேசிகா, விதியும் அறிவரு பரம சுகமதை மேவ இனியெனை
யாளுவாய், ததிதி திமியென நடன மயில்வரு சமர மா
நகர் வேலனே. ௨

524 அகில முறுசர அசர மொடுபுறம் அகமும் நடுமுடி வாதி
யுங், திகழு மொருசுக சொருப மாகிய தேவ னேயருள்
நாதனே, ககன பதிதொழும் உனது பதமலர் கடையனேன்
முடி சூட்டுவாய், தகைமை செறிமறை யவர்கள் புகழ்தரு
சமர மாநகர் வேலனே. ௩

525 அறிவொ டறிபவன் அறிய வருபொருள் அடைய வொரு
பொரு ளாகியே, பிறிவு சிறிதுமில் மவுன மாகிய பேசருஞ்
சுக மானவா, நெறிகொ ளுனதருள் உதநி பெற எனை
நினைதி திருவுளம் அதனிலே, தறுகண் அரவணி பரம
னுதவிய சமர மாநகர் வேலனே. ௪

526 கனக வடவரை யருவி சொரிமுறை கரட குஞ்சர முக
வனார், மனமும் விழிகளும் மலர அழகொளிர் வாகனே
தோகை பாகனே, இனவே நிகருறு முனது திருவடி
யெனது முடியுற நினைகுவாய், சனகன் மகள்பதி மருக
னாகிய சமர மாநகர் வேலனே. ௫

527 இமய கிரிதவ வுதய மயில்முலை யின்ன ருட்சுதை வாரி
யுண், டமைவு தருதிரி நயன வரைமிசை யணிசெய் கவி
பொழி மேகமே, சிமைய வரைதொறும் ஆடு நின்பத சேவை
தந்தெனை யாளுவாய், சமர மயில்மிசை யுதய சூரிய சமர
மாநகர் வேலனே. ௬

528 குறவர் மடமகள் களப புளகித குடமு லைச்சுவட ணுகிய
நறவு கமழ்தரு தெரியல் மார்பக நாய காகரு ணாலயா
உறவு மெனதுய ரறிவும் வளமையும் உனதுபரிபுரபாதமே
தறையி னுயிர்வகை தழைய நிலவிய சமர மாநகர்வேலனே.

529 தெய்வ சிந்துர நயன இணைகுடி சேரு மேருறை செம்புயா
மெய்வ ழுங்குகண் ணாள னேநவ வீரர் சேவித தாளனே [ய்
செய்வழுங்கயில் மன்ன என்னுளம் நின்று நன்றருள் பாலியா
சைவநெறியின ருய்ய மனமகிழ் சமர மாநகர் வேலனே. ௮

530 சுருதியின் முடிவு தெளிதரு பரம சுகமுறக் கலசமா
முனிக்குத் துகளறும் அரிய பொருள்பகர் குரவ துதி
பெறும் உவமையில் அழக
கருதரும் அடியர் பவவலை துணிசெய் காரண பூரண எனவுன்
கழலிணை யடியேன் மனதினில் நினைந்து கசிந்துநெக்
குருகுநா ளுளதோ
செருவயின் அசுரர் குலமணி யனைய திறலுடை
யொருமக சூரன் திகழுரம் உருவ அலைஅயில் விடுத்த
சேவக பாவக அதீத
தருமணி யிகலி யருள்கர கமல தனிநெடு மயூரவா
கனனே சததள கமல மருவிய வயல்சூழ் சமரமா நகருறை
குகனே. ௧

531 முரணுறு கொடிய பவமெனும் உததி முழுகலும்
எழுதலுமாகி முதிர்கரை யறியா திடைதடு மாறி முடலை
கொள் விடயமென் றுரைசெய்



உரமரு மகர மிடையிடை யடர உய்வகை யொரு
திசை யின்றி உழலுமென் றனக்குன் கழலிணை யம்பி உவந்
தளித் தாளுநாள் உளதோ
விரவிய களப ம்ருகமத படீர விரைகமழ் புயாசல வீர
விரிகதி ரிலகு மரகத மயிலின் மிசைவரு மொருபெருங்
குமர
சரவண விசாக குக்குடத் துவச சண்முக சச்சிதா னந்த சததள
கமல மருவிய வயல்சூழ் சமரமா நகருறை குகனே. ௨

532 விலகிய கலக விழிமட வார்தம் மென்முலைக் குவட்
டிடை யிழிந்து மிகுமய லாசை வெம்புலி பாய மெய்ம்மறந்
துன தருள் நினையாப்
புலமிலி யிவனென் றெனையிக ழாதுன் புனிதசெஞ்
சரோருகம் இணைந்த பொற்பினில் திகழும் அற்புத பாதம்
பொருந்திடத் திருந்தருள் புரியாய்
பலகலை முழுதும் அறிதரு புலவ பரகதி நெறிதரு குரவ பதகரை
முடுகி யடுமொரு வீர பணிசுர ரெணியடை நிருப
தலமதி விரவி வரவொரு தொனிசெய் தழைசிறைச்
சேவலம் விருத சததள கமல மருவிய வயல்சூழ் சமரமா
நகருறை குகனே. ௩

533 அழலுறு மெழுகின் அரிவையர் மயலின் அனுதினம்
அகநெக அழியும் அசடனை மதியில் கசடனை யறிவி லாதனை
மாதவ மிலனை
விழலனை யதிக விரகனை மதுர மிலதொரு வசனனை
முனிவின் விறலனை யுனது கழலிணை குறுகும் வித
மளித் தாளுநா ளுளதோ
புழைபெறு பனையிற் கரமலைப் பிடரிற் பொங்குசெங்
கதிரொரு கோடி பொற்பினில் திகழ்வ தொப்பெனச்
சிறந்து பொன்னுல குலவிய புனித
தழுவரை பெரிய கற்பகா டவியின் தண்மலர் மாலிகா
பரண சததள கமல மருவிய வயல்சூழ் சமரமா நகருறை
குகனே. ௪

534 உததிகொள் குமிழி உடுநிரை உயிர்கள் ஒலிகெழு
திரைமலி புளினத் துறுமணல ளவை யளவிடும் ஒருவன்
உளனெனி லெனதுறு பிறவி

விதவகை யறியு மவைகளி லடியேன் மெலிவுறு மெலி வைநீ யறிவாய் விகசித நினது மலரடி யுதவி வெந்துய ரகற்றிட நினையாய்

நதிபெறு சடில மணிமுடி யொருவன் நகைபெற இருசெவி குளிர நற்பொரு ளுரைத்த அற்புதக் குரவ நாதபூ தங் களின் தலைவ

சதியுடன் நடன மிடுமயி லுரவ சதுரமென் மதுரவா சகனே சததள கமல மருவிய வயல்சூழ் சமரமா நகருறை குகனே. (ரு)

535 சிகரியின் உதய பரிதியின் மணிகள் திகழுறு மகுடமோ ராறுந் திரளுடு பதியின் முகங்களோ ராறுந் திருவிழி மலர்களீ ராறுங்

ககனமூ டுருவு கனகமால் வரையிற் கதித்தெழு புயங் களீ ராறுங் கடிகம ழுபய பதங்களு மெனது கருத்திலுற் றிருக்குநா ளுளதோ

நிகரறும் உரகன் முடிநெற நெறென நிகழ்வட வரைகிடு கிடென நிலவிய வுலகை யொருநொடி யதனில் நிலைபெற வுலவுசீ ரடியாய்

தகைபெறு குரவர் மடவர லியானை தந்தருள் மடவரல் கணவ சததள கமல மருவிய வயல்சூழ் சமரமா நகருறை குகனே. சு

536 கசடறு ககன மகபதி யுலகிற் கடிதரு மருமலர்க் கூந்தற் கடவுளர் மகளி ரிருபுடை கவரி காலசைத் திரட்டமா முனிவர்

திசைதொறும் அமரர் மறைமொழி யாசி செப்பிட வொப் பிலா துலவுஞ் சேவக நினது பதாம்புயத் தெனது சிந்தை யைச் செலுத்துநா ளுளதோ

கெசமுக னுடலம் இருதுணி படுத்த கேழயிற் படைவலன் ஏந்துங் கேசரி தெய்வக் கம்மியன் இயற்றுங் கிண்கிணிச் சரண ஆனந்த

தசமுகன் மடிய வொருகணை தொடுத்த சதுரனன் மரு கனே முருகா சததள கமல மருவிய வயல்சூழ் சமரமா நக ருறை குகனே. எ



537 அவகதிபுகுது நினைவுடன் இயங்கி அடர்வுறு விடயமென் கடுவை அயின்றயின் றனந்த நாளெலாங் கழித்த அறிவில் உன் மத்தனேன் தன்னைச்

சிவகதிக் குரிய னெனத்தெளி வித்துத் திரிமல மயக்கவேர் களைந்து திகழுறும் அழல்சேர் இரும்புநீ ரென்னத் திரு வடிச் சேர்த்துநா ளுளதோ

கவனமாம் புரவி யேழுறப் பூண்ட கடிரதக் கடவுளுக் குடைய கதிரெனத் தோன்றும் அயிலுடைக் குமர கந்த நந் தாமணி விளக்கே

தவநதி பெருகுஞ் சடிலஆ னந்தத் தண்கட லுதித்தஆ ரமுதே சததள கமல மருவிய வயல்சூழ் சமரமா நகருறை குகனே. அ

538 துகளறும் உலக மலிநிசி பருகுந் துரிசறு பரிதிகோ டிகளிற் சுடர்விடு நினது திருவுரு அழகுந் துலங்கிய முகங்களோ ராறும்

பகரரு மணிகள் சுடர்விடு கடகப் பருப்பதப் புயங்க ளீராறும் பரிபுர கமல பாதமுஞ் சிறியேன் பரிவொடுங் காணுநா ளுளதோ

செககண செகண செககண செகண செஞ்சின திகுதகு திகெணச் செறிமுர சுடுக்கை மத்தளம் அலகை திசை யொலி சென்றிட முழக்கச்

சகதலத் தசுரர் மணிமுடி யுருளத் தடக்கைவேல் விடுத் தசே வகனே சததள கமல மருவிய வயல்சூழ் சமரமா நகருறை குகனே. கூ

539 திடமுறு ககன மகபதி யமரர் சித்தர்விஞ் சையர் அரி பிரமர் செயசெய எனவே கற்பகா டவியிற் செழுமலர் பொழிந்துநின் றிறைஞ்ச

நடமிடு குழகன் அகமகிழ்ந் துதவு நாதவென் றிடைவிடா துன்னும் நன்மனம் அளித்துப் புன்மனம் போக்கி நாயி னேன் றன்னையாண் டருளாய்

கடதட விகட குஞ்சரா னனத்துக் கடவுளுக் கிளையநற் களிறே கதிதரு தருவே நதிதரு மணியே காமனிற் கட்டழ கினனே

தடமலை நிகர்த்த அரிமுகத் தசுரன் தனதுரம் உருவவேல்
விடுத்தோய் சததள கமல மருவிய வயல்சூழ் சமரமா
நகருறை குகனே. ௧௦

540 அறிவுக் களிறே ருதவித் துணையா யகமெச் சியமுருகா [வா
மறிமிக் கொளிசூழ் சுசிகைக் கொளுவோன் மகிழத் தவழ் புதல்
எறிபற் றியதா ரவளற் கருள்சேர் விமலப் பதமருளாய்
தறியட் டெழுமா தவளக் களிறூய் சமரப் பதியானே. ௧

541 இமயப் பிடிபால் உதவக் கனிவா யிடைவைத் துமிழ்சிறுவா
திமிரத் திரளாம் அசுரக் கொடியார் சிதையத் தொடுமயிலாய்
நிமலச் சுகபா ரணமெற் கினிநீ நிகழ்வுற் றினிதருளாய்
சமரச் சிறைமா மயுரப் பதியாய் சமரப் பதியானே. ௨

542 கடவுட் பிடிகா னவர்நற் கொடிசூழ் கனகக் கிரியனவா
மடமைச் சிறியேன் இடரைக் களைவான் வசனப் பரிபுரதாள்
இடைவைத் தினியாள் நடனச் சிறைமா மயிலுக் கெழில்நிருபா
தடவெற் பழகா தணிகைப் பதியாய் சமரப் பதியானே. ௩

543 நிகழ்குக் குடநீள் விருதுப் பரமா நிமலக் குலமுருகா
புகல்பற் றிடநீ யலதெற் குளதோ புகழ்மிக் குளகுகவேள்
ககனச் சுரர்மா முனிவர்க் குழுமா நிலர்கைக் கணிசரண
தகரப் பரியாய் அயில்வேற் படையாய் சமரப் பதியானே.

544 மனதற் கினிதாம் நினைவிற் படிநான் மயலுற் றிடருறவோ
உனதற் புததாள் பணியப் பெறவோ உரைசிற பரைகுமரா
கனகப் பெருமால் வரைவிற் பரனார் கருதச் செவி புகல்வோய்
சனரைச் சுகவீ டுறவைத் தருள்வோய் சமரப் பதியானே.

545 ஏமலக் குழுவோ டியைபெய்க் கடமே முடுகித் தொடர் வுறவே
சுமைமிக் குறுவோன் இடருற் றனன்மா சுகம்வைத் தெனையினி
கமலப் பதனே கனகப் புயனே கருணைத் திருமுகனே [தாள்
சமரக் கணநா கர்களுக் கிறைவா சமரப் பதியானே. ௬

546 களவிற் களவா னவன்மெச் சுறநீள் கவியைப் பொழிமுகிலே
குளகுத் தகர்மேல் வருசிற் சொருபா குமரப் பெயருடையாய்
இளகத் தயவோர் சிறிதுற் றறியா எனையுட் கருதுதியோ
தவளக் குழலார் நடைகற் றனமார் சமரப் பதியானே. ௭

547 நிலவுச் சடையான் உதவுத் தமனே நிமலைக் கெழில்மகனே
உலகுக் கரசே அமரர்க் கரசே உயிருக் குயிரெனவே



பலசொற் புனைபா வதனிற் புகழே பகர்தற் கினிதருளாய்
சலசத் திருமா னிலகிக் களிகூர் சமரப் பதியானே. ௮

548 குவளைக் கணிநூர் குயநச் சியமா கொடுமைச் சிறியவனேன்
அவலக் கடையே னுனதற் புததாள் அடையக் கருதுதியோ
நவசித் திரகே மொளிசுற் றியமேல் நடனக் களிமயிலோய்
தவளக் கரியூாய் பழனிக் கிரியாய் சமரப் பதியானே. ௯

549 பொருநைக் குலநீள் வரையில் தவமே புரிமெய்க் குறுமுனிபால்
இருளுக் கொருசூ ரியனிற் குருவாய்எதிருற் றருள்புரிவோய்
மருளுற் பவவா ரிதியிற் புகுதா வகையெற் குரைபுகலாய்
தருணிச் சிறுவா வருணக் குமரா சமரப் பதியானே. ௧௦

550 பான்மதி வேணியர் மால்தொழு நாயகர்
பரிவுடன் அருள்யானை
தான்வா வாவென அங்கை விரித்தழை
சகலகலைப்பிள்ளாய்
தேன்மலி சுவையென எங்கும் நிறைந்துள
சிற்சுக வாரியிலே
யான்முழு குறுமொரு காலமு முளதுகொல்
அருள்போ ரூரானே. ௧

551 மூபுரம் எரிகொள வோர்நகை புரிதரு
முக்கணன் மடிமீதே
நூபுரம் ஒலிதர ஆடிய துணையடி
நோன்மை தருஞ்சிறுவா
மாபுர மூவகை மேலெழும் ஒளியிடை
மன்னுவ தென்றடியேன்
ஆர்புரி நூலொளிர் மார்பக வேலவ
அருள்போ ரூரானே. ௨

552 நூல்வகி ரனஇடை மாதுமை மகிழ்வுற
நுவலரு மழலைமொழிப்
பால்வழி ஞானமி பேசிய மூவிரு
பவளத் திருவாயா
மால்வழி விலகிநன் னூல்வழி செலுமுள
மருவுவ லோசிறியேன்
ஆல்வயின் இலைதுயில் வோன்மகிழ் மருமக
அருள்போ ரூரானே. ௩

553 தெய்வப் பிடியுந் திருவுறை மானுந்
தினமுங் களிகூர
மெய்வைத் திடுபே ரருள்நிழல் மொய்த்தொளிர்
மேதகு கற்பகமே
உய்வுற் றிடுகதி பெற்றுன் அடிக்கண்
உவப்புற லென்றடியேன்
ஐவர்க் குஞ்சற் காரணன் மருகா
அருள்போ ரூரானே.

554 வேலுஞ் சேவலும் விரிசிறை மயிலும்
வெற்றிசெய் தகரேறும்
நாலும் மறைபுக ழக்கைக் கொண்டருள்
நாயக தூயவனே
ஏலுங் காமக் கடலின் கரைகண்
டேறுவ தென்றடியேன்
ஆலுங் கோலுந் துயில்வோன் மருகா
அருள்போ ரூரானே.

555 மலைய முனிக்கக மதனில் மறைபொருள்
வழுவற வைத்தபிரான்
கலைகள் தமக்குள பொருள்கள் விரித்துரை
கசடறு மெய்ப்புலவா
நிலையில் பவக்கடல் சுவற எனக்கொரு
நிலைமை யளித்திகொலோ
அலையில் சுதைக்கட லெனநிறை சிற்பர
அருள்போ ரூரானே.

556 பாவரு தொடையணி வோருள நாடிய
பாரிடை நீடுறவே
ஓவற வுதவுறும் ஆறிரு கரமுள
உத்தம சிற்சொருபா
நாவுடன் மனமிவை யாலுனை வந்தனை
நாயடி யேன்செயவே
ஆவரு வோன்மக னாகிய வேலவ,
அருள்போ ரூரானே.

557 மூதொளி நீடிய கேயூ ரப்பணி
முந்நான் குறுதோளா
சீதள வான்மதி போலுறு மாறு
சிறந்த முகத்தினனே



பாதகன் என்மனன் நின்னடி மன்னுறு
பான்மையில் நண்ணுறுமோ
ஆதர வேயென தாருயிர் நாயக
அருள்போ ரூரானே.

558 பணிபவ ருளமுறும் இருளற வொளிதரு
பரவறி வுளரவியே
தணிமலை முதலிய மலைதொறும் நிலவிய
சதிபதி பணிபதனே
கணிதமில் பிழைசெய் கொடியனை நிலைபெறு
கதிபெற நினைதிகொலோ
அணிதிகழ் திருவுர அயிலவ மயிலவ
அருள்போ ரூரானே.

559 மின்திக ழும்புய லேமறை மீது
விளங்குறு செம்பொருளே
என்றுனை யேயடி யாரக கஞ்சம்
இருந்த பெருந்தேனே
நன்குறு பேரறி வேயரு ளேசுக
மேயென நாயடியேன்
அன்பொடு நின்பத தாமரை நாடுற
அருள்போ ரூரானே.

560 பகலுடன் இரவும் இடையினும் உனது
பாதப்பே ரொளியிடைப் புகுந்து
சகலகே வலத்தின் தாக்கற அடியேன்
தகுசுகத் திருக்குநா ளுளதோ
ககனர்தம் அரசே கதிதரு தருவே
காரணக் கருணைவா ரிதியே
மிகுகுணக் குன்றே யதிவளப் போரூர்
வீறிவாழ் ஆறுமா முகனே.

561 உனதுதாய் உலக சராசர மெவையும்
ஒருங்குடன் பூத்தவள் உந்தை
கனபரி புரண சுகத்தன்நின் தமையன்
காரிய முதல்வன்நின் மாமன்
வனசனா தியர்கள் பணிபதன் இவர்கள்
வளனெலாம் உனக்குரித் திதனால்
வினவுசெல் வத்துட் செல்வன்நீ போரூர்
வீறிவாழ் ஆறுமா முகனே.

562 அறுவகைத் தாயர் குடமுலைச் சுரப்ப
அம்பிகை திருவுளங் களிப்ப
மறுவறு கங்கைத் தாய்நனி வாழ்த்தி
வடிவெலாங் குளிர்ந்துபூ ரிப்ப
நறைகமழ் வனச மாமிகண் களிப்ப
நடந்தவ ரெதிர்வரு குருந்தே
விறலுறு நிலைவந் நடைந்தனன் போரூர்
வீறிவாழ் ஆறுமா முகனே.

563 மண்ணவர் பணிய இம்மையில் இன்பும்
வானவர் பணிந்திட மறுமை
நண்ணுறும் இன்பும் முனிவரர் அடியர்
நனிதொழப் பரகதி யின்பும்
பண்ணுறு முனது பாதம் ஈதரும்இப்
பதந்தொழு வாரிடர் கடந்தோர்
விண்ணகர் வளம்போல் நண்ணுறும் போரூர்
வீறிவாழ் ஆறுமா முகனே.

564 உரையுணர் விறந்த கரையறும் இன்பம்
ஓரரைக் கடிகைமிக் குயர்ந்த
அருளொடுங் காட்டி மறைத்தனை நாயேற்
கச்சுக மென்றளித் தருள்வாய்
சுரர்களுக் கிடர்செய் சூர்ப்பகை கடிந்து
சுடர்விடு சோதிவேற் கரசே
விரகனே குகனே மெய்யனே போரூர்
வீறிவாழ் ஆறுமா முகனே.

565 ஓதியும் உணர்ந்தும் பிறர்தமக் குரைத்தும்
உளமுதல் தானடங் காத
பேதையிற் பேதை யாரில ரென்ற
பெரியவர் சொற்கிலக் கானேன்
கோதறும் ஆறு கொடுமுடிப் பவளக்
குன்றமொத் திலகுகட் டழகா
வேதகோ டங்கள் முழங்கிய போரூர்
வீறிவாழ் ஆறுமா முகனே.

566 அரணியைக் கடைவோன் கனலெழு சமயத்
தங்கையே மாறிவிட் டாங்குப்
புரணபே ரின்பம் எழுதரு வாயிற்
பொருந்துநின் பதமறந் திளைத்தேன்



மரணவுற் பவத்தின் மறுகுரு தெனைநின்
மலர்ப்பதஞ் சேர்த்திட நினையாய்
விரிகதி ரெறிக்கும் வேலனே போரூர்
வீறிவாழ் ஆறுமா முகனே. எ

567 கடைபடு முலகப் பொய்யினை மெய்யாக்
கருதினேன் கானல்நீ ரென்று
மடமையாற் கருது மவனென இனியுன்
மலர்ப்பதச் சுகத்தையென் றடைவேன்
தடவரைக் குறவர் குலத்தெழு வல்லி
சாதகக் கொடிபடர் தருவே
மிடலெழு தோகைப் பாகனே போரூர்
வீறிவாழ் ஆறுமா முகனே.

568 எங்குமென் சொரூப சச்சிதா னந்த
இலகொளி யிருந்திடும் அதனுள்
தங்குபல் பொருள்கள் கானலிற் சலம்போ
ரூமுறும் வேறிலை யென்றே
பொங்கருட் குருவாய் வந்துநீ யளித்தும்
புலையனேன் மயங்குறு கின்றேன்
வெங்கதிர் விலக்குந் தண்டலைப் போரூர்
வீறிவாழ் ஆறுமா முகனே.

569 மலவிருள் துரக்கும் ஞானசூ ரியனாய்
வந்தநின் மகிமையை யறியாப்
புலையரிற் கடையேன் எனினுமென் பிழையைப்
பொறுப்பதுன் பொன்னருட் கியல்பாங்
கலைமுகம் புகழுங் களிற்றுறு துணைவா
கடவுள்யா னைக்குநற் கணவா
விலகிவில் லுமிழும் வேலவா போரூர்
வீறிவாழ் ஆறுமா முகனே. கo

570 அருட்குழை தழைத்தைங் கரமலர் மலர்ந்தோர்
ஆடகப் பொருப்பிடை யுரிஞ்சித்
தெருள்தரு கோட்டுக் கற்பகத் திளவல்
ஆகிய மாதவத் தரசே
மாநுள் திரைப் பிறவி வாரிதி மூழ்கா
வகையெனைக் காத்தளித் தருளாய்
உருள் திகழ் இரதத் தெருப்புனை போரூர்
உத்தமா சத்திவே லவனே.

110006

571 நவமணி குயின்ற பருப்பத மனைய
நகைமயிற் பரியிவர்ந் துளத்துக்
கவலைகள் தவிர்த்திங் கடியரைக் காக்குங்
கடவுளே கடவுளர் கோவே
சினமென எவையும் அருட்குரு வாகிச்
செப்பிய வாறெனக் குளத்தும்
உவமையி லதனைக் காட்டுதி போரூர்
உத்தமா சத்திவே லவனே.

572 நல்லவ ரெனினீ புரியருட் குள்ள
நைந்துநெக் குருகுவ ரன்பாய்ப்
புல்லியேன் அதனின் மகிமையை யறியாப்
புலையனேன் உய்யுநாள் உளதோ
வெல்லுமும் மதத்து வாரணம் உரித்து
வீட்டிய முக்கணன் புதல்வா
ஒல்லைவாந் தகரப் பரியனே போரூர்
உத்தமா சத்திவே லவனே.

573 காமவேள் கணையால் உளங்கலங் காதுன்
கனைகழற் கமலத்தா ளிருந்த
சேமஆ னந்த வாரிதி படிந்து
சிறியனேன் வாழுநாள் உளதோ
பூமணம் வீசுங் கூந்தலங் கவுரி
பொருப்பன தனத்தமு துண்டோய்
ஓமெனும் பதத்தின் அருத்தமே போரூர்
உத்தமா சத்திவே லவனே.

574 நினதருட் பாத நினைதொறும் அடியேன்
நினைப்பொடு மாறுகொண் டெழுந்த
மனஅழுக் கதனால் வாடினே னதனை
மாற்றிநின் னருள் சுரந் தளிப்பாய்
கனைகடல் குமுறக் குலவரை யதிரக்
கனவொலி கூவுசே வலனே
உனலருந் தவத்தோர் பரவிய போரூர்
உத்தமா சத்திவே லவனே.

575 வாக்கொடு மனமுங் காயமார் தொழிலும்
மன்னுறு நின்னருட் காக்குந்
தேக்குறும் அன்பர் போலலாச் சிறியேன்
செய்பிழை பொறுத்தினி தளிப்பாய்



ஆக்கமெய்ஞ் ஞானங் குறுமுனிக் குதவும்
அருட்குர வாசிவ யோக
ஊக்கமே தழைத்தோர் போற்றிய போரூர்
உத்தமா சத்திவே லவனே.

576 மகவினைத் தாதை யினிமைகள் காட்டி
மடித்தலத் திருத்துதல் போல
அகமதி லின்பு காட்டிநின் தாள்கீழ்
அடியனை யசைவற இருத்தாய்
ககனவா னோர்க ளெனும்பயிர் தழைப்பக்
கடியசூர்க் களைகளைந் தருள்வோய்
உகலரு வளங்கள் திகழ்திருப் போரூர்
உத்தமா சத்திவே லவனே.

577 பித்தனே னெனினும் பேயனே னெனினும்
பிழைபுரி பாவியே னெனினும்
அத்தனே யெனைநீ யளிக்குதல் கடனே
அறனெலாம் ஒருருக் கொண்டோய்
கொத்தலர் நீபத் தொடையணி மார்பா
குமரநா யகவெனக் குறுதாய்
ஒத்தவா முத்தர் பற்றிய போரூர்
உத்தமா சத்திவே லவனே.

578 கன்னியர் இருவர் இருமருங் குறநற்
கனகமால் வரையிருந் தனநின்
சந்நிதி கண்டோர் பவத்துயர் கடந்து
தருசுக வாரிதி படிவார்
நின்னடி யவனென் றுலகவர் புகல
நிகழ்த்தினை யினியெனை விடுக்கேல்
உன்னத சிகரி மன்னிய போரூர்
உத்தமா சத்திவே லவனே.

579 பயனில மொழிந்தும் பலதொழில் புரிந்தும்
பரவையில் திரையென நினைந்துங்
கயவரிற் பொழுது போக்குறு துனது
கமலத்தாள் நினையவே தருவாய்
இயலிசை யருண கிரிப்பெயர் நாதன்
இயம்புபா மாலைசேர் புயத்தாய்
உயுநெறி யடியேற் குதவிய போரூர்
உத்தமா சத்திவே லவனே.

580 கமலநான் முகவன் ஓதிய வேதக்
கனமுக வுரைதினம் புகழும்
விமலமெய்ஞ் ஞானக் களிற்றினுக் கிளைய
வீறுபன் னிருபுயத் தழகா
திமிரவஞ் ஞானக் களிற்றினைத் துணித்தென்
சிந்தையிற் புகுந்தருள் புரியாய்
தமரநீர் ததும்பும் வயல்செறி போரூர்ச்
சரவணா பிரணவப் பொருளே.

581 இராவொடு பகலும் எழிலுறு சமாதி
இயல்பொடு கூடிவீட் டிருந்து
விராவுபே ரின்ப அமுதயின் றடியேன்
வினைத்துயர் மறக்குநா ளுளதோ
அராவணி வேணித் துகிர்க்கொடி படரும்
அருட்கடற் பிறந்தவா ரமுதே
தராதல முழுதும் புகழ்திருப் போரூர்ச்
சரவணா பிரணவப் பொருளே.

582 ஒருபொரு ளிடத்தும் விழைவொடு வெகுளி
உருதெலாம் சமமதாக் கண்டுன்
திருவடி நிழற்கீழ் அசைவற இருந்து
சிறியனேன் என்றினிப் பறுவேன்
அருள்நனி சுரக்கும் பனிமலை பிறந்த
அங்கொடி தந்தசெங் கனியே
தருணமா ருத முருகனே போரூர்ச்
சரவணா பிரணவப் பொருளே.

583 கலைபுகழ்ந் தோதுங் கற்பெலாம் நிறைந்த
கன்னியர் இருவர்பால் மகிழ
நிலைபெறு மயூரப் பரிமிசைத் தோன்றும்
நிறைபரி பூரண சுகமே
இலையுள தென்னும் இரண்டுமத் தியத்தின்
எழுசொரூ பத்தெனை யிருத்தாய்
தலைமைகொள் தவத்தோர் நிலவிய போரூர்ச்
சரவணா பிரணவப் பொருளே.

584 இருளைவிட் டெனைநீ யெடுத்தநாள் முதலா
இன்றுகா றுறுபிறப் பிறப்பில்
உருளெனச் சுழன்றேன் இங்கினி யமையும்
உயர்பரி பூரணத் திருத்தாய்
மருமலி நீபத் தார்புனை மார்பா
வானவர் சேவித பாதா
தருமலி கரத்தோர் நிறைதிருப் போரூர்ச்
சரவணா பிரணவப் பொருளே.



585 மனவழுக் கனைத்தும் மாறிநின் மலமாம்
மனத்தனாய் நசைசின மறந்து
கனபரிபுரண சுகக்கடல் படியுங்
காலமுஞ் சிறியனேற் குளதோ
உனலரும் பொதியத் தறுகுறு முனிவன்
உளமகிழ்ந் திறைஞ்சுபொற் சரணா
தனபதி அளகை வளனுறு போரூர்ச்
சரவணா பிரணவப் பொருளே.

586 யாவரும் அறியா அறிவெலாம் அறிவுக்
கறிவதா யிருந்தறி வித்து
மேவருட் குருவாய் வந்தறி வளித்தும்
வினையனேன் தெளிந்திலன் அந்தோ
சேவலந் துவசம் பிடித்தசெங் கரனே
திகழ்தரு சடானனக் களிறே
தாவிய தகரப் பரியனே போரூர்ச்
சரவணா பிரணவப் பொருளே.

587 அத்தன்மேல் வித்தை மகற்குப தேசித்
தஃதினை வருவித்தல் போலும்
பித்தனுக் கொருவன் மருந்தினை யளித்துப்
பிறங்குணர் வளிக்குதல் போலும்
நித்தமென் மனத்தைத் திருத்தியாண் டளித்த
நினதரு ளேதெனப் புகல்கேன்
தத்தைகள் கொஞ்சுஞ் சோலைசூழ் போரூர்ச்
சரவணா பிரணவப் பொருளே.

588 நெஞ்சகத் துள்ளும் புறனுமாய் நிறைந்த
நின்பரி பூரணம் நினைந்து
வஞ்சகச் சகப்பொய் யனைத்தையும் மறந்து
வாழுநாள் எந்தநாள் அடியேன்
செஞ்சடைக் குழகன் அஞ்செவிக் கமுதாத்
திகழ்மறை முடிவினைப் புகன்றோய்
தஞ்செனப் பணிவோர்க் கருள்தரும் போரூர்ச்
சரவணா பிரணவப் பொருளே.

589 கணப்பொழு தெனினும் மறக்கிலா தென்றுங்
கனபரிபூரண அறிவிற்
பிணக்குறும் மனமு மவித்தையுங் கடந்து
பேதையேன் கலக்குநாள் உளதோ
மணத்தசெங் கழுநீர் மாலைதாழ் புயத்து
வள்ளலே யுள்ளுவோர்க் கமுதே
தணப்பருங் கருணை தருந்திருப் போரூர்ச்
சரவணை பிரணவப் பொருளே.

590 திடம்பெறு கலைகள் அனைத்துநின் றேத்துஞ்
செய்யதாள் பூமிசை பொருந்த
நடந்துவந் தருளாற் குமாரசற் குருவாய்
நாயினேன் இருள்தெறு சுடரே
அடர்ந்திடு பிணியா லுனதுமெய் யடியான்
அசைவுறு தளித்தருள் புரிவாய்
தடங்கரி திரியுஞ் சந்தனப் பொழில்சூழ்
சமரமா புரியுறை குகனே.

591 பந்தமு டறுத்துப் பாயிருள் சீக்கும்
பரிதியில் இலகுநின் பதமென்
சிந்தையிற் குடியா விருத்தியாண் டருளுஞ்
சிற்சுகக் கருணைமா கடலே
முந்துறு பிணியால் நொந்துன தடியான்
முடிவுறு தினிதருள் புரியாய்
தந்திகள் திரியுஞ் சந்தனப் பொழில்சூழ்
சமரமா புரியுறை குகனே.

592 வடங்கிடந் தொளிரும் வாரணக் கோட்டின்
வளர்முலை வள்ளிநா யகியுன்
இடம்பெற வயங்கு புயங்கள் பன்னிரண்டின்
இலகவுள் மகிழ்மணிக் குன்றே
விடந்தெறு கருடப் பார்வைபோ லுனது
மெய்யடி யவன்பிணி தவிர்ப்பாய்
தடம்புயல் துயிலுஞ் சந்தனப் பொழில்சூழ்
சமரமா புரியுறை குகனே.

593 சூர்குலத் திமிரம் முழுவதும் இரியச்
சுடர்விடு சோதிவே லுயர்த்த
வீரவம் புயத்தாய் மாரவே ளழகும்
வெற்றிகொள் உத்தம வடிவா



சீர்பெறு முனது மெய்யடி யவனைத்
தெறுபிணி யறவுளத் தடைப்பாய்
தார்செறி பொழில்வாய்க் கார்துளி சிதறுஞ்
சமரமா புரியுறை குகனே.

594 அரையன்நூல் முறையே புரியினும் அரையன்
அருள்சுதன் தனதுளப் படியே
விரைவுடன் புரியும் அஃதுபோல் ஈசன்
வினைவழி புரியினிற் போற்றுந்
திருவடி யவரைத் தீவினை தெருது
தீர்க்கநிற் கேவருங் கண்டாய்
தருமலி புளினத் திளவனை தவழுஞ்
சமரமா புரியுறை குகனே.

595 ஆலமார் களனும் நீலமே னியனும்
ஐங்கரன் அம்பிகை அமரர்
சீலமார் முனிவ ரியாவருங் களிக்கச்
சிகிப்பரி நடத்துசே வலனே
ஞாலமீ துனது சீரடி யவனை
நலிதரு பிணியற நினையாய்
தாலநீள் பாளை கட்குடஞ் சுமக்குஞ்
சமரமா புரியுறை குகனே.

596 வடகலைக் கடலுந் தென்கலைக் கடலும்
வருதிரைக் கடலுமுண் டிருந்த
திடமுறு முனிவன் இடர்க்கட லகற்றச்
சிற்சுகக் கடலளித் தவனே
அடியவர் துயர முறின்இளங் கன்றுக்
கானென வருவதுன் னருளாந்
தடமலர்ப் பிரசஞ் சங்கின்வா யொழுகுஞ்
சமரமா புரியுறை குகனே.

597 புவனம் ஈரேழும் பூத்திடு மதுரப்
பொற்பிடி நற்றனத் தீம்பால்
நவமணம் ஆறு குமுதவாய் வீசும்
நன்குறு மொண்சிறு களிறே
திவமுறு கதிர்முன் இருளென வுனது
சீரடி யவன்பிணி தவிர்ப்பாய்
தவமுனி வருக்குக் கரிகனி யளிக்குஞ்
சமரமா புரியுறை குகனே.